விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபத்து நான்கு

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 01 புதன்கிழமை (14.03.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 086

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து!

## தெல்லிப்பழைக் கிணற்றில் பெருமளவு வெடிகுண்டுகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில், மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட தெல்லிப்பழை தந்தை செல்வாபுரம் பகுதியில் நேற்றுக் காலை கிணறு துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தபோது பெருமளவான வெடிகுண்டுகள் மீட்கப்பட்டுள்ளது.

நீண்டகாலம் உயர்பாதுகாப்பு வலயமாக வைக்கப்பட்டிருந்த இந்தப் பகுதியில் அண்மையில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர். இந்த நிலையில் மணல் போடப்பட்டு மூடப்பட்டிருந்த கிணற்றை மீண்டும் பாவிப்பதற்கான முயற்சியில் அப்பிரதேச மக்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது கிணற்றிலிருந்து ஒரு பொலித்தீன் பையில் கட்டப்பட்ட நிலையில் பெருமளவு வெடிகுண்டுகள், மற்றும் கைக்குண்டுகள் ஆகியன மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக பிரதேச மக்கள் படையினருக்கும் கண்ணி வெடியகற்றும் நிறுவனங்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளனர். (ந)

# பிரபாகரன் இருப்பிடத்தை அறிந்த பின்னரே பாலச்சந்திரன் கொல்லப்பட்டுள்ளார்!

## சனல் 4 ஆவணப்படத் தயாரிப்பாளர் தெரிவிப்பு



(லண்டன்)

விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இருப்பிடம் குறித்து விசாரித்து தெரிந்து கொண்ட பின்னரே அவரது மகன் பாலச்சந்திரனை இலங்கை இராணுவம் கொடூரமாக கொலை செய்துள்ளது. இத்தகவலை இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த ஓர் உயர் அதிகாரியே தெரிவித்துள்ளதாக சனல் 4 நிறுவனத்தின் கலும் மெக்காரே தெரிவித்துள்ளார்.


இலங்கையின் போர்க்களம் என்ற பெயரிலான ஓர் ஆவணப்படத்தை வெளியிட்டு இலங்கையின் இனவெறிப் படுகொலையின் பயங்கர முகத்தை உலக சமுதாயத்துக்கு அம்பலப்படுத்திய மெக்காரே தற்போது இரண்டாவது ஆவணப்படத்தையும் தயாரித்துள்ளார்.

இதில் பிரபாகரனின் இளைய மகனான 12 வயதான பாலச்சந்திரனை கொடூரமாக கொலை செய்த காட்சி பதிவாகியுள்ளது. இந்த வீடியோ நாளை காலை வெளியாகிறது.

இந் நிலையில் கொலை செய்வதற்கு முன்பு பாலச்சந்திரனை கொடூரமான சூழலில் விசாரணை (24ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு எதிரான தீர்மானம் இந்தியா ஒருபோதும் ஆதரிக்காது

## முகர்ஜி அறிவிப்பு - பாராளுமன்றில் அமளி



(டெல்லி)

ஒரு குறிப்பிட்ட நாட்டுக்கு எதிராக, எவ்வித தீர்மானம் கொண்டு வரப்பட்டாலும் அதனை நாம் ஆதரிக்கக் கூடாது என இந்திய மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்ததையடுத்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது. சபையின் அமர்வும் நண்பகல் வரை இடை நிறுத்தப்பட்டன. (24ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க இராஜதந்திரி இன்று இலங்கை வருகிறார்

(கொழும்பு)

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் உயர்மட்ட இராஜதந்திரி அட்டுல் கெஷாப் அவசர விஜயமொன்றை மேற்கொண்டு இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா முயற்சிகளை மேற்கொண்டுள்ள நிலையில் இவரது இலங்கைக்கான விஜயம் இடம்பெறவுள்ளது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய (23ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் சட்டவிரோத தடுத்துவைப்பு சர்வதேச மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

(ஜெனிவா)

இலங்கையில் நூற்றுக்கணக்கானவர்கள் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை குற்றம்சுமத்தியுள்ளது.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தக்கூடிய அபாயம் காணப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை 67 பக்க அறிக்கையை வெளியிட்டுள்ளது.

சட்டவிரோத கைதுகள் மற்றும் காணாமல் போதல்கள் போன்ற சம்பவங்கள் இலங்கையில் வழமையானவை. இந்த மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படுவதுமில்லை எனவும் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதுமில்லை எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பாரியளவில் குற்றச்செயல்களில் ஈடுபட்டனர் எதிராக விமர்சனம் செய்வோரை (02ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் மகனை படையினர் சுடவில்லை

### மறுக்கிறார் இந்தியாவுக்கான தூதர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரனின் மார்பில் படையினர் ஐந்து முறை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்துள்ளனர். இது தொடர்பான ஆணித்தரமான ஆதாரம் தற்போது வெளியாகவுள்ள நிலையில் அப்படியெல்லாம் கொல்லவில்லை என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் கூறியுள்ளார்.

பிரபாகரனின் இளைய மகன் பாலச் (02ஆம் பக்கம் பார்க்க)

## மேரி கொல்வினின் இறுதி நிகழ்வில் நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர்

(நியூயோர்க்)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்களுக்கு சாட்சியாக இருந்தவரும், சிரியாவில் செய்தி சேகரிப்பின் போது அந்த நாட்டு படைத்தரப்பினரால் படுகொலை செய்யப்பட்டவருமான ஊடகவியலாளர் மேரி கொல்வின் அம்மையாரின் இறுதி நிகழ்வு நேற்று முன்தினம் அமெரிக்காவில் நடைபெற்றுள்ளது.

இந் நிகழ்வில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் வி.உருத்திரகுமாரன் கலந்து கொண்டு மேரி கொல்வின் அம்மையாருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

அத்துடன், மேரி கொல்வின் அவர்களின் குடும்பத் (24ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் பிரேரணையில் போதிய உள்ளடக்கம் இல்லை

### மொஹான் பீரிஸ் குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணை போதியளவு உள்ளடக்கத்தினை கொண்டிக்கவில்லையென அரசாங்கம் தெரிவித்துள்ளது. இப் பிரேரணையின் ஊடாக முன்னெடுக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ள விடயங்களில் (02ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கைப் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன பொறிமுறை அவசியம்

## வலியுறுத்தினார் லூயிஸ் ஆர்பர் அம்மையார்

இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை மையப்படுத்தி அமெரிக்காவினால் பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஐ.நா.நிபுணர் குழுவின் பரிந்துரைகளை முன்னிறுத்தி சர்வதேச சுயாதீன விசாரணைக்கான குரல்கள் வலுவடைந்து வருகின்றன.

இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பில்,ஒரு சர்வதேச சுயாதீன விசாரணைக்கான பொறிமுறையொன்றினை உருவாக்க வேண்டிய பாரிய பொறுப்பு, சர்வதேச சமூகத்திற்கு உள்ளதென ஐ.நா.மனித உரிமைச் சபையின் முன்னாள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் தெரிவித்துள்ளார்.

அவர் இக்கோரிக்கையை ஐ.நா. மனித உரிமை சபைக்கு முன்வைத்துள்ளார்.

ஜெனிவாவில் இடம்பெற்ற மனித உரிமைகளுக்கான சர்வதேச திரைப்பட விழாவில், இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பிலான சனல் 4 தொலைக்காட்சியின் ஆவணப் பட திரையிடலின் போதே அவர் இக்கருத்தினை முன்வைத்துள்ளார்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்ட சர்வதேச சட்டவிதிகளுக்கு புறம்பாக மேற் கொள்ளப்பட்ட போர் குற்றங்கள் ; மானிடத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ; இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழு காத்திரமான கவனிப்பை கொண்டிருக்கவில்லை என குறிப்பிட்டுள்ள லூயிஸ் ஆர்பர் அம்மையார் அவர்கள், ஒரு நம்பகமான செயற்திறனை நல்லிணக்க ஆணைக் குழு கொண்டிருக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

போர் முடிபுக்கு வந்து காலங்கடந்துள்ள நிலையில், யுத்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து,இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூற தவறியுள்ளதோடு, காத்திரமான செயற்பாடுகளை இலங்கை செய்திராத நிலையில், குற்றச்சாட்டுக்கள் குறித்தான ஒரு சுயாதீன விசாரணைப் பொறிமுறையொன்றினை உருவாக்க வேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்துக்கு உள்ளதென தெரிவித்துள் ளார்.

ஐ.நா. மனித உரிமைச் சபையானது ; இவ்விவகாரத்தில் முன்னின்று கடமைகளை ஆற்ற வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். போரின் இறுதியில் இடம்பெற்ற கொடும் சம்பவங்களுக் கான நீதி கிடைக்காத வரை ; இலங்கை அரசாங்கம் கூறுகின்ற இன நல்லிணக்கம், சமாதானம் என்பன தமிழர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றெனவும் அவர் தெரிவித்துள் ளார்.

சர்வதேச விசாரணை மன்றத்தை இலங்கை ஏற்றுக் கொள் ளாத நிலையில், சர்வதேச அரங்கில் இடம்பெறும் இத்தகைய மானிடத்துக்கு எதிரான குற்றங்களுக்கான விசாரணையை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ள லூயிஸ் ஆர்பர் அம்மையார் அவர்கள், அதற்கு முன்னர் இந்த உண்மைகள் உலகின் முன் நிறுவப்பட வேண்டும் என தெரிவித்துக் கொண்டார். (ந-8; 11)

## நல்லூர் கோட்ட அதிபர்களுக்கு

நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்.கல்வி வலயத்தில் உள்ள நல்லூர்க் கோட்ட அலுவலக மண்டபத்தில் இடம்பெறுமெனவும் இதில் அதிபர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறும் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா கேட்டுள்ளார். (ந)

## பிரபாகரனின் மகனை...

சந்திரனை கொடூரமாக கொலை செய்தது தொடர்பான ஆதாரத்தை சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம் இன்று வெளியிடவுள்ளது.

அதில் பாலச்சந்திரனை மிக நெருக்கத்தில் வைத்து படையினர் ஐந்து முறை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வீடியோ படத்தைக் காண உலக மக்கள் பதைபதைப்புடன் காத்துள்ளனர்.

ஆனால், இந்த வீடியோ காட்சிகளை இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் மறுத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், இந்த வீடியோ காட்சிகளும், அதில் உள்ளதாகக் கூறப்படுவதும் உண்மையானதாக இருக்க வாய்ப்பில்லை. அவை இட்டுக்கட்டியவை. இதை எங்களிடம் முன்பே கொடுத்து அவர்கள் உறுதிப்படுத்தவில்லை. இது பத்திரிகைக் தர்மம் அல்ல. இது உள்நோக்கம் கொண்ட வீடியோ.

பாலச்சந்திரன் இறந்திருக்கலாம். ஆனால் அவன் கொல்லப்பட்டான் என்பதற்கு எங்களிடம் ஆதாரம் இல்லை. இந்தப் புகாரை மறுக்கின்றோம்.

போரின்போது 8000 பேர் இறந்தனர். அவர்களில் பலர் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர். அவர்கள் போரில் தான் இறந்தனர், கொலை செய்யப்படவில்லை.

தற்போது வெளியாகியுள்ள செய்தி இலங்கையின் நன்மதிப்பைக் கெடுக்கும் முயற்சியாகும் என்றார் காரியவசம். (ந-8,11)

# கனரக வாகனம் மோதியதில் மின்கம்பம் உடைந்து விழுந்தது

### ஓட்டுமடம் சந்தியில் நடந்தது

கனரக வாகனம் மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் மின்கம்பம் துண்டு துண்டாக உடைந்து வீதியில் விழுந்ததோடு வீதிப் போக்குவரத்தும் பல மணிநேரம் தடைப்பட்டது.

இச் சம்பவம் நேற்று மாலை 4.45 மணியளவில் யாழ்ப்பாணம் ஓட்டுமடம் சந்தியில் இடம்பெற்றது.


சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் ஓட்டுமடம் சந்தியில் உள்ள கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு சீமெந்து பொதிகளை கொண்டு வந்து இறக்கிவிட்டு திரும்பிச் செல்ல முற்பட்ட போது இந்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சாரதி வாகனத்தை பின்நோக்கி எடுத்தபோதே மின்கம்பத்துடன் வாகனம் மோதியதாக கூறப்படுகிறது.

மின்கம்பம் பல துண்டாக உடைந்து வீதியில் விழுந்ததோடு மின் இணைப்புக் கம்பிகளும் வீதியின் குறுக்கே இடையூறு ஏற்படுத்தும் வகையில் காணப்பட்டன.

அத்தோடு குறித்த கனரக வாகனம் ஏனைய வாகனங்களும் செல்ல முடியாவாறு வீதியை இடை மறித்து நின்றது.



மின்சாரம் தடைப்பட்டு இருந்த தருணம் இந்த விபத்து ஏற்பட்டதனால் பலரின் உயிர் காப்பாற்றப்பட்டதாக அப்பகுதியில் கூடிய மக்கள் பேசிக் கொண்டனர்.

இது தவிர மின்கம்பம் பலவீனமானதாக இருந்ததனால் தான் இவ்வாறு உடைந்து கீழே விழுந்தது எனவும் அப்பகுதியில் நின்றவர்கள் பேசிக் கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-4,6)

## இலங்கையில் சட்ட விரோ...

கைது செய்தல், படுகொலைகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களில் புலிகள் ஈடுபட்டதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளது.

இவ்வாறான குற்றச்செயல்களின் மூலம் இலங்கை அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட உரிமை மீறல்களை நியாயப்படுத்த முடியாது என சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் சாம் சப்பாரி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ள சந்தர்ப்பத்தில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் சட்டவிரோத கைதுகள் தொடர்பில் பாரிய மாற்றங்கள் ஏற்படவில்லை.

அரசாங்கத்தை விமர்சனம் செய்வோர் தொடர்ந்தும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு அரசாங்கம் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதனை ஐக்கிய நாடுகள் அமைப்பு வலியுறுத்த வேண்டும் என சப்பாரி தெரிவித்துள்ளார். (ந-8,11)

## அமெரிக்காவின் பிரேரணை...

பல அரசாங்கத்தினால் தற்போது முன்னெடுக்கப்படுவதாக அமைச்சரவையின் சிரேஷ்ட சட்ட ஆலோசகரும் முன்னாள் சட்டமா அதிபருமான மொஹான் பீரிஸ் கூறியுள்ளார்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடை முறைப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பிரேரணைகளின் ஊடாக நாட்டின் மனித உரிமைகளைப் பாதுகாப்பது, தொடர்பில் எந்த வொரு ஒத்துழைப்பும் கிடைக்காது.

அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை அடிப்படையற்ற தகவல்களைக் கொண்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் சில இலத்தின் அமெரிக்க நாடுகளும், சில ஆபிரிக்க நாடுகளும் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக செயற்படுவதாக மொஹான் பீரிஸ் விசனம் வெளியிட்டுள்ளார்.

இப் பிரேரணை தொடர்பிலான விடயங்களை தெளிவுபடுத்துவதற்காக இலங்கையின் பிரதிநிதிகள் குழுவொன்று மீண்டும் ஜெனிவாவுக்கு விஜயம் செய்யவுள்ளது.

இந்த பிரதிநிதிகள் குழுவில் அமைச்சர்களான மகிந்த சமர சிங்க, ஜி.எல். பீரிஸ், நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)


EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)




கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான்
ஆலய பங்குனி உத்தர பொங்கல் (05.04.2012)
விழாவின் போது வாணியம் மேற்கொள்ளும் வாணிபர்
களுக்கான நில ஏல விற்பனை அறிவித்தல்

நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா எதிர்வரும் 05.04.2012 வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. விழாவின் போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான நில ஏல விற்பனை எதிர்வரும் 25.03.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

இவ்வண்ணம்
ஆலய பரிபாலன சபை.



YAALH ENGLISH ACADEMY
வழங்கும்
பிரயோகமுறை ஆங்கிலக் கற்கைநெறி
'ENGLISH IN ACTION'
"கற்க. கற்பவை கற்க. கற்பவை, கசடறக் கற்க."
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்/ தொடர்பு : 077 3212 711
(7680)



யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
ஆண்டுப் பொதுக்கூட்டம் 25.03.2012

எதிர்வரும் 25.03.2012 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் தலைவர் திரு.வே. ஞானகாந்தன் அவர்களது தலைமையில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரது புதிய நிர்வாக சபைத் தெரிவும், யாழ் கல்வி வலயத்தின் முறைசாரா கல்விப் பிரிவினரால் பெற்றோருக்கான கல்வி விழிப்பூட்டல் தொடர்பான நிகழ்வும் இடம்பெறவுள்ளது. பெற்றோர், பாதுகாவலர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/ கனகரத்தினம் ம.ம.வி
(C-6079)



கண்ணீர் அஞ்சலி
அமரர் மயிலு சண்முகம்

எமது பாடசாலையின் ஆசிரியர் செபமாலை குருசுமுத்து அவர்களின் அன்பு மாமனார் மயிலு சண்முகம் அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்
(7698)

# இன்று ஒரு தகவல்

## புத்தரும்–ஒரு கொலைகாரனும்

புத்தர் வாழ்ந்த காலத்திலே ஒரு பயங்கரமான கொலைகாரன் இருந்ததாகக் கூறப்படுகிறது.

கொலை, கொள்ளை இப்படி அவன் ஏகப்பட்ட பாவங்களைச் செய்தவன்.

அவனுக்கு திடீரென்று ஒருநாள் ஒரு ஆசை.என்ன ஆசை தெரியுமா?

புத்தரைப் பார்க்க வேண்டும். இதுதான் அவன் ஆசை. இருந்தாலும் எப்படி பார்க்கிறது?

இவரைப்பற்றி எல்லோருக்கும் தெரியும். அதனாலே நேரடியாக போய் புத்தரைப் பார்க்கவேண்டுமென்றால் யாரும் அனுமதிக்க மாட்டார்கள். என்ன செய்வது? யோசனை செய்தான்.

யாருக்கும் தெரியாமலே சுவர் ஏறிக்குதித்து மடத்துக்குள்ளே போயிடுவோம் என்று முடிவு செய்தான்.

அதேமாதிரி செய்து விட்டான்.உள்ளே போய் பார்த்தால் யாரையும் காணவில்லை.ஆள் நடமாட்டமே இல்லை. புத்தர் வெளியே போய் இருந்தார். இவன் ஒரு மாதிரியாக அங்கேயும் இங்கேயும் தேடி அலைந்ததில் ஒரு சீடனிடம் மாட்டிக்கொண்டான்.

அவர் என்ன சமாச்சாரம் என்று விசாரித்தார். "ஐயா... நான் திருடுவதற்காக இங்கே வரவில்லை. என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். புத்தரைத்தான் பார்க்க வந்தேன். வாசல் வழியாக வந்தால் விட மாட்டீர்கள். அதனாலே சுவர் ஏறிக்குதித்தேன். எனக்குப் புத்தரைப் பார்க்க வேண்டும்" என்றான்.

உடனே அந்த சீடர் சாரிபுத்ரனிடம் இவனை அழைத்துக் கொண்டு போனார். அவருக்கு மிகவும் ஆச்சரியம்.

"என்னப்பா... எதற்காக இங்கே வந்தாய்?" என்றார்.

"புத்தரைப் பார்ப்பதற்காக வந்தேன்!" என்றான்.

"எதற்காகப் புத்தரைப் பார்க்க வேண்டும்?" என்றார்.

"எனக்கு எல்லாமே வெறுத்துப் போய் விட்டது. எனது பாவங்களில் இருந்து நான் விடுபடவேண்டும். அதற்குப் பிராயச்சித்தமாக சந்நியாசி ஆகிவிடவேண்டும். மக்கள் தொண்டிலேயே தீவிரமாக ஈடுபட வேண்டும்" என்றார்.

அங்கே இருந்தவர்களுக்கு பெரும் ஆச்சரியம்.

"இவன் கொலை, கொள்ளை ஆகிய நிறையப் பாவங்கள் செய்தவன். சந்நியாசி ஆவதற்குரிய தகுதி இவனுக்கு உண்டா? இப்படியாக சந்தேகம் வந்தது. சோதிடம் மூலமாக அதைப் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தார்.

"முற்பிறவியிலேயாவது இவன் ஏதர்வது சிறிது புண்ணியம் செய்தால் கூட போதும்..." என்று நினைத்து சாரிபுத்ரன் சோதிடம் பார்க்க ஆரம்பித்தார்.

அதன்பின்னர்தான் தெரிந்தது இவன் முற்பிறப்பிலே இதைவிட மோசமாக இருந்திருக்கிறான். ஒரு துளி அளவு கூட புண்ணியம் செய்யவில்லை.அதனால் விமோசனமே கிடையாது என்ற முடிவுக்கு வந்தார்கள். இப்படியும் ஒரு ஜென்மமா... இவனை இப்போதே உடனடியாக வெளியே துரத்தி விடுங்கள். சத்தம் வேறு போட்டார்கள்.

இவனுக்கு அதைக் கேட்டதும் போபம் வரவில்லை. ஆனால், மனக்கஷ்டமாக இருந்தான். புத்தரை நெருங்கக்கூட நமக்குத் தகுதியில்லை. நாம் எதற்காக உயிர்வாழ வேண்டும்? என்று நினைத்தான். தற்கொலை செய்து கொள்ளலாம் என்று சொல்லி வெள்மதில் சுவரிலே தலையை மோதி உடைக்க ஆரம்பித்தான். அந்தச்சமயம் பார்த்து புத்தர் வெளியில் இருந்து உள்ளே வந்து கொண்டிருந்தார். தலையிலே இரத்தம் வடிவதைப் பார்த்தார். உடனே தடுத்து நிறுத்தினார். புத்தரைப் பார்த்ததும் இவனுக்கு பரவசம்... காலிலே விழுந்து அழுதான். புத்தர் ஆறுதல் கூறினார்.

என்ன நடந்தது என்று கேட்டார். "ஏன் இவனை விரட்டினீர்கள்? என்று கேட்டார்.

சீடர்கள் நடந்தவற்றை விபரமாக எடுத்துரைத்தனர்.

"இவனை ஒரு வாரத்திலே தகுதி உடையவனாக மாற்றி விட முடியும்" என்றார் புத்தர். சீடர்களுக்கோ நம்பிக்கை வரவில்லை.

இவனைப்பார்த்து "நீ என்னுடன் இருந்துகொள்" என்றார் புத்தர். இவனுக்கு மிகவும் ஆனந்தம். ஒருவாரம் சென்றபின் இவன் ஒரு நல்ல மனிதனாக மாறிவிட்டான். அடக்கம், அமைதி, சாந்தம் எல்லாம் இவனிடம் குடிகொள்ள ஆரம்பித்தது. சந்நியாசி ஆக தகுதி வந்து விட்டது.

சீடர்களுக்கு ஆச்சரியம் எப்படி இந்த அதிசயம் நடந்தது என்று சாரி புத்ரன் விசாரித்தான்.

சாரிபுத்ரா! நீ நல்லவன். ஆனால், உனக்கு ஞானமில்லை. பாவங்களின் சுமை உனக்குத் தெரியாது. அதன் தவிப்பு எப்படி, எப்போதும் உனக்குப் புரியாது. நீ... சோதிடத்திலே கடந்த காலத்தை மட்டும் தான் பார்த்தாய்.

இறந்த காலம் என்று இறந்து போன காலம். அது எதற்கும் பிரயோசனப்படாது.

எதிர்காலத்தை நினைத்துப்பார்க்க வேண்டும். அதை உருவாக்க வேண்டும். தனது பாவச்சுமையிலிருந்து இறந்த காலத்தில் இருந்து விடுபட இவன் பட்டதவிப்புதான் இவனுக்கு விடுதலையைத் தேடிக் கொடுத்தது என்றார் புத்தர்.

நல்லவர்களை விட குற்றவாளிகள்தான் விரைவாகப் பக்குவ நிலையை அடைய முடியும். இதை சற்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அத்துமீறி செயற்படும் இந்திய மீனவர்களை சிறைப்பிடிப்பதே வழி

வடமராட்சி கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடருமானால் அவர்களை சிறைப்பிடிப்பதை தவிர வேறுவழி இல்லை என வடமராட்சி கடற்றொழிலாளர் சங்க சமாசத்தலைவர் வை.அருள்தாஸ் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கடற்பரப்பில் நேற்று முன்தினம் மட்டும் 30 இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளால் அறுத்து அழிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை முனை மற்றும் சக்கோட்டை மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு 10 படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் மேற்குறித்த செயலை செய்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்றுமுன் தினம் வடமராட்சி மீனவர்கள் பருத்தித்துறை கடற் படையினருக்கு தெரியப்படுத்தியதுடன் இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இச்சம்பவம் இனிமேலும் தொடருமானால் இந்திய மீனவர்களைப்பிடித்து தடுத்து வைப்பதை தவிர வேறுவழி இல்லை எனவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பல தரப்பினரிடமும் தொடர்பு கொண்டும் இதுவரை எதுவிதமான பயனும் தமக்கு கிடைக்கவில்லை.

எனவே,எமது மீனவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு நட்டப்படுவதை தம்மால் பொறுத்துக் கொள்ள முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-24)

# வர்த்தமானி பத்திரிகையில் தமிழ்மொழி புறக்கணிப்பு

## பயன்படுத்துவோர் சிரமம்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாங்குளம் கட்டுப்பாட்டு அஞ்சல் நிலையத்திற்கு இலங்கை அரசினால் வெளியிடப்படும் வர்த்தமானி சுற்றுநிருப வெளியீடுகள் தனிச்சிங்களத்திலும் ஆங்கிலத்திலத்திலும் அனுப்பப்பட்டுள்ளதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

மாங்குளம் கட்டுப்பாட்டு தபால் நிலையத்தின் கீழுள்ள யோகபுரம், துணுக்காய், திருமுறிகண்டி, புத்துவெட்டுவான், நெட்டாங்கண்டல், பாலிநகர், கரிப்பட்டமுறிப்பு ஆகிய உபதபாலகங்களுக்கு கடந்த 2011 ஆம் ஆண்டு மார்கழிமாத 30ஆம் திகதி வெளியீடு, நடப்பாண்டு கடந்த ஜனவரி மாத 13ஆம் திகதி வெளியீடு, கடந்த பெப்ரவரி 3ஆம் திகதி வெளியீடு ஆகிய வர்த்தமானி பிரசுரங்களில் தமிழ்மொழியில் இல்லாது சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மட்டும் வெளியிடப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்புக்கள் மற்றும் பங்கு பரிவர்த்தனைகள் ஆகியவற்றிற்காக பிரசுரங்களை பார்வையிடுவோரும் பாடரீதியான தகவல்களுக்கு பார்வையிடும் மாணவர்களும் இதனால் பாதிப்படைந்துள்ளதாகவும் புகார் தெரிவித்துள்ளனர். (அ-3-15)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 60 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 25 | 30 | 40 |
| தக்காளி | 10 | 20 | 20 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 20 | 30 |
| கோவா | 10 | 15 | 15 |
| கரட் | 40 | 40 | 40 |
| பூசணி | 35 | 30 | 35 |
| புடோல் | 25-30 | 40 | 30 |
| வாழைக்காய் | 35 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 55 | 80 | 55 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | - | 100 | - |
| பயற்றங்காய் | 40-70 | 80 | 90 |
| லீக்ஸ் | 70 | 90 | 70 |
| பீற்றூட் | 20 | 40 | 20 |
| கறிமிளகாய் | 50 | 90 | 60 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 200 |
| போஞ்சி | 40 | 60 | 40 |
| கத்தரிதம்புள்ள | 35 | 70 | 50 |
| கீரை – 1 பிடி | 8-10 | 30 | 20 |
| தேசிக்காய் | 40 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 25 |
| வெங்காயப்பூ | 50 | 90 | 50 |

# இராசி பலன்

**14.03.2012**
**(பங்குனி 01, புதன்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு**
**சப்தமி பின்னிரவு 12.41 மணிவரை**
**அனுசம் முற்பகல் 11.13 மணிவரை**
**இராகுகாலம் 12.21-1.51 மணிவரை**
**சுபநேரம் 4.51-6.21 மணிவரை**
**அமிர்த சித்தம், காரடையா நோன்பு**

**மேடம்**

குழப்பங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உறவினர்கள் வழியில் சுப விரையங்கள் அதிகரிக்கலாம், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, பிரயாண பயமுண்டு.

**இடபம்**

சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கௌரவமான நாள், குடும்பத்தில் அந்நியயோன்னியம் அதிகரிக்கும், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்**

தொழில் நன்மைக்காக அதிகம் பாடுபடுவீர்கள், ஆரோக்கியமான நாள், வீட்டை பர்ாமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரும் நாள், போசன சுகமுண்டு.

**கடகம்**

பூர்வ புண்ணிய கருமங்களில் அதிக நாட்டம் காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தொழில் வியாபாரத்தை விருத்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்**

சிந்தித்து செயற்பட்டு சிறப்படைய வேண்டிய நாள், சேமிப்பில் நாட்டம் காட்டுவீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி**

உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், எடுத்த செயலை எளிதில் செய்து முடிப்பீர்கள், சுய முயற்சிகள் மூலம் சுகம் காண வேண்டிய நாள், வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள்.

**துலாம்**

பெரிய மனிதர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, எதிர்பாராத வகையில் சில பண வரவுகள் வந்து சேரலாம், உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்**

வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும், பண வரவு திருப்திதரும், பொறுமையைக் கடைப் பிடிப்பது நல்லது, ஆழ்ந்த சிந்தனையுண்டு, சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது.

**தனுசு**

எதிர்பாராத ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன ஏற்படலாம், திட்டமிட்ட பயணமொன்றில் சில மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை அமையலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**மகரம்**

உறவினர் வருகையுண்டு, வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் உற்சாகமடைவீர்கள்.

**கும்பம்**

பிறர் உதவியுண்டு, தொழில் விருத்தி கருதி பெரிதும் பாடுபடுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலை உயரும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்**

எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம், தொழில்ரீதியான பயணம் அனுகூலம் தரும், கொடுக்கல்-வாங்கல்கள் சீராகும்.

வளவன்




யு.ஆர்.பிரண்ட் பவுண்டேசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் வரவேற்பு நடனம் இடம்பெறுவதையும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

# வன்முறைகளில் இருந்து விடுபடுவதற்கு பெண்களுக்கு கல்வி அறிவு அவசியம்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இந்த நாட்டிலே சமவுரிமை வழங்கப்படுகின்றது என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

யு.ஆர்.பிரெண்ட் பவுண்டேசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மகளிர் தின கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 8 ஆம் திகதி என்னை அலரி மாளிகையிலே விருது வழங்கி கௌரவித்தார்கள்.

இலங்கையிலேயே இருக்கின்ற மிகவும் பிரபல்யம் வாய்ந்த பெண்கள் தெரிவு செய்யப்பட்டு கௌவிக்கப்பட்டிருந்தார்கள்.

அந்தக் கௌரவம் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த பெண்கள் சார்பாகவும் சிறுவர்கள் சார்பாகவும் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் பிரதிபலனாகத்தான் எமக்கு கிடைத்தது. அதற்கு அவருக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்றால் 1984 ஆம் ஆண்டிலிருந்து நிர்வாக சேவையில் கடமையாற்றி வருகின்றேன். எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களை சந்தித்துள்ளேன். எத்தனையோ முறை உயிர் ஆபத்தையும் சந்தித்திருக்கின்றேன்.

இருப்பினும் எனது சேவையினை கைவிடாமல் தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளேன்.

ஆனால், வாயால் மட்டும்தான் இதுவரை காலமும் பாராட்டுக்கள் கிடைத்தன. 2004 ஆம் ஆண்டு சுனாமியை அடுத்து கண்டியிலே நடைபெற்ற மாநாடு ஒன்றிலே எனது தாய்நாடு சார்பாக சமர்ப்பணம் ஒன்றினை செய்திருந்தேன்.

அப்போது உலகப் புகழ்பெற்ற வாழ்த்துக் கிடைத்தது. ஆனால், எதுவுமே கடந்த 8 ஆம் திகதி கிடைத்த கௌரவம் போல கிடைக்கவில்லை.

கல்வியிலும் ஆற்றலிலும் முன்னிலை வகிக்கும் பெண்களுக்கு, ஆண்களுக்கு வழங்கப்படும் சந்தர்ப்பம் போன்று சமமான சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. இதனை தெரிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ். மாவட்டத்திலே 25 இற்கும் மேற்பட்ட பெண்கள் அதி உயர் பதவிகளில் உள்ளனர். இது தவிர அரச சேவையிலும் தனியார் சேவையிலும் ஆண்களை விட பெண்கள் அதிகமாக பணிபுரிந்து வருகின்றனர்.

ஆனால், இன்று யாழ்ப்பாணத்தில் அதிகளவான பெண்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தி நிற்கின்றார்கள். இதற்கு காரணம் எமது அரசாங்கத்தினால் ஆண்களுக்கு வழங்கப்படுவதைப் போல சம சந்தர்ப்பம் பெண்களுக்கும் வழங்கப்படுகின்றது.

திறமைக்கும் கல்விக்கும் முன்னுரிமையளித்து வருகின்றமையினாலேயே நாங்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றோம்.

ஏனைய பெண்களும் எதிர்காலத்தில் எங்களைப் போல உயர் பதவிகளுக்கு வர வேண்டும், சாதிக்க வேண்டும், சாதனைகள் படைக்க வேண்டும்.

வாழ்க்கையிலே வருகின்ற எல்லா கஷ்ட நஷ்டங்களையும் சவாலாக எடுத்து முன்னேற வேண்டும்.

பெண்களுக்கு எதிராக வன்முறைகள் யாழ். மாவட்டத்தில் பரவலாக இடம்பெற்று வருகின்றது. இதிலே ஆண், பெண் இருதரப்பினரிலும் தவறு இருக்கின்றது.

வன்முறைகளிலிருந்து பெண்கள் தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு கல்வியறிவுடையவர்களாக இருத்தல் வேண்டும். அப்போதுதான் வன்முறைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

குறிப்பாக கிராமப் புறங்களிலே வாழ்கின்ற பெண்களே இவ்வாறான வன்முறைகளுக்கு அதிகளவில் உள்ளாகின்றனர்.

அரசாங்க உத்தியோகத்தர்களாக இருந்தாலும் அரசியல்வாதிகளாக இருந்தாலும் பெண்களைத் காப்பதிலேயே மிகவும் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்நிகழ்வில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ், ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-6)

# வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(நவாலி)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட ஆனைக்கோட்டை சந்தியில் இருந்து கொக்குவிலுக்கு செல்லும் குளப்பிட்டி வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் பயணிக்க முடியாத அவலநிலை உள்ளது.

இவ் வீதியால் தினமும் பயணிக்கும் பாடசாலை மாணவர்களும் வாகனங்களும் மற்றும் மக்களும் மிகவும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, உரியதரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து இவ்வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-26)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11 இற்கு இந்து சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயல்முறைக் கற்பித்தலும் பயிற்சியும் மதிப்பீட்டிற்குமான செயலமர்வு எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு வரணி ஆசிரியர் மத்திய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, இச் செயலமர்வில் தவறாது பங்குபற்றுவதுடன் தரம் 10, 11 அறிவுரைப்பு வழிகாட்டி பாடப் புத்தகத்தையும் எடுத்து வருமாறும் ஆசிரியர்கள் தமது வருகையை 0779789160 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது zeothen@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரியுடனோ தொடர்பு கொண்டு நாளை வியாழக்கிழமைக்கு முன் உறுதிப்படுத்துமாறும் மாற்றலாகி சென்ற ஆசிரியர்களுக்கு பதிலாக தற்போது கடமையாற்றும் ஆசிரியர்களை சமுகம் அளிக்குமாறும் தென்மராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆ.ஶ்ரீஸ்கந்தமூர்த்தி அறிவித்துள்ளார். (அ-3-29)




## ஆலோசனைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வி.சிவஞானம்சோதி தலைமையில் நடைபெறும்.

இந்த ஆலோசனைக்கூட்டத்தில் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையுடன் தொடர்புடையவர்கள் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (அ-6)

## முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திருமுறை மன்றத்தினால் பன்னிரண்டாந்திருமுறை பெரியபுராணம் முற்றோதல் நாளை வியாழக்கிழமை முதல் எதிர்வரும் ஏப்ரல்மாதம் 12 ஆம் திகதி வரை தினமும் 4 மணிக்கு நல்லையம்பதி ஶ்ரீலஶ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இத் திருவாசக முற்றோதல் நிகழ்வு மணிமண்டப உத்தியோகத்தர்களின் அனுசரணையுடன் இடம்பெறும் என மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (அ-7)

## நிலப்பயன்பாடு பற்றிய ஒன்றுகூடல் நிகழ்வு

(நவாலி)

நவாலி விவசாய சம்மேளனத்தினரால் நவாலி, ஆனைக்கோட்டை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் உள்ள வளங்களை பாதுகாத்தல் பற்றியும் நிலப் பயன்பாடு பற்றியதுமான ஆராய்வு ஒன்றுகூடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நவாலி மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சுற்றுச்சூழல் ஆர்வலர்களை பங்குபற்றி கருத்துக்களை வழங்குமாறு நவாலி விவசாய சம்மேளனத்தின் செயலாளர் சு. தனராஜ் அறிவித்துள்ளார். (அ-3-26)

# படிங்கள் மற்றும் மரக்கறிகள் விற்பனைக்கு பிளாஸ்ரிக் கூடையின் பயன்பாடு அவசியம்

## பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

பிளாஸ்ரிக் பெட்டிகளை பயன்படுத்தியே மரக்கறிகள் மற்றும் பழவகைகளை விற்பனை செய்ய முடியும் என யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சிரேஷ்ட அதிகாரி ந.சிவசீலன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகள், பழங்கள் பறிக்கப்படும் போதும் சேகரிக்கப்படும் போதும் களஞ்சியப் படுத்தும் போதும் வாகனங்களில் ஏற்றிச் செல்லும் போதும் விற்பனைக்காக வைக்கும் போதும் அல்லது காட்சிப்படுத்தும் போதும் பிளாஸ்ரிக் அல்லது மரத்தாலான பெட்டிகளைப் பாவிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டத்தின் பிரிவு 10 (I) ஆ (II) கீழ் பணிப்புரைக்கப்பட்டதின்படி இந்த நடைமுறை அமுலாக்கப்பட்டுள்ளது.

இதனை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சின் கீழ் உள்ள பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, வர்த்தகர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி மரக்கறி வகைகள் மற்றும் பழ வகைகளை பிளாஸ்ரிக் மற்றும் மரத்தலானா பெட்டிகளைப் பயன்ப டுத்தி கையாளுமாறு கேட்டுக் கொள்ளப்படு கின்றது.

மேலும் பிளாஸ்ரிக் கூடைகளைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் நன்மைகள் தொடர்பாக யாழ். மாவட்டத்திலுள்ள சந்தைகளை அண்டிய பகுதிகளில் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பாக சாவகச்சேரி, மானிப்பாய், மருதனார்மடம், திருநெல்வேலி, சங்கானை, சுன்னாகம் போன்ற பகுதிகளில் உள்ள வர்த்தகர்களுக்கு அதிகளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மரக்கறி வகைகள் பழுதடையாமலும் பாதிப்பு ஏற்படாத வகையிலும் பாவனையாளர்கள் சுரண்டப்படுவதிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல் மற்றும் குறைந்த விலையில் பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை பெற்றுக் கொடுக்கும் நோக்குடனேயே இந்த நடைமுறை அமுலாக்கப்பட்டுள்ளது.

எனவே, யாழ். மாவட்டத்திலுள்ள வர்த்தர்கள், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டதிட்டங்களுக்கு அமைவாக பொருட்களை விற்பனை செய்யுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# மன்மோகன்-கருணாநிதி சந்திப்பு

(டில்லி)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் முன்னாள் தமிழக முதல்வருமான மு.கருணாநிதி இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்கவுள்ளார்.

இதன் போது இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக ஜெனீவாவில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை குறித்து பேசப்படும் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கிடையில் சனல் 4 தொலைக்காட்சி இலங்கையின் கொலைக்களம் மற்றும் தண்டிக்கப்படாத யுத்தக் குற்றங்கள் என்ற தமது புதிய காணொளியை இன்றைய தினம் வெளியிடவுள்ளது.

இந்த நிலையில் இலங்கை தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கம் மேலும் அழுத்தங்களை எதிர்நோக்கியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்தியா இலங்கைக்கு எதிராக செயற்படுமாக இருந்தால் அது எதிர்காலத்தில் இந்தியா தம்மீது எழக்கூடிய குற்றச்சாட்டுக்களில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் இருக்கலாம் என ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

இந்திய இராணுவத்தினர் காஷ்மீர் மற்றும் மீர்பூர் பகுதிகளில் நடத்துகின்ற மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களில் இருந்து இந்தியாதம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். (அ-2)

# சிலாபம் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்படவில்லை

## ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு

சிலாபம் மீனவர் துப்பாக்கிச் சுட்டு சம்பவம் குறித்து உரிய விசாரணை நடத்தப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அண்மையில் சிலாபத்தில் நடைபெற்ற போராட்டத்தின் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மீனவர் ஒருவர் உயிரிழந்ததுடன் சிலர் காயமடைந்திருந்தனர். இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்படவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முறையில் நட்டஈடு வழங்கப்படவில்லை.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்த பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

சிலாபம் பிரதேச போரட்டத்தில் கலந்து கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவராணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சிவகாமி அம்பாள் கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோவில் கும்பாபிஷேக உற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.40 மணி முதல் 10.40 மணிவரை நடைபெறவுள்ளது.

இதன்போது 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு கும்பாபிஷேக கிரியாரம்பமும் கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், வாஸ்து சாந்தி,பூர்வாங்க கிரியைகள் என்பன இடம்பெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

உற்சவகாலக் கிரியைகள் யாவும் இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் பிரம்ம ஸ்ரீ தானுமகாதேவக் குருக்கள் ஆசியுடன் நடைபெறவுள்ளது. (அ-7)

# மகளிர்தின விழா

சாவகச்சேரி நகராட்சிமன்ற நுணாவில் பொது நூலகத்தினால் சர்வதேச மகளிர் தின விழா இன்று புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு நுணாவில் பொதுநூலக மண்டபத்தில் சாவகச்சேரி பொதுநூலக நூலகர் செல்வி மதிவதனா சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி உதவி பிரதேச செயலர் செல்வி நிறஞ்சனா நவரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் திருமதி உமாதேவி ஆறுமுகம், தென்னிந்திய திருச் சபையின் நுணாவில் பெண்கள் சங்க தலைவி திருமதி விஜயா தேவராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-31)

# யாழ்.பல்கலையில் புதிய ATM இயந்திரம்

இலங்கை வங்கி திருநெல்வேலி கிளையினால் யாழ். பல்கலைக்கழக மாணவ சமுதாயத்திற்கு இலகுபடுத்தப்பட்ட அதிநவீன சேவையை வழங்கும் நோக்குடன் ஏற்கனவே சேவையிலிருந்த பழைய இயந்திரத்திற்கும் பதிலாக புதிய தொழில்நுட்பத்துடன்கூடிய ATM இயந்திரம்ஒன்று அண்மையில் யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி வடமாகாண கடன் வழங்கல் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட முகாமையாளர் திருமதி. ஜனனி வைரவநாதன் இயந்திர செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தார். (அ-7)

# இளைஞன் படுகாயம்

கன்ரர் வாகனம் தடம் புரண்டதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு குடத்தனைப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கன்ரர் வாகனத்தில் மண் ஏற்ற சென்ற வேளை இச்சம்பவம்இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் கரவெட்டி கல்லிகை பகுதியைச்சேர்ந்த மகாராசா சசியந்தன் (வயது23) என்ற இளைஞனே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-3-24)


# இராமகிருஷ்ண மிசனின் முக்கிய அறிவித்தல்

RAMAKRISHNA MISSION

கொழும்பு, இராமகிருஷ்ண மிசன் (இலங்கை கிளை) ஆல் நடத்தப்படும் இராமகிருஷ்ண மிசன் நலன்புரி நிலையம் 17 மருதனார்மடம் வீதி, உரும்பிராய் சந்தி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகிறது.

இராமகிருஷ்ண மிசனின் அனுசரணையுடன் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி,மானிப்பாய் வீதி,தாவடி, கொக்குவில் என்ற முகவரியில் இயங்கி வருகிறது. இதற்கு செயலாளராக திரு.சி.சிவமோகன் அவர்கள் பணியாற்றுகிறார்.

இந்த இரண்டு நிலையங்களுக்கும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக திரு.சி.சிவமோகன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். தொ.பே - 0772397056.

இராமகிருஷ்ண மிசனால் பிரசுரிக்கப்படும் சமய புத்தகங்களையும் "இராமகிருஷ்ண விஜயம்" ஆன்மீக மாத இதழ்களையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் எங்களுடன் தொடர்புகொள்ள மேலே குறிப்பிட்ட நிலையங்களை அணுகலாம். அல்லது கொழும்பில் உள்ள எமது தலைமையகத்தை நேரடியாக தொடர்பு கொள்ளலாம்.

சமய மற்றும் நலன்புரி செயற்பாடுகளுக்கு உதவிபுரிய விரும்புபவர்கள் ஹட்டன் நேஷனல் வங்கியில் உள்ள நடப்பு கணக்கு இலக்கம் 009010001222 இற்கு பணத்தை செலுத்தியபின் எமக்கு அறிவித்து பற்று சீட்டை பெற்றுக்கொள்ளலாம்.

(" Ramakrishna Mission,Colombo".Current A/c No.009010001222,Hatton National Bank,Wellawatta Branch ,SWIFT CODE :HBLILKLX,100,102,Galle Road,Colombo 6, Srilanka)

"ஸ்ரீ ராமகிருஷ்ண, சாரதா, விவேகானந்தா" என பெயர்களை தாங்கி யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் வேறு பல ஸ்தாபனங்கள் எங்களால் அமர்த்தப்பட்ட இராமகிருஷ்ண மிசனின் பிரதிநிதிகள் அல்லர் என்பதை அறியத்தருகிறோம்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
இறைபணியில்
சுவாமி சர்வரூபானந்த
தலைவர்
இராமகிருஷ்ண மிசன்( இலங்கைக் கிளை)
40 ,இராமகிருஷ்ண வீதி, கொழும்பு-6
தொ.பே:011-2588253 & 011-5013805
மின்னஞ்சல் rkmcey@gmail.com

(7694)

# எழில்மிகு தோற்றத்துடன் மிளிரும் வடக்குக் கிழக்கை பார்க்க வாரீர்

## ஜப்பானுக்கு ஜனாதிபதி அழைப்பு



(கொழும்பு)

ஜப்பானின் நீண்டகால சகவாசம் ஒளிக்கீற்றாய் மிளிர்கிறது மார்லின் மரிக்கார் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட முழு நாட்டிலும் இடம்பெறுகின்ற பாரிய அபிவிருத்தியின் மகிமையைப் பார்வையிடுவதற்காக இலங்கைக்கு வருகை தருமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஜப்பானியர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஜப்பான் நாட்டின் தென் மாகாணத்தில் ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமி பேரலை அனர்த்தம் தொடர்பான நினைவுதினம் கொழும்பிலுள்ள ஜப்பான் நாட்டு தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட அதிதியாகக் கலந்து கொண்டபோது ஜப்பான் நாட்டின் என்.எச்.கே. தொலைக்காட்சி ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கும் ஜப்பானுக்குமிடையில் நீண்டகாலமாக நிலவிவரும் நட்புறவின் ஊடாக ஜப்பான் எமக்கு அளித்துள்ள பல பங்களிப்புக்கள் இந்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கு பாரிய உறுதுணையாக அமைந்திருப்பதாக ஜனாதிபதி கூறினார்.

இதன்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடிகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்திருந்த மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. பாதைகள் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. பாடசாலைகள் மற்றும் வைத்திய சாலைகள் நிர்மாணிக்கப்பட்டு சகல மக்கள் மத்தியிலும் தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்காக பாரிய வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்கின்றது.

இலங்கை முன்பை விடவும் தற்போது எழில்மிக்க தேசமாக விளங்குகின்றது.

இதனால் உல்லாசப் பயணிகள் இவ்வருடம் இந்நாட்டுக்கு வருவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன். இவர்களில் ஜப்பான் நாட்டவர்கள் பெரும்பகுதியினராக இருப்பர் என நான் நம்புகின்றேன். கடந்த வருடம் ஜப்பான் நாட்டின் சுனாமி பேரலை அனர்த்தம் ஏற்பட்ட செய்தியைக் கேள்வியுற்றதும் நானும் எனது அரசாங்கமும் மாத்திரமல்லாமல் முழு இலங்கை மக்களும் பேரதிர்ச்சிக்கு உள்ளானார் கள்.

அதேநேரம் 2004 ஆம் ஆண்டில் சுனாமி பேரலை அனர்த்தத்திற்கு நாம் முகம் கொடுத்தோம் எனக் குறிப்பிட்டார். (அ-7)

## குவாஸி நீதிமன்றங்களை அமைக்க அரசு நடவடிக்கை

### நீதியமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

குவாஸி நீதிமன்றங்களை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கடந்த வெள்ளிக்கிழமை சபையில் தெரிவித்த நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் நாடு முழுவதும் 64 குவாஸி நீதிமன்றங்கள் அமைக்கப்படவிருப்பதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கழமை ஆளும்கட்சி எம்.பியான ஏ.எச்.எம். அஸ்வரினால் கொண்டுவரப்பட்ட காதி நீதிமன்ற முறைமைக்கு உயர்ந்த இடத்தைப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

குவாஸி நீதிமன்றங்கள் முஸ்லிம்களின் தேவையாகும். அந்த வகையில் குவாஸி நீதிமன்றங்களை நாட்டில் விஸ்தரிப்பதற்கான திட்டத்தில் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கொழும்பு உட்பட நாடு முழுவதிலும் மேலும் 64 குவாஸி நீதிமன்றங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென குவைத் நாட்டின் உதவியை நாடுவதற்கு எண்ணியுள்ளேன். ஜெனீவா பயணத்தின் பின்னர் குவைத்துக்கு விஜயம் மேற்கொண்டு இலங்கையில் குவாஸி நீதிமன்றங்களை நிறுவும் திட்டத்துக்கான விடயங்களை முன்னெடுக்கவும் குவாஸி நீதிமன்றங்களை அமைப்பதற்கு ஜனாதிபதி நிதியொதுக்கீட்டினையும் மேற்கொண்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

பின்னர் உரையாற்றிய அஸ்வர் எம்.பி. கூறுகையில்,

நாட்டில் இயங்குகின்ற அமைக்கப்படுகின்ற குவாஸி நீதிமன்றங்கள் சுயாதீனமானதாக இயங்க வேண்டியது அவசியமாகும். அதேபோன்று குவாஸி நீதிமன்ற நீதிபதிகள் நேர்மையானவர்களாகவும் மத்தியஸ்தர்களாகவும் இருத்தல் வேண்டும் என தெரிவித்தார். (அ-7)

## கமக்காரர் ஓய்வூதியம்

நவம்பர் 2011 இற்கான கமக்காரர் ஓய்வூதியம் இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன் தங்களுக்குரிய தபால் நிலையத்தில் ஓய்வூதிய ஒழுங்குபடுத்தலுக்கான விண்ணப்பப் படிவத்தை பெற்று பூரணப்படுத்தி பலாலி வீதி திருநெல்வேலியில் விவசாய திணைக்களத்துக்கு அருகில் பெற்று உள்ள கமத்தொழில் காப்புறுதிச் சபை மாவட்டக் காரியாலயத்தில் சமர்ப்பிக்குமாறு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை உதவிப் பணிப்பாளர் டி.கிரிதரன் அறிவித்துள்ளார். (அ-7)

## தேர்தல் பிரசாரங்கள் தொடர்பில் ஆராய்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுரைப்பற்று பிரதேச சபைக்கான தேர்தல்களை நீதியாகவும் சுதந்திரமாகவும் நடத்துவது தொடர்பில் நேற்று முன்தினம் ஆராயப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகன் தலைமையில் இது தொடர்பான கூட்டமொன்று நடைபெற்றது. தேர்தல் விதிகளைப் பின்பற்றுவதன் அவசியம் மற்றும் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் குறித்து இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதாக தெரிவித்தார்.

முல்லைத்தீவிலிருந்து இடம்பெயர்ந்து இன்னமும் மீள்குடியேற்றப்படாது வவுனியா கதிர்காமர் நிவாரணக் கிராமத்தில் தங்கியிருப்பவர்கள் மத்தியில் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுப்பது தொடர்பிலும் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

நிவாரணக் கிராமங்களில் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்க பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கமைய வேட்பாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் சகிதம் சென்று முகாம்களில் பிரசாரம் செய்ய முடியும் . இன்று 14ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை இவர்கள் பிரசாரம் செய்ய முடியும் என தெரிவித்தார்.

பிரச்சாரங்களுக்கு செல்லவிரும்பும் வேட்பாளர்கள் முற்கூட்டியே விபரங்கள் வழங்கினால் அதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் என்ற தகவலையும் வேட்பாளர்ளுக்கு வழங்கியதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளன. இத்தேர்தலில் வாக்களிக்க 44ஆயிரத்து 782 பேர் தகுதி பெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கபட்டது.

(அ-7)

## சிங்கள சான்றிதழ் கற்கைநெறியில் சாவகச்சேரியில் சித்தியடைந்தோர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி பிராந்திய கற்கை நிலையத்தில் மகரகம தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்பட்ட ஒரு வருட இரண்டாம் தேசிய மொழி- சிங்களம் சான்றிதழ் கற்கை நெறியில் சித்தியடைந்தோர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சச்சிதானந்தன் நந்தன், அரசரத்தினம் சியாமசுந்தர், நடராசா திருவாசகன், செல்வராணி கணேசலிங்கம், தேவகி ஹர்சினி, அங்கயற்கண்ணி கனகசபாபதி, பாலரஞ்சினி மாணிக்கவாசகர், ஜெகதீஸ்வரி தவராசா, கமலாதேவி ராஜகுலச்சந்திரன், காருண்யா சந்திரகுமார், முருகேசு திவ்வியபாலன், நடராஜா மதுராகரன், பரமானந்தம் அசோகன், ராஜரஞ்சினி லோகநாதன், சசிகலாதேவி விக்னேஸ்வரன், சண்முகானந்தன் கிருபானந்தன், சிவஞானம் மகேஸ்வரன், சிவமங்கை சிவராஜா, சுந்தரம் சிவபாலன், தர்சினி சுதாகரன், திருநாவுக்கரசு அபராஜிதன், விஜயலக்சுமி தங்கவடிவேல்.

உமாரதி திருச்சபேசன், லலிதாமலர் முகுந்தன், பொன்னம்பலம் சுஜிந்தன், சிவகுமார் முத்துக்குமாரு, வள்ளியம்மைப்பிள்ளை அம்பலவாணப்பிள்ளை, ஆரணி ஹய்லர், பிருந்தாவனிதை நடராஜா, ஜெயநிதி பாலச்சந்திரன், கணபதிப்பிள்ளை ராஜேஸ்வரன், மனோன்மணி நடராஜா, மயில்வாகனம் லினஸ்குமார், நற்குணராஜா அகிலன், பொன்னுத்துரை நடேசலிங்கம், இரட்ணமலர் கணபதிப்பிள்ளை, சதாசிவம் உருத்திரமூர்த்தி, சுதமதி நடராஜா, சிவஞானவதனி ஸ்ரீகரன், சிவரஞ்சிதமலர் திருவாசகன், சுதமதி குணசேகரம்,தாமு தவமணி, வாசுகி சதாசிவம், கந்தையா ஸ்ரீகணேசன்.

தெய்வேந்திரம் உமாசுதன் , மகிழா இராசேந்திரா, சசிகலா செல்லத்துரை , சுப்பிரமணியம் ஸ்ரீரங்கன் , அருள்ராணி சிவரஞ்சன் , ஐயாத்துரை தேவராஜன் , கலைமகள் சியாம்சுந்தர், கணேசலிங்கம் உதயசந்தர் , மதிலோஜினி லோகேஸ்வரன், நாகராஜா கேதீஸ்வரன், நயணவதி குகராஜ், ராஜரட்ணம் சுப்பிரமணியம், சரஸ்வதி கிருஸ்ணபிள்ளை, சாமினி ஞானதேவன், சிவச்செல்வி கந்தப்பசேகரம், சிவலோஜினி கிருஸ்ணமூர்த்தி, சிவவதனி சிவகுமார், தர்மலிங்கம் ஐங்கசன், தேவமனோகரி சிவராமச்சந்திரன், வக்சலா சுகீரதன் ஆகியோர் சித்தியடைந்துள்ளதாக சாவகச்சேரி தேசிய கல்வி நிறுவக பிராந்திய கற்கை நிலைய இணைப்பாளர் வி.திருச்சபேசன் அறிவித்துள்ளார். (ஏ)

# கூட்டத்தில் தன்னுள் இருத்தல்



ஆன்மீகம் 05

மனதில் ஒரு பெரிய கூட்டமே இருக்கிறது- ஒரு மிருகக்காட்சிச் சாலை இருக்கிறது. மனித மனதில் எல்லாவித இயல்புகளுமுடைய ஜீவராசிகளும் உள்ளன. இங்கு நம் இருப்பின் முழு இலட்சியமும் மாறு பட்ட இந்த இயல்புகளையும், இலக்குகளையும் ஒருங்கிணைத்து மனதைக்காலியான வெற்றிடமாகச் செய்வதுதான். கூட்டத்தில் தனித் திருக்கக் கற்றுக்கொள்; உனக்குள் அளவிட முடியாத பலம் வருவதை நீ காணலாம். மௌன நிலையில் இருக்கும் உன்னை- உன் அமை தியை எதாலும் அசைக்க முடியாது. அப்போதுதான் கடவுளின் ஸாந்நித் யத்தை நீ உண்மையில் பகிர்ந்து கொள்கிறாய். உன் உடலில் மனம் எங் குள்ளது? ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ளதா? இல்லை. மனம் எங்கும் வியாபித்துள்ளது- உன் உடல் முழுவதும்.

மனதிற்கு உருவம் உண்டா, உன்னால் உன் மனதைப் பார்க்கமுடியுமா? அதற்கு நிறமுண்டா, மனதின் வாசனையுண்டா?

மனதிற்கு நறுமணமில்லை, மன திற்கு ருஷியில்லை. ஆனால், எங்கு உயிருண்டோ அங்கு மனம் உண்டு. அதே போல, இந்த முழுபிரபஞ்சமும் ஓர் உடம்பில் இருக்கிறது. நீ சூரயனை பார்க்கிறாய்- சந்திரனை, நட்சத்திரங் களை, மலைகளை, மரங்களைப் பார்க் கிறாய். ஆனால், இந்த முழு பிர பஞ் சத்தின் உயிரான கடவுளைப் பார்ப் பதில்லை. அந்த மாபெருமனம், கடவுள் உன்மனம் அந்த மாபெருமனத்தின் ஒருபகுதி, உன் உடல், உலகின் ஒரு பகுதி.

இந்த உடல் பூமியைச் சேர்ந்தது மனம்- படைத்தல், காத்தல், அழித்தல் இவை மூன்றுக்கும் பொறுப்பான அந்த மாபெருமனத்தின் ஒரு பகுதி. நீ காலியாக- வெற்றிடமாக, கூடாக மாறும்போது நீ அந்த மாபெருமனத்தின் இருப்பை உண்ர்வாய். அப்போது உன் னுள் அமைதி, பேராணந்தம், சந்தோஷம், அன்பு, அக்கறை கொள்ளுதல், பொறுப்பேற்றுக் கொள்ளுதல், ஆக் கத்திறன் போன்ற அனைத்து நற் பண்புகளும் வெளிப்படும். இயற்கை கேளிக்கையை விரும்புகிறது.

# நீ களைப்படைந்து விட்டாயா?

நீ களைப்படைந்திருக்கிறாயா?

இல்லையெனில் களைப்படைந்து விடு!

நீ களைப்படையவில்லை எனில், நீ ஒருபோதும் (முக்தி) வீடு போய்ச் சேரமாட்டாய். நீ களைப்படைந்தால் மட்டுமே நீ ஓய்வெடுப்பாய், நீ இல்லம் சென்றடைவாய். இவ்வுல கிலுள்ள அனைத்தும் உன்னைச் சலிப்படையச் செய்கிறது. ஒன்றே ஒன்று மட்டுமே சலிப்பைத் தருவ தில்லை. அதுதான் அன்பு, ஏனெனில், அதுதான் இலக்கு. அதுதான் வீடு.

அன்பு செலுத்தி ஒருவரும் சோர்வடைய முடியாது. எப்போதாவது யாராவது "ஓ... நான் அன்பு செலுத்திக் களைத்துப்போய் விட் டேன்" என்று சொல்லக்கேட்டிருக் கிறாயா! இது கேள்விப்படாத ஒன்று, ஏனெனில், அன்பால் சோர்வடையச் சாத்தியமே இல்லை.

நீ மற்றவர்களை நம்பவைப்பதில், அவர்களுக்கு விளக்கம் அளிப்பதில், அவர்களைச் சௌகரியமாய் வைத் திருப்பதில், திருப்தி செய்வதில் சோர்ந்து போகலாம், நீ மற்ற எல்லா வற்றாலும் சோர்வடைந் திருக்கலாம், ஏன் மகிழ்ச்சியை அனுபவித்தலில் கூட, சலித்துப்போயிருக்கலாம். உண் மையில் களைப்பு, சந்தோசத்தின் நிழலே. எது உன்னை வீதியில் நிறுத்து கிறது என்றால், அது, சந்தோசத்தை அனுபவிக்க வேண்டும் என்ற உன்னுடைய ஆசைதான். எது உன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்கிறது என் றால், அது அன்புடன் இருத்தல்தான்.

சந்தோசத்தைத் தேடிச் செல்லும் பயணத்தில் நீ ஒன்றிலிருந்து மற் றொன்றுக்குத் தாவுகிறாய். நீ சந் தோசத்தைக் காண்கிறாய். ஆனால், நீ அங்கு போய்ச்சேரும்போது அது இன் னும் சற்று தூரத்தில், வேறெங்கோ இருப்பதைக் கண்டு நகர்நதுபோய்க் கொண்டே இருக்கிறாய். அந்த தேடி அலைதல் உன்னைக் ,களைப்படையச் செய்கிறது. வாழ்க்கையைக் கவனி. குழந்தைகள் தங்கள் பொம்மைகளுடன் விளையாடிச் சலிப்படைந்தால் அவர் களுக்குப் புதுப்பொம்மை தேவைப் படுகிறது. புதுப்பொம்மை சலிப்புத் தரும்போது அவர்களுக்குப் புது மனிதர்கள் அல்லது புதுவிளை யாட்டுகள் தேவைப்படுகின்றன. அவர்கள் சற்றுப் பெரியவர்களாகும் போது அவர்களுடைய தேவைகளும் விளையாட்டுகளும் மாறுகின்றன. இது ஒரு சலிப்பிலிருந்து மற்றொரு சலிப்பிற்கு மாறுவது போன்றது.


எங்கே அந்த ஓய்வு? அந்த ஆதரவு? அந்த அமைதி? எங்கே அந்த ஆற்றலைத் தரும்-குளிர்ச்சியைத் தரும் நிலையான பேரானந்தமான அன்பு?

(தொடரும்)

பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

# உங்கள் கைரேகை பலன்கள் 05

## ரேகைகளும் கிரகங்களும்




*1.குரு, 2.சனி, 3.சூரியன், 4. புதன், 5.சதுரம், 6.செவ்வாய், 7.முக்கோணம், 8.கீழ்செவ்வாய், 9.சுக்கிரன், 10.மேல் செவ்வாய்,*

*11.<br>12. — சந்திர மேட்டின் மூன்று பகுதி<br>13.<br>14*

**குருமேடு**

ஒருவருக்கு குரு மேடு சரிவர அமைந்திருந்தால், அவர் தற்பெரு மையும் ஆணவமும் உடையவர் என்பதை அது குறிக்கும். அக்குரு மேடு சனிமேட்டைச் சார்ந்திருந் தால், அவர் தன்னறிவோடு இருப் பவர் என்பதை அது குறிக்கும். குரு மேடு இருதய ரேகையை நோக்கி யிருந்தால், பாசம் காரணமாக அவர் பிடிவாதத்தையுடைவர் என்பதை அது காட்டும். குருமேடு புத்தி ரேகையை நோக்கியிருந்தால், அது அவர் தனக்குள்ள அதிகமான ஞானத்தால் கர்வத்தை உடையவர் என்பதைக் குறிக்கும். குருமேடு ஆயுள் ரேகையை நோக்கியிருந்தால் அவர் குலப்பெருமை பாராட்டுபவர் என்பதை அது காட்டும்.

**சனிமேடு**

ஒருவருக்கு சனிமேடு ஒழுங்காய் அமைந்திருந்தால், அவர் தனித்திருப் பதற்கே அதிக ஆசை கொள்பவர் என் பதை அது குறிக்கும். அது குரு மேட்டைச் சார்ந்திருந்தால் அவருக்கு மதிமயக்கம் இருந்துவரும் என்பதை அது குறிக்கும். அது சூரியமேட்டை நோக்கினால் பிரபஞ்சத் தோற்றத்தில் அவர் மயங்காதவர் என்பதை அது காட்டும். அது இருதய ரேகையை நோக்கியிருந்தால் அவர் அதிக அன்பு டையவாராயிருப்பர் என்பதை அது குறிப்பிடுவதாகும்.

**சூரிய மேடு**

ஒருவருக்கு சூரிய மேடு கிரகமாய் அமைந்திருந்தால், அது பொதுமக்க ளிடம் பக்ஷமுள்ளவராயிருப்பார் என் பதை அது காட்டுவதாகும். அது சனி மேட்டைச் சார்ந்திருந்தால், அவர் பேரா சையுடையவர் என்பதைக் காட்டும். அது புதன்மேட்டை நோக்கியிருந் தால் அவர் வித்தியா தத்துவத்தில் கூர் மயான புத்தியுள்ளவர் என்பதைக் காட்டும். அது இருதயரேகையை நோக்கியிருந்தால் அவர் இரக்கம் என்னும் அருங்குணம் படைத்தவராய் இருப்பார் என்பதைக் காட்டுவதாகும்.

**புதன் மேடு**

ஒருவருக்கு புதன்மேடு ஒழுங்காய் அமைந்திருந்தால், அவர் தமாஷாய்ப் பேசுபவர் என்பதையும், நல்ல வாக்குச் சாதுர்யமுடையவர் என்பதையும் அது குறிக்கும். அது சூரிய மேட்டைச் சார்ந்திருந்தால், அவர் தொழில் நடத்துவதில் மிகுந்த ஆசையுடைய வர் என்பதை அது காட்டும். மற்றும் இனிமையாக உரையாடுபவர் என் பதையும் காட்டும். அது ஒரு ரேகை யைத் தாங்கிநின்றால், தொழிலில் அவர் நிச்சியம் வெற்றி பெறுவார் என்பதைக் காட்டும். அது செவ்வாய் மேட்டை நோக்கியிருந்தால், அவர் சண்டையிட்டுத் தொழிலில் வெற்றி பெறுவார் என்பதை அது குறிக்கும்.

**மேல் செவ்வாய் மேடு**

ஒருவர் கையில் மேல் செவ்வாய் மேடு ரேகையைத்தாங்கி நின்றால், அது அவர் தவறுதலைக் குறிப்பதாகும். அது உள்ளங்கையை நோக்கினால், அவருக்குச் சஞ்சலமும் சச்சரவும் உண் டாகும் என்பதை அது காட்டுவதாகும். அது சந்திரமேட்டை நோக்கினால், அவருக்கு மனோவஸ்ய சக்தி உண் டாகும் என்பதை அது குறிப்பதாகும்.

**சந்திர மேடு**

ஒருவர் கையில் சந்திரமேடு செவ்வாய் மேட்டை சார்ந்திருந்தால், அது அவர் மனக்கண்ணால் நன்கு ஆராய்பவர் என்பதைக்குறிக்கும். ஒற் றுமையில் ஆசையுள்ளவர் என் பதையும் குறிக்கும். அவர் சங்கீதப் பிரியர் என்பதையும் அது காட்டுவ தாகும். சந்திரமேடு மணிக்கட்டையை நோக்கினால் அவருக்கு அமைதியற்ற யோசனையுண்டாகும் என்பதை அது காட்டுவதாகும். சந்திரமேடு சுக்கிர மேட்டை நோக்கினால் அது அவருக்கு அழுத்தமான யோசனையைக் கொடுத்து அவரை ஆவேசத்தில் மூழகச் செய்யும் என்பதை காட்டு வதாகும். சந்திரமேடு உள்ளங்கையை நோக்கினால், அது அவருக்குச் சித்த விருத்தியையும் கொடுமையான சக்தியையும் எழுப்புவதாகும்.

**சுக்கிர மேடு**

ஒருவர் கையில் சுக்கிரமேடு கட்டை விரலை நோக்கினால் அவருக்கு ஆவேசத்தால் புத்தி நிர்ண யமுண்டாகும் என்பதை அது காட்டு வதாகும். சுக்கிரமேடு மணிக்கட்டை நோக்கினால் அவர் மிகுந்த உணர் வுடையவராயிருப்பர் என்பதை அது காட்டுவதாகும். சுக்கிரமேடு சந்திர மேட்டை நோக்கினால் அவர் இந் திரியக் கூர்மையுடையவர் என்பதை அது குறிப்பதாகும். சுக்கிரமேடு கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடையிலுள்ள பாகத்தை நோக்கினால் அவர் இன்புறுவதில் பற்றுடையவர் என்பதை அது தெரிவிப்பதாகும்.

**கீழ் செவ்வாய் மேடு**

ஒருவர் கையில் கீழ்ச்செவ்வாய் மேடு சுக்கிரமேட்டை நோக்கினால் பாசத்தைத் தாங்கும் சக்தி அவருக்கு உண்டு என்பதை அதுகாட்டும். கீழ் செவ்வாய் குருமேட்டை நோக் கினால் அவர் கர்வத்தைத்தாங்கி நிற்கும் சக்தியையுடையவர். என்ப தைக்குறிக்கும். கீழ் செவ்வாய் மேல் கட்டை விரலை நோக்கினால் அவர் அபார புத்தி பலத்தைத் தாங்கி நிற்கும் சக்தியையுடையவர் என்பதை அது குறிக்கும்.

சக்தி

(தொடரும்)

# புதுமனையில் புதுப்பொலிவு பெறும் மட்டுவில் வடக்கு கண்ணகை முன்பள்ளி

சைவசித்தாந்த வாரிதி என வாழ்த்தப் பெற்றுவரும் ஓய்வு பெற்ற அதிபர் மட்டுவில் ஆ.நடராசா அவர்களின் பாரியார் இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தில் இருந்து ஓய்வு பெற்ற ஆசிரியை பாக்கியம் நடராசா நினைவாக மட்டுவில் வடக்கில் அமைக்கப்பெற்று நற்பணி நல்கி வரும் கண்ணகை முன்பள்ளி 18.03.2012 தொடக்கம் புதிய சொந்த கட்டடத்தில் சேவையை சிறப்பாக வழங்கவுள்ளது. இது பயனாளிகளுக்கு பெரும் வரப்பிரசாதம் இது வரை இம்முன்பள்ளி மட்டுவில் வடக்கு சனசமூக நிலையத்தில் பண்டிதமணி கணபதிப்பிள்ளை மண்டபத்தில் இயங்கி வந்தது.

முன்பள்ளிக் கல்வியின் அவசியத்தை நன்குணர்ந்து இப்பள்ளியை நிறுவிய சைவசித்தாந்த வாரிதி குடும்பத்தார் தம் பணியின் பரிமானத்தை விரிவு படுத்தி நீடு நிலைக்கப்பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தின் அருகே 4 1/2 பரப்பு நிலத்தை கொள்வனவு செய்து மலரும் உள்ளமும் வளரும் உடலும் உள்ள பாலருக்கு உச்சப் பயன்தரும் வண்ணம் வடிவமைத்து புதிய மனை நிர்மாணிக்கப்பெற்றமை நிறுவுனர் குடும்பத்தாரின் கல்விப்பணி அர்ப்பணிப்புக்கோர் எடுத்துக்காட்டெனலாம்.

நல்லைநகர் ஆறுமுகநாவலரால் ஆரம்பிக்கப் பெற்று மட்டுவில் கல்விச் சான்றோரால் முன்னெடுக்கப்பட்ட கல்வி, சமய, சமூகப் பணியின் பின்புலத்தில் வாழையடி வாழையாய் வந்த சைவசித்தாந்த வாரிதி திரு. ஆ.நடராசா குடும்பத்தவரால் தொடரப்படுவது நன்றிக்குரிய நற்பணியே பாடசாலையை திற சிறைச்சாலைகளை மூடு என்பதை சிரமேற்கொண்டு கல்வி வசதிகளையும் வாய்ப்புக்களையும் பெருக்குவதே கோடி புண்ணியம். கல்வி பெற்றோர், கற்க வசதி அற்றோர் கற்றுய்ய ஒல்லும் வகையில் உதவ உறுதி பூண்போமானால் நாம் மீண்டும் மிடுக்குடன் வாழவும் வாழ்விக்கவும் வழி ஏற்படுவது திண்ணம்.

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு

என்னும் பொய்யா மொழியின் பொருளுணர்ந்து அதனைத் தம் வாழ் நெறியாக கொள்வோர் வளமாக வாழ வழி காட்டும் வள்ளல்களாவர்.

முறை சார்ந்த கல்வித்திட்டத்தில் முன்பள்ளி கல்விப்பள்ளிகளும் இணைக்கப்பட்டு எல்லா சிறுவர்களுக்கும் முன்பள்ளி கல்வி வழங்கப்படுவது அவசியமாகும்.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பது இன்று மூன்று வயதுக்கும் ஐந்து வயதுக்கும் இடை ப்பட்டோரின் கல்வித் தேவையை வலியுறுத்தும் பொன் மொழியாகும். முதிர்ந்த ஒருவரின் ஆளுமை விருத்தி இப்பருவத் திலேயே ஆரம்பிக்கின்றதால் இப்பருவத்தா ரின் கல்வி அர்ப்பணிப்போடும் அன்போடும் ஆர்வத்தோடும் வழங்க ஆவன செய்யப்படுவது அவசியமாகும்.

எடுத்துக்காட்டாக இயக்கப்பட்டு வரும் மட்டுவில் வடக்கு கண்ணனை முன்பள்ளியை பின்பற்றி செயற்படின் நாம் விரைவில் இழப்புகளை ஈடுசெய்து கல்வியில் மறுமலர்ச்சி கண்டு தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழும் எதிர்காலத்தை எய்தி வளமாக வாழ வழி பிறக்கும் என்பதில் ஐயமில்லை.

**ஆர். எஸ்.நடராசா**
**(MA,P.G.D.E,SLEAS)**
**ஓய்வு நிலை அதிபர்,**
**பலாலி ஆசிரியர் கல்லூரி.**



நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளேயின் அழைப்பை ஏற்று ஜனாதிபதியின் பாரியார் சிராந்தி ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கந்தானை பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டார். ஜனாதிபதியின் பாரியார் கருத்திட்டத்தில் உருவான சிறிலிய சவிய திட்டத்தின் கீழ் நயனாலோக்கா கிராமத்தில் வசிக்கும் கண்பார்வையற்ற 70 பேரின் குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு உதவி வழங்கப்படுவதை படத்தில் காணலாம்.

# யாழில் திராட்சை செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் திராட்சை செய்கைக்கான அதிக விளைச்சலை கொடுக்கக்கூடிய புதிய இன திராட்சைகள் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட நிலையில் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட செய்கையாளர்களுக்கு இவை வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட விவசாய திணைக்கள உதவி விவசாயப்பணிப்பாளர் சிறி பாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம், ஊரெழு, இளவாலை, உரும்பிராய், மருதனார்மடம், இணுவில் என பல இடங்களிலும்கடந்த காலத்தில் திராட்சை செய்கை மிகவும் பிரபல்யமடைந்திருப்பதுடன் அதிக வருமானத்தையும் பெற்றுக் கொடுத்தது.

மீண்டும் திராட்சை செய்கையை ஊக்குவிப்பதற்காக இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட புதிய இன திராட்சை இனங்களான ஷராட், சொனக்கா என்ற இரு திராட்சை இனங்கள் செய்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

854 திராட்சை கன்றுகள் தெரிவு செய்யப்பட்ட திராட்சை செய்கையாளர்களுக்கு முன்னோடியாக வழங்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

இத் திராட்சை கன்றுகளை பெறுவதில் திராட்சை செய்கையாளர்கள் அதிக ஆர்வம் காட்டுவார்களாக இருந்தால் மேலும் இந்தியாவில் இருந்து திராட்சை கன்றுகள் கொண்டுவரப்பட்டு செய்கையாளர்களுக்கு வழங்கப்படுமெனவும் குறிப்பிட்டார்.

(அ-7)

# தேசிய சிறுவர் நாடக விழா

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் இலங்கை கலைக்கழகம், அரச நாடகக்குழு என்பன இணைந்து தேசிய சிறுவர் நாடக விழாவினை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

இப்பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாடசாலைகள், அறநெறிப்பாடசாலைகள், நாடக ஆர்வமுள்ள கலை நிறுவனங்கள் என்பன பங்குபற்ற முடியும். அவ்வாறு பங்குபற்ற விரும்புபவர்கள் பிரதேச செயலகத்திற்கு நாளைக்கு முன்னதாக விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-7)

# யுத்த நிறுத்தத்திற்கு இலங்கை அரசாங்கம் இணங்கவில்லை

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

யுத்த நிறுத்தம் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் இணங்கவில்லை என அமெரிக்கா அறிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்க திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளின் பிடியிலிருந்த பொதுமக்களை மீட்கும் நோக்கில் யுத்த நிறுத்தமொன்றை அமுல்படுத்த முயற்சிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் பொதுச்செயலாளர் பான் கீ மூனின் பிரதம அதிகாரி விஜய் நம்பியார் பொது மக்களை விடுவிப்பது குறித்து நடத்திய பேச்சுவார்த்தை எதிர்பார்த்தளவு வெற்றியளிக்கவில்லை என இலங்கைக்கான அப்போதைய அமெரிக்க தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்வதில் பயனில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் அறிவித்ததாகவும் தெரிவித்துள்ளது.

குறிப்பாக யுத்த நிறுத்தம் அறிவிக்கப்படுவதன் மூலம் புலிகள் மீளவும் தங்களை ஒழுங்கமைத்துக் கொள்ள வழிகோலும் என ஜனாதிபதியும் பாதுகாப்பு செயலாளரும் குறிப்பிட்டுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.பொது மக்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை இந்தியா சற்று அழுத்தமாகவே இலங்கை அரசாங்கத்திற்கு வலியுறுத்தியிருந்ததாக பிளேக் குறிப்பிட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

(அ-7)

# கைப்பணிப்பொருள் நிலையம் ஆரம்பம்

(கொழும்பு)

வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களிலுள்ள பெண்களின் நிலைமையை கவனத்திற் கொண்டு மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்பில் பனை உற்பத்தி கைப்பணிப்பொருள் நிலையம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.


பிரதேச சர்வோதய அமைப்பின் நிதியுடன் சர்வமத ஒன்றியத்தினால் நடத்தப்படும் இந்நிலையத்தினை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் இணைப்பாளர் க.தங்கேஸ்வரி, மட்டக்களப்பு பனை அபிவிருத்தி பணிப்பாளர் வே.தேவநாதன், சர்வோதய கிழக்கு மாகாண இணைப்பாளர் ஈ.எல்.ஏ.ஹரிஸ் ஆகியோர் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தனர்.

(அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 69

லெனின் சேனைக்கும் வோல்கவ் சேனைக்கும் இடையே 15 கி.மீ. இடைவெளிதான் இருந்தாலும் கடினமான கடமை இவற்றை எதிர் நோக்கியிருந்தது. பாசிஷ்டுகள் லெனின் கிராட் அருகே பெரும் சக்திகளை வைத்திருந்தன. தெற்கிலிருந்தும் தென்கிழக்கிலிருந்தும் நகரை முற்றுகையிட்ட வடக்குப்படை தொகுதியின் 18-வது ஜேர்மனியப் படையின் சுமார் 26 டிவிசன்களும் வடக்கே கரேல்ஸ்கி பூசந்தியின் முற்றுகை வளையத்தை மூடிய, பின்லாந்து படையில் 4 க்கும் கூடுதலான டிவிசன்களும் இருந்தன. முதலாவது விமானப்படை ஜேர்மனிய-பின்லாந்துத் துருப்புக்களின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தந்தது. எதிரியின் தற்காப்பு, குறிப்பாக ஷ்லிஸெல்புர்க்-சின்யாவின் முகப்பில் மிகப்பலமான தாயிருந்தது. இந்த முகப்பு, விரிந்து கிளைகளுடன் கூடிய பொறியியல் அமைப்புகளையும் டாங்கி எதிர்ப்பு மற்றும் காலாட்படை எதிர்ப்புத் தடைகளையும் கொண்ட பலம்மிகு போர்க்கள அரணாக ஜேர்மனியர்களால் மாற்றப்பட்டிருந்தது.



லெனின்கிராட் வெற்றியின் 40 -வது ஆண்டு நிறைவுவிழாவின்போது அமைக்கப்பட்ட வீரத்திருநகர் ஸ்தூபி

லெனின்கிராட் நகரம் 16 மாதங்கள் பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களால் முற்றுகையிடப்பட்டிருந்தது. நாள்தோறும் ஆயிரக்கணக்கான லெனின்கிராட் வாசிகள் உயிரிழந்தனர். நீரும் மின்சாரமும் இல்லாத ஒரு நிலையிலும் பட்டினியால் வாடிய போதிலும் இந்த வீரத்திரு நகர் ஆண்மையோடு எதிர்த்து நின்றது. நாடு முழுவதன் ஆதரவோடு இவற்றை எல்லாம் தாங்கி வெற்றிவாகை சூடியது.

நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்த போது சோவியத் படைத்தலைமை தனது சேம்ப்படைகளை கொண்டும் மற்ற திசைகளிலிருந்து யூனிட்டுக்களை மாற்றியமைத்ததன் மூலமும் பிரதான தாக்குதல் திசைகளில் இயங்கிய 67-வது மற்றும் 2-வது முக்கியத்தாக்குதல் படைகளை கணிசமாகப்பலப்படுத்தியது. இங்கே சக்திகளின் சமநிலை சோவியத் துருப்புகளுக்கு ஆதாயமாக இருந்தது. சோவியத் துருப்புகள் ஆட்களின் எண்ணிக்கையில் 4.5 மடங்கும் பீரங்கிகளில் 6-7 மடங்கும் டாங்கிகளில் 10 மடங்கும் விமானங்களில் 2மடங்கும் விஞ்சியது.

தாக்குதலுக்கு முந்திய இரவு சோவியத் விமானங்கள் எதிரியின் பீரங்கிநிலைகள், நிர்வாக கேந்திரங்கள், இருப்புப்பாதைமையங்கள் உட்பட எதிரியின் தற்காப்பின் மீதே பெருமளவு குண்டு வீச்சுக்களை நடத்தின. 1943 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம்திகதி பீரங்கிப்படை மற்றும் விமானப்படைப் பூர்வாங்கத் தாக்குதலுக்குப்பின் இரு சேனைகளின் முக்கிய தாக்குதல் படைத் திரட்டுக்களும் தாக்குதலில் இறங்கின. நாள் முடிவில் இரு படைத்திரட்டுக்களும்

# யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை


எதிரியின் எதிர்ப்பைத் தகர்த்து எதிரெதிர் திசைகளிலிருந்து தலா 3 கி.மீ. தூரம் முன்னேறின.

எதிரியின் தற்காப்பை உடைப்பதில் கரையோரப்பீரங்கிப்படை மற்றும் செம்பதாகை விருதுபெற்ற பால்டிக் கப்பற்படையின் கப்பல் பீரங்கிப் படை உட்பட, பீரங்கிப்படையும் விமானப்படையும் தரைப்படைகளும் டாங்கிகளும் கணிசமான உதவி நல்கின. 7 நாள் கடும் சண்டைகளுக்குப்பின் ஷ்லிஸெல்புர்க் நகரம் விடுவிக்கப்பட்டது. ஜனவரி 18 ஆம் திகதி இரண்டு சேனைகளின் துருப்புகளும் ஒன்றிணைந்தன. லெனின் கிராட் நகரின் முற்றுகை உடைத் தெறியப்பட்டது. லதோகா ஏரியின் தென் கரையோரமாக 8-11 கி.மீ. அகலத்தில் அமைக்கப்பட்ட இடைவெளி நாட்டுடன் லெனின் கிராட்டின் நேரடி தரைத் தொடர்பை புனரமைத்தது.

17 நாட்களில் கரையோரமாக இருப்புப்பாதையும் வாகனங்கள் செல்வதற்கான சாலையும் இடப்பட்டன. பெப்ரவரி 6 ஆம் திகதி 36 கி.மீ. நீளமுடைய ஷ்லிஸெல்புர்க்-பல்யானி இருப்புப்பாதை வழியே புகை வண்டிகள் லெனின் கிராட் நகருக்குச் சென்றன. லதோகா ஏரியின் வழியாகச் சென்ற பனிக்கட்டிப் பாதையும் தொடர்ந்து புழக்கத்தில் இருந்தது. சோவியத்தின் சண்டை விமானங்கள் இதை மூடிமறைத்து பாதுகாப்பளித்தன. லெனின் கிராட் வாசிகளுக்கும் போர் வீரர்களுக்கும் தேவையான உணவுப் பொருட்கள் இராணுவத்தளவாடங்கள் மற்றும் ஆயுதங்களின் சப்ளையை மேம்படுத்த இது உதவியது.



லெனின் கிராடிலுள்ள ஹெர்மிரேஜ் நூதன சாலையூடாக முன்னணி போர்முனைக்கு இரகசியமாக நகரும் சோவியத்தின் பனி சறுக்கு வீரர்படை (லெனின் கிராட் முற்றுகையிலிருந்தபோது)



லெனின்கிராடை பாதுகாத்ததிற்காக 14 இலட்சத்து 96 ஆயிரம் சோவியத் மக்களுக்கு பதக்கம் அளித்துக் கௌரவிக்கப்பட்டனர்

லெனின்கிராட் நகர முற்றுகையைப்பிளந்தது, லெனின்கிராட் நகருக்கான சமரில் திருப்புமுனையாக அமைந்தது. இந்தப் போர்த் தந்திர திசையில் இராணுவ நடவடிக்கைகளில் முன்முயற்சி சோவியத் துருப்புகளுக்கு வந்தது.

1943 ஜனவரி 12 முதல் 24 வரை 8-வது இத்தாலிய மற்றும் 2-வது ஹங்கேரியப்படைகளை சுற்றி வளைத்து, முறியடிப்பதற்காக வரோனிஸ் சேனையால் ஒஸ்த்ராகோஷ்ஸ்க்- ரொஸ்ஸா ஷான்ஸ்க் நடவடிக்கை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. தனபாஸை விடுவிப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் ஏற்பட்டன.



லெனின்கிராட், ஜேர்மன் முற்றுகைக்குள் இருந்தபொழுதை நினைவு கூறும்- ஓவியம்

1943 ஜனவரி 24 முதல் பெப்ரவரி 5 வரை பிரியான்ஸ்க் மற்றும் வரோனிஷ் சேனைகளின் பக்கவாட்டுத் துருப்புகள் வரோனிஷ்-கஸ்தோர்னேன்ஸ்க் நடவடிக்கையை மேற்கொண்டு 40 ஆயிரம் பேரடங்கிய எதிரியின் படைத் திரட்டைச் சுற்றி வளைத்து வரோன்ஷ் நகரையும் வரோன்ஷ் பிராந்தியத்தையும் விடுவித்தன. பெப்ரவரி 15 முதல் மார்ச் 1வரை வடமேற்கு சேனையின் துருப்புகள் ஜேர்மனியர்களின் திமியான்ஸ்க் தாக்குமுனையை அழித்தன. ஆனால், நடவடிக்கைக்குப் போதுமான அளவு சக்திகளும் சாதனங்களும் குறிப்பாக விமானங்களும் டாங்கிகளும் இல்லாததால் எதிரியின் படைத்திரட்டைச்சுற்றி வளைக்க இயலவில்லை.

சில நாட்களுக்குப்பின் (1943 மார்ச்2-ஏப்ரல்1) கலீனின் மற்றும் மேற்கு சேனைகள் எதிரியின் ரிஷேவ்-வியாஸ்மா முகப்பை அழித்து 130-160கி.மீ. முன்னேறி, இதன் மூலம் மாஸ்கோ போர்த்தந்திர திசையில் சோவியத் துருப்புகளின் நிலையை வலுப்படுத்தின.

(தொடரும்)


# 12 இராசிக்காரர்களுக்கு சூரிய தோஷ பரிகாரங்கள்!

**சூரியன் மேடத்தில் இருந்தால்...**

இளைமைப்பருவத்தில் தந்தைக் கும் மகனுக்கும் ஒத்துவராது. சுக்ரன் 7 இல் இருந்தால் தப்பித்து விடலாம். புத்திசாலித்தனம், நோயற்ற வாழ்வு, அரசியல் மேன்மையான பதவி பெறலாம்.

இளமைப் பருவத்தில் திருமணம் செய்து கொள்வது நல்ல பரிகாரம். ஏழாம் இடம் சுத்தமாக இருப்பது விரும் பத்தக்கதல்ல.

பொதுமக்களுக்கு இல வசமாக தண்ணீர் பெறும் விதமாக வசதி கள் செய்து கொடுப் பது சிறந்த பரி காரம்.




**சூரியன் இடபத்தில் இருந்தால்...**

இவர்களுக்கு ஓரளவு செல்வ நிலை சுலபமாக வந்தடையும். நகைகள், ஆபரணங்களை அணியும் வாய்ப்புக்கள் ஏற்படும். வாகன யோகம் வரும். இவர் ஜனன மான பின்பு குடும்பத்தில் செழிப்பு நிலை தெரியவரும். இனிமையான பேச்சு இருக்கும்.

சிலருக்கு பிற கிரக இராசிநாதர் களின் தன்மையால் கெடுதல் தெரிய வந்தால் தேங்காய், எண்ணெய் ஆகிய வற்றை ஆலயங்களுக்கு தரலாம். ஞாயி றன்று சூரியனை வணங்குவதால் தீமை கள் அகலும்.

**சூரியன் மிதுனத்தில் இருந்தால்...**


இவர்களுக்கு அரசு சார்ந்த உதவிகள் கிடைக்கப் பெறும். அண்டை அயலாரின் உதவிகள் தக்க தருணத்தில் கிடைக்கப் பெறும். குறைந்த வருமானமுடைய குடும் பத்தில் பிறந்தாலும் பின்னாளில் நல்ல வசதிகளைப் பெருக்கிக் கொள்வார்கள்.

இருப்பினும் சகோரதர- சகோ தரி உதவி கிடைக்காது. நேர்மை, நாணயத்தை கடைப்பிடிக்க வேண் டும். 11 ஞாயிற்றுக் கிழமைகள் ஒரு பொழுது உப்பு சேர்க் காத உணவு உட் கொள்ள வேண்டும். தாய், பாட்டி போன்ற வர்களிடம் ஆசிபெற வேண்டும்.

**சூரியன் கடகத்தில் இருந்தால்...**

பாரம்பரிய உத்தியோகம், தொழில் ஒத்துவராது. தனித்தன்மை உயர்வைத் தரும்., பிறருக்கு உதவி செய்வதால் புகழும் கஷ்டமும் ஏற்படும். குடும்பத் தாருக்கு பேருதவியாக இருப்பார்கள். சனி ஏழிலும் சந்திரன் லக்னத்திலும் இருந்தால் சில முட்டுக் கட்டைகள் ஏற்படும்.

பார்வையற்றோருக்கு உதவிட வேண்டும். கழுத்தில் செம்பினால் செய்த வளையம் அணிந்து கொள் ளலாம். சூரியனுக்கு செவ் விளநீர் அபிஷேகம் செய் வது போதுமானது.




**சூரியன் சிம்மத்தில் இருந்தால்...**

கல்வி கற்கும் காலங் களில் சிறந்த மாணவராக ஜொலிக்கலாம். அரசுப் பணிகள் உங்களை வர வேற்று வேலை வாய்ப்பைத் தரும். இவர்களுடைய ஜன னம் குடும்பத்தாருக்கு பண வரைவை ஏற்படுத்தும். குடும்பத்தாருக்கு தன் னையே அர்ப்பணிக்கும் நற்குணம் மேலோ ங்கும்.ஆண் குழந்தை பெற்றவர்களின் தலைமகன் உதவிபுரிய மாட்டார். தனிக் குடித்தனம் போய்விடுவார்.

செந்நிற முக ஆஞ்சநேயரை வணங் கலாம். வசதி படைத்தோர் மூன்று நாய் களை வளர்க்கலாம். சொன்ன சொல்லை காப்பாற்ற வேண்டும்.

**சூரியன் கன்னியில் இருந்தால்...**

எதிரிகளை திறமையாக கையாளும் ஆற்றல் மிகையாகக் காணப்படும். இந்த குழந்தை பிறந்த பின் வியாபாரம் பெரு கும் தொழில் மேன்மை பெறும். ஆனால், இந்தக் குழந்தை எப்போதும் ஆரோக்கியப் பின்னடைவால் கவலை ஏற்படச் செய்யும். புதன் 12 இல் இருந்தால் இரத்த அழுத்தம் ஏற்படும்.

வீட்டில் வடகிழக்கு மூலையில் ஆற்று நீரை இருக்கச் செய்ய வேண் டும். வீட்டு வாசலில் நான்கு சம சதுர செம்புத் துண்டைப் பதித்தல் வேண்டும். நீல ஊமத்தம் செடியின் கீழ்த்திசை நோக்கிச் செல்லும் வேரினை பூஜை செய்து வெட்டி எடுத்து வந்து சூரிய ஒளி யில் காயவைத்து அதை துண்டுகளாக்கி சிவப்பு நூலில் கட்டி இடுப்பில் அணிந்து கொள்ளலாம்.

(தொடரும்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பூக்களும் அவற்றின் மருத்துவ குணங்களும்

**வில்வம்பூ**

தாவரவியற் பெயர்-Aegle marmelos

குடும்பம்- Rutaceae

இப்பூக்களை ஊறல் நீராக குடித்தால் உடல் குளிர்ச்சி அடையும்.

வில்வம் பூக்களை உலர்த்தி அதே யளவு கொத்தமல்லி சேர்த்து இளங்கறுப் பாக வறுத்து கோப்பிப் பொடியாக இடி த்து அரித்து வைத்துத்துக் கொள்ளவும். வெப்பகாலத்திற்கு உகந்த கோப்பி பொடி யாகும். உடலிற்கு வன்மையையும் கொடுக்கம்.

**வாழைப்பூ**


தாவரவியற் பெயர்-Musa sapientu

குடும்பம்-Musaceae

இதன் இளம்பூவை புட்டிட்டுச் சாறு எடுத்து பனங்கற்கண்டு சேர்த்து பெரும் பாடு உடையவர்கள் பயன்படுத்தலாம். (மாதவிடாயின் போது கூடுதலாக இரத் தப்போக்கு உள்ளவர்கள்)

அதன் சாற்றுடன் தேன் சேர்த்து உட்கொள்ள வெள்ளை சாய்தல் தீரும்.





பூவை இடித்து சிற்றாமணக்கு நெய் விட்டு வதக்கி கை, கால் எரிச்சலுக்கு ஒற்றடமிட்டு பின்பு இதயே வைத்துக் கட்டலாம்.

**பூவரசம் பூ**

தாவரவியற்பெயர்-Thespesia populnea

குடும்பம்- Malvaceae

இப்பூக்களை நன்கு கழுவி அரைத்து சொறி சிரங்கிற்கு பூசலாம்.

**புங்கம் பூ**

தாவரவியற் பெயர்-Pongamia pinnata

குடும்பம்- Leguminosea


இப்பூக்களுடன் நல்லெண்ணெய் சேர்த்து தைலம் தயாரித்து பூச கரப்பான் படை நீங்கும்.

**நுணாப் பூ**

தாவரவியற்பெயர்-morinda tinctoria

குடும்பம்-Rubiaceae

இப்பூக்கள் 10ஐ எடுத்து நிலவேம்புச் சாற்றுடன் அரைத்து மாதவிலக்கு வந்த 3 நாட்கள் காலை உண்ண கருப்பை





கோளாறுகளால் கர்ப்பம் அடையாத பெண்கள் கருத்தரிக்கலாம்.

**வேப்பம் பூ**

தாவரவியற்பெயர்-Azadirachta indica

குடும்பம்- Meliaceae

இப் பூக்கள் இரசம் வைத்து குடித்தால் நோய்கள் உடலை அணுகாமல் தடுக்கும்.

ஒரு கைப்பிடி வேப்பம் பூக்களுடன் மிளகு சேர்த்து மைபோல அரைத்து சுண் டங்காயளவு உருட்டி விழுங்கக் கொடுத் தால் குடற்பூச்சிகள் மலத்துடன் வெளி யேறும்.

**வெண்பருத்திப் பூ**

தாவரவியற்பெயர்-Gossypium herbaceum

குடும்பம்-Malvaceae

வெண்பருத்திப் பூக்களை தண்ணீர் விடாமல் அரைத்து தீக் கொப்பளத்தின் மீது பூசி வரக் குணமாகும்.

**செம்பருத்திப் பூ**

தாவரவியற்பெயர்-Gossyp iumarboreum

குடும்பம்- Malvaceae

இதன் பூ இதழ்களை பசுவின் பாலில் ஊறவைத்து பிழிந்து எடுத்த சாற்றை

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

குழந்தைகளின் கண்நோய்களுக்கு வழங்கலாம்.

**செவ்வரத்தம் பூ**

தாவரவியற்பெயர்-Hibiscus rosasinensis

குடும்பம்-Malvaceae

இப்பூவை பச்சடி செய்து சாப்பிடலாம். அல்லது குடிநீர் காய்ச்சி அல்லது ஊறக் குடிநீர் ஆக்கி 30 மில்லி கொடுத்துவர சிறுநீரக கோளாறுகள், பெரும்பாடு நீங்கு வதோடு உடலுக்கு குளிர்ச்சியும் தரும்.

பூவின் மொட்டை உலர்த்தி பொடித்து ஆண்மை பெருக்கவும் சிறுநீர் எரிச்சல் நீக்கவும் பயன்படுத்தலாம்.

செம்பருத்திப்பூவின் சாற்றிற்கு சம அளவு தேங்காய் எண்ணெய் சேர்த்து அடுப்பேற்றி நீர் சுண்டும் வரை சிறு தீயில் எரித்தெடுத்து காற்றுப்படாமல் ஒரு குப்பியில் அடைத்து வைத்து தலையில் தடவி வர முடி கருமையாகும்.


(தொடரும்)




# சிறுவர் அரங்கம்

39

## புத்திசாலியான மருமகள்



ராமதாசர் ஒரு பெரிய வியாபாரி.அவருடைய ஒரே மகன் விஜயன்.அந்த ஊரிலே வசித்து வந்த மற்றொரு பெரிய வியாபாரியின் மகளான சீலவதி மிகவும் அழகாகவும் மிக புத்திசாலியாக இருப்பதாகவும் அறிந்த ராமதாசர் அவளை தன் ஒரே மகனுக்கு மணமுடித்து வைத்தார். இருவரும் மகிழ்ச்சியா வாழ்ந்து வந்தனர்.

ஒருநாள் நள்ளிரவில் தனது மருமகள் கையில் ஒரு குடத்துடன் வீட்டை விட்டு சத்தமின்றி இரகசியமாக வெளியேறியதையும் வெகு நேரம் கழித்து மீண்டும் திரும்பியதையும் கண்ட ராமதாசர் திடுக்கிட்டார். இது போன்ற மர்மமான மருமகள் தனக்குத் தேவையில்லை என்று முடிவு செய்த அவர் மறுநாளே தன் மகனிடம் அவளைப் பிறந்த வீட்டில் விட்டு விடும்படி கூறினார்.

தந்தையின் உத்தரவு மகனுக்குப் பிடிக்காததால் அவன் அவளைப் பிறந்த வீட்டிற்கு அனுப்பவில்லை.இதனால் ராமதாசர் அவளைத் தானே அவள் பிறந்த வீட்டிற்கு கொண்டு விட முடிவு செய்தார்.மறுநாளே சீலவதியை அழைத்து கொண்டு ராமதாசர் கிளம்பி விட்டார். செல்லும் வழியில் ஒரு ஓடையைக் கடக்க வேண்டி வந்தது. அவர் சீல்வதியிடம் "செருப்

## அம்புலி மாமா கதைகள்

புகளை கழற்றி கையில் எடுத்துக் கொண்டு நட!" என்று உத்தரவிட்டு தானும் அதுபோலவே செய்தார்.ஆனால் சீலவதி செருப்புக்காலுடனே ஓடையைக் கடந்தது ராமதாசருக்கு அதிருப்தியை உண்டாக்கியது.

சிறிது தூரம் சென்ற பிறகு ஒரு வயல் நன்கு விளைந்திருந்ததைக் கண்ட ராமதாசர் "நிலச் சொந்தக்காரனுக்கு நல்ல இலாபம் கிடைக்கும்!" என்றார். உடனே. சீலவதி "இலாபம் கிடைத்தால் மட்டும் போதுமா? வந்த பணம் எதுவும் தங்காமல் பாழாகப் போகிறது!"விமர்சனம் செய்தாள்.

அவர்கள் மேற்கொண்டு பயணம் செய்து கொண்டே ஒரு நகரத்தின் வழியே சென்றனர். அழகாக இருந்த அந்த நகரத் தைக் கண்ட ராமதாசர் "என்ன அழகான நகரம்!"என்றார்.உடனே சீலவதி "அழகாயிருந்து என்ன பயன்? எதிரிகளின் தாக்குதலுக்குட்பட்டு நாசமாகும்!" என்று கூறினாள். சில மணிநேரத்துக்குப் பிறகு நண்பகல் வேளையில் ஓய் வெடுக்க ராமதாசர் ஒரு ஆலமரத்தடியில் அமர்ந்தார். சீலவதி மரத்திலிருந்து சற்றுத் தொலைவில் சென்று அமர்ந்தாள். இதனால் சீலவதியின் மீது வெறுப்பு அதிகரித்தது. அதன் பிறகு ஒரு மாட்டு வண்டியை அமர்த்திக் கொண்டு இருவரும் பயணம் செய்தனர்.



செல்லும் வழியில் தனது நண்பர் வீட்டில் சிறிது நேரம் தங்கி விட்டு உணவருந்திய பின் ராமதாசர் மாட்டு வண்டியில் படுத்துக் கொண்டார்.சீலவதி வண்டியின் நிழலில் அமர்ந்து கொண்டாள். அப்போது வீட்டருகில் இருந்த ஒரு மரத்தில் ஒரு காக்கா "கா... கா" என்று கரைய ஆரம்பித்தது.

சீலவதி அதை நோக்கி "நீ சொல்வது என் காதில் விழகிறது.ஆனால் என்ன பிரயோசனம்? ஒரு முறை தவறு செய்ததால் என் புருஷன் வீட்டை விட்டு வெளியேற நேர்ந்தது. மறுமுறையும் தவறு செய்தால் என் புருசனை நிரந்தரமாக நான் பிரிய வேண்டிவரும்" என்றாள்.

மருமகள் காக்காவுடன் பேசியதைக் கேட்ட ராமதாசர் அளவற்றவியப்படைந்தார். உடனே வண்டியில் இருந்து வெளிவந்து "மருமகளே! நீ இப்போது கூறிய தன அர்த்தம் என்ன?"என்று கேட்டார். "என்னவென்று சொல்வேன் தந்தையே! எனக்குள்ள விசேஷ சக்திகள் எனக்கு துன்பத்தைத் தான் கொடுக்கின்றன.

எனக்கு மிருகங்கள், பறவைகள் ஆகியவற்றின் மொழி தெரியும்!" என்றாள். தொடர்ந்து "ஒரு நாள் நள்ளிரவு வீட்டை விட்டு நான் தனியே குடத்துடன் சென்றதைப் பார்த்திருப்பீர்கள். அன்று நான் ஏன் அவ்வாறு செய்தேன் தெரியுமா? ஒரு குள்ளநரி அப்போது ஊளையிட்டுக் கொண்டே "ஆற்றில் ஒரு பெண்ணின் பிணம் மிதக்கிறது அதன் உடலில் ஏராளமான நகைகள் உள்ளன!" என்று தெரிவித்தது.அதைக் கேட்டவுடன் நான் யாருக்கும் சொல்லாமல் குடத்தை எடுத்துக் கொண்டு ஆற்றிற்குச் சென்றேன். ஆற்றில் நீந்திச் சென்று பிணத்தின் உடலிலிருந்து நகைகளைக் கழற்றி குடத்தில் இட்டு குடத்தை நம் வீட்டுத் தோட்டத்தில் புதைத்து வைத்து விட்டேன்.

ஆனால் என் செய்கையைத் தவறாகப் புரிந்து கொண்ட நீங்கள் என்னை வீட்டை விட்டே வெளியேற்றி விட்டீர்கள். இப்போது அந்த காக்கா இதோ இந்த மரத்தின் அடியில் புதையல் இருக்கிற தாம் என்று சொல்லி முடிந்தாள். உடனே ராமதாசர் மரத்தின் அடியில் தோண்ட அங்கு புதையல் கிடைத்தது.

உடனே அவர் "மருமகளே! உன்னைத்தவறாக புரிந்து கொண்டேன்.வா நாம் வீட்டிற்குச் செல்வோம்!" என்று கூறி சீலவதியை அழைத்துக் கொண்டு தன் வீடு திரும்பலானார். திரும்பும் வழியில் அதே ஆலமரம் தென்பட்டவுடன் அவர் அவளை நோக்கி "சீலவதி! வரும்போது நான் இதனடியில் ஓய்வெடுக்க நீ விலகி அமர்ந்த தன் காரணம் என்ன?"



"அப்பா! மரத்தடியிலுள்ள பொந்துகளில் பாம்புகள் இருக்கலாம். தவிர மரத்தில் அமரும் பறவைகள் நம் மீது எச்சமிடும்" என்றாள். மேற்கொண்டு பயணம் செய்கையில் அதே நகரம் மீண்டும் வந்தது. உடனே சீலவதி "பாதுகாப்பில்லாத இந்த நகரத் தின் மீது எதிரிகள் படையெடுத் தால் இதை அவர்கள் எளிதாகக் கைப் பற்றி விடுவார்!" என்றாள்.

பின்னர் நன்கு விளைந்த வயல் தென்பட்டது.அவள் அதைப் பார்த்ததும் "இந்த நிலச் சொந்தக்காரன் விளைச்சலை விற்று அதை நல்வழிக்காகப் பயன்படுத்தினால் தான் அவனுக்கும் இலாபம் கிடைக்கும்" என்று விளக்கம் கொடுத்தாள்.

மேற்கொண்டு திரும்பும் வழியில் அந்த ஆறு குறுக்கிட்டது.ஆற்றைக் கடந்ததும் சீலவதி "ஆற்றில் சரளைக் கற்கள் உள்ளன. தவிர ஆற்றில் சிறிய ஜீவராசிகள் உள்ளன. ஆகையால் தண்ணீரில் நடக்கும் போது கண்டிப்பாக செருப்பு அணிய வேண்டும்" என்று விளக்கம் தந்தாள். வீட்டை அடைந்தவுடன் முதல் காரியமாக பணப் பெட்டியின் சாவியை அவளிடம் கொடுத்ததுடன் நிர்வாகப் பொறுப்பையும் அவளிடமே கொடுத்து விட்டார்.

அந்த சமயம் ராஜா ஒரு புது மந்திரியை நியமிக்க விரும்பினார். அதற்காக நாட்டிலுள்ள பலரை தேர்வு செய்ய அழைத்தார். சீலவதியின் கணவன் விஜயனும் சீலவதியுடன் தலைநகரை அடைந்து மன்னனின் தர்மசாலையில் தங்கினான். அன்று தேர்விற்கு வந்தவர்களிடம் ராஜா "மன்னனை காலால் உதைப்பவனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?" என்று கேட்டார். ஒருவன் அவனை நன்கு சவுக்கால் அடிக்க வேண்டும் என்று ஆளுக்கு ஆள் தங்களுக்குத் தோன்றியதையெல்லாம் கூறிக்கொண்டிருந்தனர்.

உடனே விஜயன் ஓடோடி வந்து தன் மனைவி சீலவதியிடம் அதற்கு சரியான பதில் என்ன என்று கேட்டான். அதற்கு சீலவதி "ராஜாவை யாராவது காலால் உதைக்க முடியுமா? அவ்வாறு யாராவது செய்தார்கள் என்றால் அது அவருடைய குழந்தையாக இருக்க வேண்டும்!"என்று கூறினாள்.

உடனே விஜயன் மன்னிடம் சென்று "மகாராஜா! காலால் உதைத்தவர் மீது அதிக அன்பு செலுத்த வேண்டும்!" என்றான். இதைக் கேட்ட ராஜா அவனையே மந்திரியாக தேர்வு செய்தார்.

# யுத்தக்குற்றச்சாட்டுக்களை முன்வைப்போர் கண்ணாடியில் தமது முகத்தை பார்க்கவேண்டும்

## சஜித் பிரேமதாச கருத்து



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் உத்தரவினை மீறி கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச ஜெனீவா அமர்வு குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவை அமர்வுகள் தொடர்பில் கருத்துக்களை வெளியிட வேண்டாம் என ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

எனினும் உத்தரவினை மீறி சஜித் ஜெனீவா அமர்வு குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கா தேவையின்றி இலங்கை உள் விவகாரங்களில் தலையீடு செய்வதாக சஜித் பிரேமதாச குற்றம் சாட்டியுள்ளார்.

உறுப்பு நாடுகளின் உள்விவகாரங்களில் தலையீடு செய்வது ஐக்கிய நாடுகளின் பிரகடனங்களை மீறும் செயலாகும். உறுப்பு நாடுகளின் பௌதீக ஒருமைப்பாடு மற்றும் அரசியல் சுதந்திரம் ஆகியவற்றில் தலையீடு செய்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கை மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை முன் வைக்கும் தரப்பினர் கண்ணாடியில் தங்களது முகத்தை பார்த்துக் கொள்ள வேண்டும் என சஜித் தெரிவித்துள்ளார்.

நாடு, சர்வதேச ரீதியான அழுத்தங்களை எதிர்நோக்குவதற்கு தற்போதைய ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளே காரணம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

போர் இடம்பெற்ற பகுதிகளில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு கிட்டிய அரிய சந்தர்ப்பத்தை அரசாங்கம் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள தவறியுள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# யுத்தத்தை வென்ற சிங்கக்குட்டிகள் அமெரிக்காவின் தடைக்கு பயப்படோம்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

தேவையற்ற அழுத்தங்களை அமெரிக்கா பிரயோகிக்கின்ற பட்சத்தில் அமெரிக்காவுக்கு எதிரான நாடுகளுடன் இலங்கை கூட்டுச் சேர்ந்து விடும் என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க பயமுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து உள்ளது. இந்நிலையிலேயே அமைச்சரின் இக்கருத்து முக்கியம் பெற்று உள்ளது.

அமெரிக்காவுக்கு நண்பர்கள் மாத்திரம் அல்லர். எதிரிகளும் உள்ளனர். அமெரிக்கா அளவுக்கு மீறி நடக்கின்ற பட்சத்தில் அமெரிக்காவின் எதிரிகளுடன் இலங்கை சேர வேண்டி ஏற்பட்டு விடும்.

என்னதான் இலங்கைக்கு எதிராக பொருளாதார தடையை அமெரிக்கா கொண்டு வந்தாலும் இலங்கை மக்களின் பெருமையையும் மூன்று தசாப்த கால யுத்தத்தை வென்ற இராணுவத்தின் பெருமையையும் இல்லாமல் செய்து விட முடியாது என்றார். (அ-2)

# கட்சியை சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான் வேலைவாய்ப்பா?

## பொன். செல்வராசா எம்.பி. கேள்வி

வெளிநாட்டு இராஜதந்திரிகளின் ஆலோசனை மற்றும் கல்விமான்கள், மக்களின் ஆலோசனையை பெற்றுத்தான் கூட்டமைப்பு ஜெனீவா செல்வதில்லை என தீர்மானித்தது. அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதற்காகவோ அல்லவென பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்துள்ளார். மட்டு. களுவாஞ்சிக்குடி சைவ மகா சபையின் 59 ஆவது ஆண்டு நிறைவும் அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் அண்மையில் களுவாஞ்சிக்குடி சைவ மகா சபை தலைவர் சி. சின்னையா தலைமையில் இடம்பெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜெனீவா மாநாட்டில் கலந்து கொள்ளும் அத்தனை நாடுகளுடனும் எமது கூட்டமைப்பு தலைவர்கள் அந்தந்த நாடுகளுக்கு சென்று சகல விடயங்களையும் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

இங்கிருந்தாலும் அங்கு என்ன நடைபெறுகின்றது என்பதை ஒவ்வொரு நிமிடமும் அவதானித்து அவற்றுக்கு தேவையான பதில்களை உடனுக்குடன் அனுப்பிக் கொண்டிருக்கின்றோமே தவிர நாங்கள் ஒருபோதும் பாராமுகமாக இருக்கவில்லை.

இவ்வளவு காலமும் தமிழ் மக்கள் எம்மிடம் வைத்துள்ள நம்பிக்கையை நாங்கள் ஒருபோதும் இழக்கவில்லை. இழக்கவும் மாட்டோம் என தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இந்த நாட்டிலே ஏறக்குறைய 75 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் இருக்கின்றனர். இவர்களின் பிரச்சினையை தீர்க்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கின்றது.

கடந்த 2004 ஆம் ஆண்டு சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வேலையற்ற பட்டதாரிகள் 48 ஆயிரம் பேருக்கு ஒரே தினத்தில் வேலை வழங்கினார்.

இந்த நிலையில் 2005 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஏறக்குறைய 75 ஆயிரம் பட்டதாரிகளில் ஒரு பட்டதாரிக்கு கூட வேலை வழங்க முடியாத இந்த அரசாங்கம் இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கத்துவம் பெற்றால் வேலைவாய்ப்பு என்று கூறுகின்றது.

கட்சியை சேர்ந்தவர்களுக்குத்தான் வேலை என்றால் ஏனையவர்கள் யார்? அவர்கள் இந்த நாட்டின் பிள்ளைகள் இல்லையா? ஒரே இனம் ஒரே நாடு என கூறும் அரசாங்கம் பட்டதாரிகள் நியமனத்தில் மட்டும் ஏன் மாற்றாந்தாய் நிலையை காட்டுகின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# போதைப்பொருள் வர்த்தகர் கடத்தல்

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் பாரியளவில் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் தெமட்டகொட பிரதேசத்தில் வைத்து கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகஸ்புர மாலு பியன்த என்னும் நபரே இனந்தெரியாத ஆயுதக் குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். சில காலங்களுக்கு முன்னர் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த பிரபல பாதாள உலகக்குழுத் தலைவரான தெமட்டகொடகமாலின் பிரதான சீடராக மாலு பியன்த கருதப்படுகின்றார்.

குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்த போது இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செய்யப்பட்டுள்ளார். (அ-2)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## இயேசுவின் வழியில் விடுதலை பெறுவோம்



அருட் சகோதரர் றமேஸ் அ.ம.தி

மனிதம் வாழ வேண்டும். அதுவும் முழுமையாக வாழ வேண்டும். குறைவில்லாமல் வாழ வேண்டும். மதிப்போடு வாழ வேண்டும். மாண்போடு வாழ வேண்டும். இதன் மூலம் இவ்வுலகில் புனிதம் பிரதிபலிக்க வேண்டும் என்பதுதான் மனிதனைப் படைத்த இறைவனின் நோக்கமா கும்.ஆனால், மனிதம் இன்று சிதைக்கப்படுகின்றது, சீரழிக்கப்படுகின்றது. முழு மனிதர்களாக வாழ்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகளெல்லாம் முளையிலேயே கிள்ளி எறியப்படுகின்றன.

இன்றைய சூழலில் மனிதன் மனிதனை இனத்தால், வர்க்கத்தால், சாதியால், சமயத்தால், தொழிலால், பாலியலால் பிரித்துப் பார்க்கின்றான். கொடிய யுத்தக் கருவிகளைக் கொண்டு சிதைக்க முனையும் போது அதனால் தானும் சிதைந்து போகின்றான். இந்த அவல நிலையில் இருந்து மனிதனை மீட்டு அவனுக்கு உண்மை விடுதலையை கொடுத்து அவனுக்கு வாழ்வளிக்க கூடியவர் யார்? எமக்கு உண்மை விடுதலையை தர வல்லவர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே!

விடுதலை நாயகன் இயேசுவின் காலத்திலும் மக்கள் அடிமைகளாகவே வாழ்ந்தனர். பணித் தொடக்கத்திலேயே அவருடைய இலட்சியத்தை வெளியிட்ட அவர் மக்கள் மீது அக்கறை கொண்டவராய் அக்கால சமுதாயத்தில் உள்ள பிரச்சினைகளை நன்கு அறிந்து மக்களின் துன்பத்திற்கு காரணமான அநீத அமைப்புக்களை வன்மையாகக் கண்டித்தார்.

தெளிவான சிந்தனையும் கூர்மையான தொலைநோக்கும் பரந்த ஞானமும் நேர்மையும் சுதந்திரமும் உள்ளவராக புதியதொரு சமுதாயத்தை படைக்க தன்னையே முழுமையாக அர்ப்பணித்தார். இன்று எமது நாட்டில் உள்ள சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளில் மக்களின் நிலையறிந்து செயற்பட நாம் அழைக்கப்படுகிறோம். போரின் வடுக்களையும் அதன் வலிகளையும் தங்கள் வாழ்விலே சுமந்தவர்களாக நாளாந்த நிகழ்வுகளிலும் அதன் நிழலையே அனுபவிப்பவர்களாகவிருக்கும் எம் மக்கள் தங்கள் வாழ்வில் அனைத்தையும் இழந்து அடிமைகளாக வாழ்வில் ஒடுங்கிப்போய் தங்களை இந்த நிலையில் இருந்து விடுவிக்க யார் வருவாரென கதறுகின்ற போது எங்களின் பதில் என்ன?

# கடமைக்கு வருகின்றன மோப்ப நாய்கள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குற்றச்செயல்கள் இடம்பெறுவதனை தடுக்க மோப்ப நாய்கள் ஈடுபடுத்தப்படவுள்ளன.

குறிப்பாக வடக்கு,கிழக்கின் கரையோரப் பகுதிகளில் போதைப் பொருள் கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகக் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளை தடுப்பதற்காக பயிற்சி பெற்ற மோப்ப நாய்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நூறுக்கும் மேற்பட்ட மோப்ப நாய்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. ஜேர்மன், நெதர்லாந்து போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மோப்ப நாய்களுக்கு கண்டியில் விசேட பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# சிப்பாய் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக மதுபானம் வைத்திருந்த இராணுவச் சிப்பாய் ஒருவைர பொலிஸார் கைது செய்துள்ளனர்.கதிர்மாமம் தம்மன்னாவ பிரதேசத்தில் இரத்தினக்கல் காணிகளில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட படைச்சிப்பாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ நலன்புரி சிற்றூண்டிச்சாலையில் சட்டவிரேதமான முறையில் 81 மதுபான போத்தல்களும் 32 பியர் போத்தல்களும் மீட்கப்பட்டதாக தங்காலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# அடிப்படையற்ற விதத்தில் போலியான குற்றச்சாட்டு

## சனல் 4 ஊடகத்தை சாடுகிறது அரசு

(கொழும்பு)

பிரிட்டனின் சனல் 4 ஊடக வலையமைப்பினால் இன்று புதன்கிழமை வெளியிடப்படவுள்ள இலங்கை தொடர்பான இரண்டாம் காணொளி அடிப்படையற்றது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

சனல் 4 ஊடகம் அடிப்படையற்ற வகையில் போலியான குற்றச்சாட்டுக்களை முன்னிலைப்படுத்தி மற்றுமொரு காணொளி ஒன்றை வெளியிடவுள்ளதாக பிரிட்டனுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இலங்கை விவகாரம் தொடர்பான செய்தி அறிக்கையிடலின் போது சனல் 4 ஊடகம் ஒரு பக்கச்சார்பான கொள்கைகளை பின்பற்றி வருகின்றது.

மேலும் இலங்கை அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர்களை நெருக்கடியில் ஆழ்த்தும் நோக்கில் சனல் 4 ஊடகம் காணொளிகளை வெளியிட்டு வருகின்றது.

இதேவேளை போரின் பின்னர் நாட்டில் பல சாதகமான நிலைமைகளை சனல் 4 ஊடகம் கண்டு கொள்ளத் தவறியுள்ளதாகவும் பிரிட்டனுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் முழு அளவிலான நல்லிணக்க முயற்சிகளை பாதிக்கும் எனவும் உயர் ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது.

ஆயினும் இந்த வீடியோ காட்சிகள் நம்பகத்தன்மையானவை என தடவியல் நிபுணர் பேராசிரியர் டெரிக்பௌண்டர் குறிப்பிட்டுள்ளமை தெரிந்ததே. (அ-2)

# பிரபாகரன் மரணத்திற்கு வஞ்சம் தீர்க்க முனைகின்றனர்

## அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் படுகொலை செய்யப்பட்டமைக்கு வெளிநாடுகளில் உள்ள புலிகள் பழி தீர்க்கின்றார்கள் என்று இலங்கையின் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்டு இருக்கின்ற பிரேரணைக்கு ஆதரவாக வெளிநாட்டில் உள்ள புலி ஆதரவு சக்திகள் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்கள் என்று சொல்லப்படுவோர் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறித்து ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட போது இவர் இவ்வாறு கூறி இருக்கின்றார்.

இப்புலி ஆதரவு சக்திகளுக்கு மக்களின் நலன் மீது இம்மி அக்கறை கிடையாது தலைவர் பிரபாகரன் படுகொலை செய்யப்பட்டமைக்கு பழி தீர்க்கின்றமையிலேயே மூச்சாக இறங்கி உள்ளனர்.

இவர்கள் தொடர்ந்தும் புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து மில்லியன் கணக்கான டொலர் நிதியை வசூலித்து வருகின்றனர். ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்டு இருக்கின்ற இலங்கை அரசுக்கு எதிராக செயற்படுகின்றனர். இவர்களில் பிரிவினை வாதத்துக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் பலவும் ஊக்கிகளாக செயற்படுகின்றன என்றார்.

ஹிஸ்புல்லா இலங்கைப் பிரதிநிதிகளில் ஒருவராக கடந்த வாரம் ஜெனீவா சென்று பேரவை மாநாட்டில் பங்கேற்று இருந்தார். அங்கு புலம்பெயர் தமிழர்கள் பலரையும் சந்தித்துப் பேசியமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இலங்கை விடயத்தில் மௌனம் சாதித்த பிரதீபா பட்டேல்

## தி.மு.க. அதிருப்தி

(கொழும்பு)

இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டேலினால் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் ஆற்றிய உரை தொடர்பில் திராவிட முன்னேற்றக் கழகம் அதிருப்தி வெளியிட்டுள் ளது.

இலங்கை தமிழர் பிரச்சினை மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அமர்வுகள் தொடர்பில் ஜனாதிபதி பட்டேல் எவ்வித கருத்தையும் வெளியிட வில்லை என குறிப்பிடப்பட்டுள் ளது.

ஜனாதிபதி ஆற்றிய் உரை அதிருப்தி அளிப்பதாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமை பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதி ராக பிரேரணை முன்வைக்கப் பட்டால் அதற்கு இந்தியா ஆத ரவளிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பிரேரணைக்கு ஆதரவளிப்பதனை தவிர வேறும் தீர்மானங் களுக்கு தி.மு.க. இணங்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஜனநாயகத்திற்கு விரோதமான அழுத்தங்களை கண்டிக்கின்றோம்

## முன்னாள் போராளிகள் மகஜர் கையளிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் பிரதமர் டி.எம். ஜயரட்னவிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

நாட்டின் ஜனநாயகத்திற்கு சவால் விடுக்கும் வகையில் பிர யோகிக்கப்படும் அழுத்தங்களை வன்மையாகக் கண்டிப்பதாக முன்னாள் போராளிகள் அம் மகஜரில் தெரிவித்துள்ளனர்.

இந்த அழுத்தங்களுக்கு எதி ராக போராடத் தயார் எனவும் அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயார் எனவும் முன்னாள் போராளிகள் அறிவித்துள் ளனர்.

அண்மையில் தென்பகுதிக்கு சுற்றுலாப்பயணம் மேற்கொண்ட இவர்கள் கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு அருகாமையில் வைத்து இம்மகஜரைக் கையளித்துள்ளனர். (அ-2)

# பிரேரணை நிறைவேறினால் இலங்கைக்கு காலக்கெடு?

## அரசியல் அவதானிகள் கருத்து

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப் பிக்கப்பட்டுள்ள பிரேரணை நிறை வேற்றப்படும் பட்சத்தில் அதனை நடைமுறைப் படுத்துவதற்கு இலங் கைக்கு கால அவகாசமொன்று வழங்கப்படும்.

இக்காலப்பகுதிக்குள் அரசு அதனை முழுமையாகச் செய்து முடிக்குமா அல்லது முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஏதா வது சிக்கல்கள் உள்ளனவா என் பது குறித்து அரசியல் பிரமுகர் கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை கால அவகா சம் வழங்கப்படும் பட்சத்தில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவோம் என இலங்கை அரசு உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

### வாகன விபத்தில் சிறுவன் பலி

அக்கரைப்பற்று பனங்காட்டு பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுவனொருவன் பலியானதுடன் 6 பேர் காயமடைந்துள்ளதாக அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அட்டாளைச்சேனை தர்காநகரை சேர்ந்த என். முஜாத் (வயது 16 என்ற சிறுவனே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கனரக வாகன மொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் மின்கம்பத்தில் மோதியே இவ் விபத்து ஏற்பட்டதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)




★1489-சைப்பிரஸ் மகாராணி கத்தரீன் கோர்னாரோ தனது இராச்சியத்தை வெனிஸ் நகருக்குக் விற்றார்.

★1794-எலி விட்னி பஞ்சை தூய்மைப் படுத்தி அதன் விதையில் இருந்து பிரித்தெடுக்கும் காட்டன் ஜின் என்ற இயந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.

★1898-டாக்டர் வில்லியம் கப்ரியேல் றொக்வூட் இலங்கையின் அரசியல் நிர்ணய சபைக்கு தமிழ்ப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

★1926-கோஸ்ட்டா ரிக்காவில் தொடரூந்து ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 248 பேர் உயிரிழந்தனர்.

★1939-செக்கோசிலவாக்கியாவின் பொஹேமியா மற்றும் மொராவியா மாகாணங்களை ஜேர்மனியப் படைகள் ஆக்கிரமித்தன.

★1951-கொரியப் போர்: இரண்டாவது முறையாக ஐ.நா.படைகள் சியோல் நகரைக் கைப்பற்றின.

★1978-இஸ்ரேலியப் படைகள் தெற்கு லெபனானை ஆக்கிரமித்துக் கைப்பற்றியது.

★1979-சீனாவில் பெய்ஜிங் நகரில் விமானம் ஒன்று தொழிற்சாலை ஒன்றின் மீது வீழ்ந்ததில் 200 பேர் உயிரிழந்தனர்.

★1984-சின் ஃபெயின் தலைவர் ஜெரி ஆடம்ஸ் பொல்ஃபாஸ்ட் நகரில் கொலை முயற்சி ஒன்றில் படுகாயமடைந்தார்.

★1994-லினக்ஸ் கரு (Kernel) 1.00 வெளியிடப்பட்டது.

★1995-ரஷ்ய விண்கப்பல் ஒன்றில் அமெரிக்கர் (நோர்மன் தகார்ட்) ஒருவர் முதன் முதலாகப் பயணித்தார்.

★1998-தெற்கு ஈரானில் 6.9 ரிக்டர் அளவு நிலநடுக்கம் தாக்கியது.

★2007-மேற்கு வங்காளம் நந்தி கிராமத்தில் போராட்டம் நடத்திய விவசாயிகள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 14 பேர் உயிரிழந்தனர்.

**பிறப்புக்கள்**


★1879-அல்பர்ட் ஐன்ஸ்டீன், இயற்பியலாளர் (இ.1955)

★1965-அமீர்கான், நடிகர்

**இறப்புக்கள்**

★1932-ஜோர்ஜ் ஈஸ்றமன், அமெரிக்க கண்டுபிடிப்பாளர் (பி:1854)

★1995-வில்லியம் பவுலர், இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1911)




★1883-ஜேர்மனிய மெய்யியலாளர் கார்ல்ஸ் மார்க்ஸின் நினைவு தினம் (பி.1818)

# அதிசய உலகம்...




## குதிரையேற்றத்தில் அசாத்திய திறமை கொண்ட சிறுமி



குதிரையேற்றம் என்பது ஆரம்ப காலங்களிலிருந்து இன்றுவரை தொடரும் ஒரு அற்புதமான விளையாட்டு ஆகும்.

இந்த விளையாட்டில் சாதித்த இளைஞர்கள் பலர் இருந்தபோதும் இளங் கன்று பயமறியாது என்ப தற்கிணங்க சிறுவர்களும் சாதிக்கத்தான் செய்கின்றார்கள். பிரித்தானியாவில் வசிக்கும் ஸ்கையி வூட்வார்ட் என்ற சிறுமி குதிரையேற்றத்தில் அசாத்திய திறமை கொண்டு பார்ப்ப வர்களை அசத்திவருகின்றாள்.

## உப்பினால் வரையப்பட்ட ஓவியம்




கின்னஸ் சாதனைக்காக கல்லூரி மாணவர்கள் 4 மணி நேரத்தில் 600 சதுர மீற்றரில் ஓவியம் வரைந்துள்ளனர். 7 ஆயிரத்து 50 கிலோ உப்பு மற்றும் 405 கிலோ கலர் பவுடரை பயன்படுத்தி ஓவியம் வரையப்பட்டுள்ளது.

இந்தியாவில் திருவாரூர் மாவட்ட மன்னார்குடி அடுத்த இடையர் நத்தம் ஏ.ஆர்.ஜே. கல்வி நிறுவனங்களின் சார்பில்கடந்த 11 ஆம் திகதி முதல் வரும் 15 ஆம் திகதி வரை 13 வகை கின்னஸ் சாதனைகள் செய்யும் முயற்சியை மேற் கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக பள்ளி வளாத்தில் ஏ.ஆர்.ஜே பொறியியல் கல்லூரி பாலிடெக்னின், பள்ளி மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் 3 ஆயித்து 366 பேர் ஓவியம் வரைந்தனர். 600 சதுர மீற்றரில் 7 ஆயிரத்து 50 கிலோ உப்பு மற்றும் 405 கிலோ கலர் பவுடரை பயன் படுத்தி இவ்ஓவியம் வரையப் பட்டுள்ளது.

அதில் எதிர்காலத்திற்கு தண்ணீரை சேமிப்போம் என எழுதி 2 கைகள் நீர்த்துளியை பிடிப்பது போல் வரைந்துள்ளனர்.

இந்த ஓவியத்தை நாங்கள் நான்கு மணிநேரங்களில் வரைந்து முடித்துள்ளோம் எனவும் அக்கல்லூரி மேலாளர் சிவன்ராஜ் குறிப்பிட்டுள்ளார்.

## இருக்கைகளை மாற்றக்கூடிய அதிநவீன கார்




அதிஉயர் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உருவாக்கப்படும் சாதனங்கள் அதன் பாவனையாளர்கள் பயன்படுத்துவதை இலகுவாக்கவும் மேலும் புதிய வசதிகளை அறிமுகப்படுத்தும் முகமாகவும் தொடர்ந்து அப்பொருட்களை இற்றைப் படுத்துவதுண்டு (Update).

அதன் அடிப்படையில் பலவிதமான கார்கள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் அவற்றின் இருக்கைகளின் அமைப்பிலும் வடிவம் என்பவற்றிலும் இதுவரை பாரிய மாற்றங்கள் செய்யப்படாதே இருந்துவந்துள்ளது.

ஆனால் தற்போது வாகனம் செலுத்துபவரின் இருக்கை, அவரது அருகில் காணப்படும் இருக்கை என்பவற்றை காருக்கு வெளியிலும் அசைக்கக்கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளது. அதாவது உடல் ஊனமுற்றவர்கள் பயன்படுத்தக்கூடியவாறு அமைக்கப்பட்டுள்ள இந்த நவீன காரானது ஜெனீவாவில் இடம்பெற்ற கார் கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## 15 நாட்களில் 30 மாடி உயரமான கட்டடம்; சீனா புதிய சாதனை



15 நாட்களில் 30 மாடி கட்டடம் ஒன்றை கட்டி முடித்து சீனா புதிய சாதனை படைத்துள்ளது. இக்கட்டடம் சீனாவின் ஹியூனான் மாகாண தலைநகரான சாங்ஷா நகரில் அமைக்கப் பட்டுள்ளது. பணிகளை பிராட் சஸ்டெயினபிள் பில்டிங்ஸ் அமைப்பு செய்து வருகிறது. இது தொடர்பாக அந்த அமைப்பின் இணையத் தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கட்டட கட்டுமானப் பொருட்கள் அனைத்தும் முதலில் அங்கு குவிக்கப்பட்டது.

பின் பணியாளர்களை வைத்து 15 நாட்களில் 30 மாடி கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது பெரிய சாதனையாகும். இக்கட்டடம் தொழிற்சாலை பயன்பாட்டிற்காக கட்டப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராட்சஸ்டெயினபிள் பில்டிங்ஸ் அமைப்பு இதற்கு முன் ஒரு வார கால அளவில் 15 மாடி ஹோட்டலையும், ஒரே நாளில் 6 மாடி பெவிலியனையும் கட்டி முடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## வியப்பில் ஆழ்த்தும் அழகான மீன் மழை



பொதுவாக நாம் வாழும் பகுதியில் எப்போதாவது அதிசயமாக ஆலங்கட்டி மழை பெய்வதாக சிலர் கருதுவதுண்டு. ஆனால் வெளிநாடுகளில் சில சமயங்களில் மீன்மழையும் பொழிகிறது. இம்மீன் மழைகள் சுழல் காற்றினால் ஒரு சிறிய நீர்நிலையினுள் இருக்கும் மீன்கள், தவளைகள் மற்றும் சிறு உயிரினங்களோடு உறுஞ்சப்பட்டுகாற்றில் எடுத்துச் செல்லப்பட்டு வேறொரு இடத்தில் கொட்டப்படுவதே மீன்மழைக்கான காரணம். அவ்வாறு காணப்படும் அழகான மீன்மழையினை படத்தில் காணலாம்.

## 75 நாட்கள் தலைகீழாக நின்று குழந்தை பெற்றெடுத்த தாய்



போலந்து நாட்டைச் சேர்ந்த கர்ப்பிணி பெண் ஒருவர் பெரிய சாதனையை நிகழ்த்தி தனது இரட்டை குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார். போலந்து நாட்டைச் சேர்ந்தவர் ஜோவன்னா. கர்ப்பமாக இருந்த அவரது வயிற்றில் 3 குழந்தைகள் இருந்தது தெரிய வந்தது. 5 மாத கர்ப்பமாக இருந்த நிலையில் அவருக்கு திடீரென பிரசவவலி ஏற்பட்டது. இதையடுத்து அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அப்போது ஒரு குழந்தை இறந்தே பிறந்தது. ஆனால் வயிற்றில் உள்ள மற்ற 2 குழந்தைகளையும் காப்பாற்ற முடிவெடுத்த மருத்துவர்கள் அதற்காக சில அசாதாரணமான யோசனைகளை தெரிவித்தனர்.

அதை ஏற்றார் ஜோவன்னா. அதன்படி அவர் கிட்டத்தட்ட தலைகீழாக வைக்கப்பட்டார். இதற்காக படுக்கையையும் அதற்கேற்ப மாற்றியமைத்தனர். வயிற்றில் இருக்கும் குழந்தைகள் தொடர்ந்து உயிருடன் இருக்க வேண்டும். என்றால் ஜோவன்னா 24 மணி நேரமும் தலைகீழாக இருக்க வேண்டும் என்றுமருத்துவர்கள் அறிவுறுத்தினர்.அவரும் ஒப்புக்கொண்டுதலைகீழாக 75 நாட்கள் கழித்தார். அதற்கு பிறகு பிரசவம் நடந்து 2 குழந்தைகளை மருத்துவர்கள் பத்திரமாக வெளியே எடுத்தனர்.

அதில் ஒன்று ஆண்,இன்னொன்று பெண். ஜோவன்னாவின் இரு குழந்தைகளையும் சிறப்பு இன்குபேட்டரில் வைத்துள்ளனர். விரைவில் ஜோவன்னா தனது குழந்தைகளுடன் வீடு திரும்பலாம் என மருத்துவர்கள் அறிவித்துள்ளனர்.

# இந்தியா பிரேரணையை எதிர்க்காவிட்டால் இலங்கை சீனாவை நோக்கி பயணிக்கும்

## அயல் நாடுகளை எதிர்த்து என்ன செய்யமுடியுமென கேள்வியெழுப்புகிறார் கோமின்



(கொழும்பு)

**ஜெனீவா ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராக முன் வைக்கப்பட்டுள்ள பிரேரணையை எதிர்த்து இந்தியா வாக்களிக்காவிடின் அல்லது வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாவிட்டால் இலங்கை சீனாவை நோக்கி நகரும் என்பதனை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.**

ஜெனீவாவில் இலங்கை எதிர்கொண்டுள்ள சவால்கள் என்ற தொனிப்பொருளில் அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று முன்தினம் இலங்கை மன்றக் கல்லூரியில் ஏற்பாடு செய்திருந்த கருதரங்கிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கூறியதாவது, ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணை தோற்கடிக்கப்பட்டாலும் வெற்றி பெறப்பட்டாலும் இலங்கை தண்டனை பெறும் வரை மேற்கு நாடுகள் நமது முயற்சியிலிருந்து ஓயாது. புலிகளுடன் பேச்சு நடத்தி தீர்வைக் காண வேண்டும் என மேற்கு நாடுகள் கோரின.

யுத்தம் மூலம் பிரச்சினை தீர்க்கப்பட்டது. இடையில் யுத்தத்தை நிறுத்த அமெரிக்கா உள்ளிட்ட பல மேற்கு நாடுகள் முயற்சித்தன. ஆனால், முடியவில்லை. இதன் காரணமாக மேற்கு நாடுகள் இவ்வாறு இலங்கைக்கு தண்டனை வழங்க முற்படுகின்றன.

சீனா, ரஷ்யாவைவிட அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் தான் நாட்டின் அதிக வர்த்தக விவகாரங்கள் செயற்படுகின்றன.

ஒரு பிரேரணையை கொண்டுவரும் போது தனது வெற்றி தொடர்பில் ஆராய்ந்துவிட்டே அமெரிக்கா கொண்டுவரும். எனினும் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையின் மூன்றாவது அம்சம் அபாயகரமானது. அதாவது மனித உரிமைப் பேரவையின் ஆலோசனைகளை பெற வேண்டும் என்பதாகும்.

போர் நிறுத்த காலத்தில் இருந்த ஸ்கண்டிநேவிய கண்காணிப்பு குழுபோன்று ஒன்று வரும். அவர்கள் எம்மை கண்காணிப்பார்கள். அதற்கு இடமளிக்க முடியாது.

இந்தியா என்பது மிகப்பெரிய சக்தியாகவுள்ளது. இவ்வாறான முயற்சி ஒன்று ஜெனீவாவில் 2009 ஆம் ஆண்டு நகர்வு முன்னெடுத்தபோது இந்தியா எமக்கு ஆதரவளித்தது. ஆனால், இம்முறை அவ்வாறான தீர்மானம் ஒன்றை இந்தியா எடுக்குமா? என்பதனை எதிர்வுகூற முடியாது. இந்தியா ஒரு விடயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அதாவது தன்னைச் சுற்றி எதிரி நாடுகளை வைத்துக்கொண்டுள்ள இந்தியாவுக்கு இலங்கை மட்டுமே எவ்வித தொல்லையும் கொடுக்காமல் மிக நெருக்கமான நட்பு நாடாக இருக்கின்றது.

இந்தியா எமக்கு எதிராக செயற்பட்டால் இலங்கை சீனாவை நோக்கி நகரும் என்பதனை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இதனை இந்தியா புரிந்துகொள்ள வேண்டும். எனவே, இந்தியா எமக்கு ஆதரவளிக்காவிடின் இந்த ஆபத்து ஏற்படும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை பல தரப்புகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. இது எமது உள்நாட்டு தீர்வு வியூகத்துக்கு கிடைத்த வெற்றியாகும்.

இந்த விடயத்திலும் எமது தரப்பிலும் சில குறைபாடுகள் உள்ளன. அதாவது கடந்த மூன்று மாத காலப்பகுதியில் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான முக்கிய சில விடயங்களை உடனடியாக செய்ய வேண்டும்.

இந்த அரசாங்கத்தின் ஆட்சியின் கீழேயே இந்த விசாரணைகள் நடத்தி முடிக்கப்பட வேண்டும். இல்லாவிடின் அரசாங்கம் மாறியதும் புதிய அரசாங்கம் இவர்களை பணத்துக்காக பிடித்துக் கொடுத்துவிடும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் படி நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தி நாட்டில் கீழ் மட்டத்தில் அதிகாரப் பரவலாக்கலை முன்னெடுக்க வேண்டும். அதாவது அரசியல்வாதிகளுக்கு அன்றி மக்களுக்கு அதிகாரம் செல்ல வேண்டும்.

அடுத்ததாக 13 ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும். அரசாங்கத்துக்கு இறுதித் தடவையாக கிடைத்துள்ள இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி இதனைச் செய்ய வேண்டும்.

இல்லாவிடின் யாராவது இவை தொடர்பில் வழக்கு தாக்கல் செய்து நீதிபதிளுக்கு அந்த அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தால் நீதிபதிகளை நாம் குறைகூற முடியாது. காரணம் அவை அரசியலமைப்பில் உள்ளன.

அடையாளம் காணப்பட்டுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார். (அ-7)

## நிகழ்ச்சித்திட்ட அதிகாரிகள் சேவை யாப்புக்கு எதிராக முறைப்பாடு

(கொழும்பு)

நிகழ்ச்சித்திட்ட அதிகாரிகள் சேவை யாப்புக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்வதற்கு தொழில் சார் பட்டதாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

நிகழ்ச்சித்திட்ட அதிகாரிகள் சேவை யாப்புக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்வதற்கு சங்கம் தீர்மானித்துள்ளது. இந்த யாப்பு காரணமாக தற்போது அரச சேவையில் உள்ள 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாக சங்கத்தின் பிரதம செயலாளர் சந்தன சூரிய ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பீ.பி.அபேகோனிடம் வினவியபோது குறித்த சேவை யாப்பு காரணமாக தொழில்சார் பட்டதாரிகளுக்கு பல்வேறு சலுகைள் கிடைப்பதாக சுட்டிக்காட்டி ஏற்கனவே தொழில்சார் பட்டதாரிகளுக்கான சேவை யாப்பு இருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

## தேர்தல் முறைப்பாடுகளை முன்வைக்க விசேட பிரிவு

(கொழும்பு)

புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுரைப்பற்று உள்ளூராட்சி மன்ற தேர்தல்களுடன் தொடர்புடைய முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு தேர்தல்கள் செயலகம் விசேட பிரிவொன்றை ஆரம்பித்துள்ளது.

ஒட்டுசுட்டான் மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலகங்களில் இந்தப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் நேரடியாக விசாரணைகளை நடத்துவதற்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் விசேட பிரிவொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

எனினும் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களுடன் தொடர்புடைய எவ்வித முறைப்பாடுகளும் இதுவரை பதிவாகவில்லை என வன்னி மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டினார். (அ-7)

## முன்னாள் போராளிகளை சந்தித்த புலம்பெயர் இளையோர் குழு

### மொழிப்பிரச்சினையால் திண்டாட்டம்

(கொழும்பு)

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவர்களும் தற்போது புலம்பெயர் பிரதேசமான ஐரோப்பாவில் வசிக்கின்ற தமிழ் இளைஞர் குழுவொன்று வவுனியாவில் உள்ள புனர்வாழ்வு நிலையம் ஒன்றில் புனர்வாழ்வுப் பயிற்சிகளைப் பெற்று வரும் விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளை சந்தித்தபோது அவர்களுடன் தமிழில் உரையாடுவதில் சிக்கலை எதிர்நோக்கியிருந்தனர்.

ஐரோப்பாவிலிருந்து தம்மை சந்திக்க வந்திருந்த தமிழ் இளைஞர்கள் தம்முடன் ஆங்கிலத்தில் உரையாடியதாகவும் தாம் அவர்களுடன் தமிழில் உரையாடியதாகவும் இதனால் புனர்வாழ்வு முகாமில் கடமையாற்றும் இராணுவ அதிகாரிகள் இரு தரப்புக்கும் இடையில் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்ற வேண்டியிருந்ததாகவும் புனர்வாழ்வுப் பயிற்சி பெற்று வரும் முன்னாள் போராளிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் ஆரம்ப நாட்களில் நாட்டை விட்டுப் புலம் பெயர்ந்து வேறு நாடுகளுக்குச் சென்ற தமிழ்ச் சிறார்கள் அவர்களது தாய்மொழியான தமிழைப்பேச முடியாதவர்களாக இருந்தனர். பெரிதும் கவலை கொள்ள வைத்துள்ளதாகவும் புனர்வாழ்வு முகாமிலுள்ள முன்னாள் போராளிகள் தெரிவித்துள்ளனர். அவர்கள் எமக்கு உதவுவதற்காக இங்கு வந்திருந்த போதிலும் கூட அவர்களால் தமிழ் மக்களின் மிக முக்கிய அடையாளமான தமிழ்மொழியில் தொடர்பாட முடியாதிருந்ததானது எமக்கு பெரும் வேதனையையும் கவலையையும் அளிக்கிறது என் புனர்வாழ்வு முகாமில் பயிற்சி பெற்றுவரும் முன்னாள் போராளி ஒருவர் தெரிவித்தார்.

பிரித்தானிய பழைமைவாதக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜேம்ஸ் ஸ்ரீபன் வாற்றொன் தலைமையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்தக்குழுவானது கிளிநொச்சியைச் சென்று பார்வையிட்டதுடன் வவுனியா புனர்வாழ்வு முகாம்களில் பயிற்சி பெற்று வருபவர்களின் நிலைப்பாடுகளை நேரில் சென்று பார்வையிட்டனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றுவதற்கான பயிற்சிகளில் ஈடுபடுத்தப்படும் முன்னாள் போராளிகளுக்கான பயிற்சி வகுப்பொன்றையும் இக்குழுவினர் பார்வையிட்டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் கீழ் செயற்பட்ட போது தமது வாழ்க்கை எவ்வாறிருந்தது என்பதையும் புனர்வாழ்வுப் பயிற்சிகளை நிறைவு செய்த பின்னர் பொருத்தமான தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனத்தாம் விரும்புவதாகவும் தெரிவித்தனர். (அ-7)

## ஓய்வூதியர் சபையின் 4ஆவது பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி யாழ் பிரதேச ஓய்வூதிய சபையின் 4 ஆவது பொதுக் கூட்டம் எதிர் வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கிக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பி.பாலசுந்தரம்பிள்ளை விருந்தினராக பெற்றோர் சங்க தலைவர் அசோக பெரேரா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)

# ராகுலை ஹீரோவாக்கிய ஹீரோ அகிலேஷ்!

பிரமாண்டம் என்பதை பிரமாண்டமாக விளம்பரப்படுத்திய இந்தி(ய)ப்படம் ஷோலே அதில் முக்கிய கதாபாத்திரமாக படம்முழுக்க வந்து கொண்டே இருப்பார் தர்மேந்திரா. ஆனாலும், அவருடைய நண்பராக நடித்த அமிர்தாப்பச்சன்தான் கடைசி காட்சியின் மூலம் இரசிகர்களின் மனங்களை வென்றார். அதன் காரணமாக, இந்தித் திரையுலகின் சூப்பர் ஸ்டாராக நின்றார். எதற்காக 35 ஆண்டுகளுக்கு முன் வெளியான அந்தப் பழைய இந்திப்படத்தை இப்போது நினைவு படுத்தவேண்டும் என கேட்கத் தோன்றும்....

இந்தியாவின் மிகப் பெரிய மாநிலமான உத்திரப்பிரதேச மாநில சட்டமன்றத் தேர்தலின் முடிவுகள் பழைய ஷோலே படத்தின் கதாபாத்திரங்களைத்தான் நினைவுபடுத்துகிறது. அங்கே முதல்முறையாக ஐந்தாண்டு காலம் முழுமையாக ஆட்சி செய்த மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சியின் அரசை வீழ்த்தி, முலாயம்சிங்கின் சமாஜ்வாடி கட்சி, மீண்டும் ஆட்சியைப் பிடித்திருக்கிறது. மொத்தமுள்ள 403 தொகுதிகளில் 224 தொகுதிகளில் வென்று தனிப்பெரும்பான்மையுடன் திகழ்கிறது.

தேர்தல் பிரசாரக்களத்தில் அதிகமாக விளம்பரப்படுத்தப்பட்டவர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல்காந்தி. 48 நாட்கள்



*உத்திரப்பிரதேசத்திலேயே* முகாமிட்டு 211 பொதுக்கூட்டங்களில் பேசினார். அவருடைய சகோதரி பிரியங்காகாந்தி, அவரது கணவர் வதேரா, அவர்களுடைய குழந்தைகள் என நேருகுடும்பத்தின் இந்தத் தலைமுறை மொத்தமும் களமிறங்கிப் பிரச்சாரம் செய்தது. காங்கிரஸ் கட்சியால் ஆட்சியைப் பிடிக்க முடிகிறதோ, இல்லையோ, அதன் தயவால்தான் எந்தக்கட்சியும் ஆட்சி அமைக்க முடியும் என்கிற அளவுக்கு ராகுல் காந்தியின் பிரசாரம் தேர்தல் முடிவுகளில் பெரும் தாக்கம் ஏற்படுத்தும் என்று எதிர் பார்க்கப்பட்டது. குறிப்பாக முலாயம்சிங் கட்சி ஆட்சி அமைக்க வேண்டுமென்றால்

**நன்றி : நக்கீரன்**

காங்கிரசின் தயவில்லாமல் முடியாது என்றெல்லாம் ஆரூடங்கள் வெளியாயின. ஆனால், தேர்தல் முடிவுகளில் காங்கிரஸ் கட்சி வெறும் 28 இடங்களுடன் நான்காவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ள நிலையில், முலாயம்சிங்கின் சமாஜ்வாடி கட்சி தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்துள்ளது. இங்கேதான். ஷோலே பட உதாரணம் தேவைப்படுகிறது.


தர்மேந்திரா போல ராகுல்காந்தி தேர்தல் பிரச்சாரக்களம் முழுவதும் முக்கியத்தும் கொடுக்கப்பட்டார். ஆனால், அமிர்தாப்பச்சன் போல மக்களின் மனங்களில் இடம் பிடித்தவர் 38 வயதான அகிலேஷ்சிங்யாதவ். இவர் முலாயம்சிங் யாதவ்வின் மகன். சமாஜ்வாடி கட்சியின் உ.பி. மாநிலத் தலைவர், இவர்தான் இந்த வெற்றியின் சூத்திரதாரி. அத்துடன் இவர், அமிதாப்பச்சனின் தீவிர இரசிகர் என்பது கூடுதல் பொருத்தம்.

தலைவர்களின் வாரிசுகள் அரசியலுக்கு வருவதும், தேர்தல் களத்தில் திடீர் புகழைப் பெறுவதும் தமிழக மக்கள் உட்பட இந்தியாவின் பல மாநில வாசிகளுக்கும் புதிதல்ல. ஆனால், 2014 இல் இந்தியா எதிர்கொள்ளவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான அரை இறுதி ஆட்டம் என வர்ணிக்கப்பட்ட உ.பி. மாநில சட்ட மன்றத் தேர்தலில் தேசிய கட்சிகளான காங்கிரசுக்கும் பா.ஜ.க. வுக்கும் தண்ணி காட்டியிருக்கும் சமாஜ்வாடி கட்சியின் வெற்றியின் பின்னணியில் ஓர் இளைஞர் இருக்கிறார் என்பதுதான் கவனத்திற்குரியது. கட்சித்தலைவரின் மகன் என்றபோதும் அந்த இளைஞரின் தனித்துவமான செயற்பாடுகள் இந்தப் பெருவெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளன.

இந்தி ஒன்றே இந்தியாவின் மொழி என்ற கருத்தில் உறுதியாக இருப்பவர் முலாயம்சிங் யாதவ் ஆனால், அவர் தன்னுடைய மகன் அகிலேஷ்சிங்கை கர்நாடக மாநிலம் மைசூருக்கு அனுப்பி பொறியியல் பட்டம் பயில வைத்தார். கல்லூரியில் ஆங்கிலத்தை சரளமாகப் பயின்ற அகிலேஷ், அந்த மாநில மொழியான கன்னடத்தையும் கற்றுக்கொண்டார். சக நண்பர்களுடன் கன்னடத்தில் உரையாடுவதுடன், தென்னிந்திய உணவு வகைகளான இட்லி, தோசை ஆகியவற்றையும் விருப்பத்தோடு ஒரு பிடிபிடிப்பது அவருடைய வழக்கமானது. சைனீஸ் உணவுகளையும் வெளுத்துக் கட்டுவார்.

கல்லூரியில் கால் பந்து வீரராக இருந்த அவர், அந்த விளையாட்டில் மூக்குடைபட்ட போதும் தன் உடல் திறனுக்காக தொடர்ந்து விளையாடினார். பெரிய அரசியல் தலைவரின் பிள்ளை என்ற போதும், பொறியியல் பட்டம் பயின்ற அகிலேஷிற்கு அவருடைய அப்பா முலாயம், தாராளமாகப் பணம் தரவில்லை. மைசூரிலிருந்த நடுத்தரக்குடும்பத்தைச் சேர்ந்த தன் நண்பர் ஒருவரை தன் மகனுக்கு காப்பாளராக நியமித்து, வாரம் ஒரு முறை அவரை நேரில் பார்த்து கைச்செலவுக்கான தொகையை வாங்கிக் கொள்ளச் சொல்வார். அதுவும் சொற்பமான தொகைதான். கல்வியில் கவனம், கட்டுப்பாடான செலவு என வளர்ந்தார் அகிலேஷ். அரசியல் செல்வாக்குள்ளவர்களின் வாரிசுகளின் கையில் பணம்குவிந்தால் இளம்வயதில் எப்படியெல்லாம் ஆட்டம் போடுவார்கள் என்பது நாம் அறிந்ததுதானே...

இந்த அரசியல் வாதிகளுக்கு சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு குறைவுதான். ஆனால், அகிலேஷ்சிங் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகருக்குச் சென்று சுற்றுச்சூழல்



அகிலேஷ்சிங் யாதவ்



தொழில்நுட்பம் பற்றிய மேற்படிப்பு பயின்றார். சூழலியலே எதிர்கால அரசியலைத் தீர்மானிக்கும் பெரும்சக்தியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படும் சூழலில் அகிலேஷின் இந்தப்படிப்பு அவருக்கு அரசியல் ரீதியாகவும் உதவிக்கரமாக அமைந்தது. படிப்பிற்குப் பிறகு வழக்கம் போலவே இந்திய அரசியல் தலைவர்களின் வாரிசு வழியில் சமாஜ்வாடி கட்சிப்பணிகளில் முனைப்புக்காட்டினார். 2000 ஆம் ஆண்டு கண்ணோஜ் நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் அரசியலில் அவருடைய கணக்கு ஆரம்பமானது.

தந்தை நிறைவேற்ற வேண்டிய கடமையான, மகனின் திருமணத்தை நல்ல படியாக நடத்தி வைத்தார் முலாயம்சிங். அகிலேஷின் மனைவி டிம்பிள். அவர்களுக்கு அதிதி மற்றும் டினா அர்ஜுன் என்ற இரட்டையர் என மூன்று குழந்தைகள்.

சமாஜ்வாடிக்கட்சியின் மூத்த தலைவர்களான அமர்சிங் போன்றவர்களுக்கும் முலாயம்சிங்கிற்கும் உரசல்கள் ஏற்பட்டிருந்த நேரத்தில் அகிலேஷின் அரசியல் வளர்ச்சி எளிதாக இருந்தது. ஆங்கிலம் கணினி போன்றவற்றிற்கு எதிரான நிலையில் இருந்தார் முலாயம். அதனால், சமாஜ்வாடிக் கட்சியின் கொள்கையாகவே இது தோற்றம் அளித்தது. காலத்தின் மாற்றங்களை உணர்ந்த அகிலேஷ் தன்னுடைய ஓவர்கோட்டில் எப்போதும் ஒரு ஐபேட் வைத்துக் கொண்டு மின்னஞ்சல்களை சரிபார்ப்பதும் பதிலளிப்பதுமாக இருப்பார். ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவதும் தகவல் தொழில்நுட்பத்திற்கு கணினியைப் பயன்படுத்துவதும் இளைஞர்களைக் கவர்ந்தது.

கட்சியின் முக்கிய கொள்கைகளான பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் நலன் சிறுபான்மையருக்கான உரிமைகள் ஒடுக்கப்பட்டோரின் விடுதலை, மாநிலத்தின் வளரச்சி இவற்றில் இருந்து அவர் விலகவில்லை. கட்சியின் இளைஞர் அமைப்பை பலப்படுத்தியதுடன் அதனை நவீனப்படுத்தினார் புதிய பாதையில் சமாஜ்வாடியை வழிநடத்த ஆரம்பித்தார் அகிலேஷ். எனினும் 2009 ஆம்ஆண்டு நாடாளுமன்றத்தேர்தலில் அவர் மிகப்பெரிய சவாலை எதிர்கொள்ள நேர்ந்தது. யாதவ் சமுதாயத்தின் வாக்குகள் மிகுந்துள்ள ஃபெரோசாபாத் தொகுதியில் போட்டியிட்ட அவருடைய மனைவி டிம்பிள்யாதவை காங்கிரஸ் வேட்பாளர் ராஜ்பாபர் தோற்கடித்தார்.

இந்தத்தோல்வியை தனது சொந்தத் தோல்வியாக நினைத்த அகிலேஷ் இதற்குக் காரணம் ராகுல் காந்திதான் என்று "இனி உத்தரப் பிரதேசத்தில் எனக்கும் நேருவின் வாரிசுகளுக்கும்தான் யுத்தம்" என வெளிப்படையாகவே அறிவித்தார். 2012 சட்டமன்றத் தேர்தல் களத்திலும் ராகுல்காந்திக்கு கடும் சவாலாக பிரச்சாரத்தை மேற்கொண்டார் சமாஸ்வாடிக்கட்சியின் தேர்தல் சின்னம் சைக்கிள். 1 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சைக்கிளில் அகிலேஷ், 250 கி.மீ. பயணம் செய்திருக்கிறார். கிரந்தி ரதம் எனப்படும் 8 சீட்டுகளைக் கொண்ட நவீன சமையலறை டி.வி. சின்னக்குளியலறை ஆகியவற்றைக் கொண்ட அந்த வாகனத்தில் 8000 கி.மீ. சுற்றி பிரச்சாரம் செய்தார்.

எதிரிகளை சரியாக அடையாளம் கண்டு சவால்விடுவதும் அகிலேஷின் வழக்கம். சமாஜ் வாடிக்கட்சி வெற்றி பெற்றால் பொது இடங்களை ஆக்கிரமித்து பொதுமக்கள் பணத்தில் மாயாவதி தனக்காக வைத்துக் கொண்ட சிலைகளை அப்புறப்படுத்து வோம் என்று அறைகூவல் விடுத்தார். சமாஜ் வாடிக் கட்சிக்கு கெட்டபேர் உண்டாக்கியதாக குற்றம் சாட்டப்பட்ட மூத்த பிரமுகர்களான டி.பி.யாதவ், அமர்மணிதிரிபாதி போன்றவர்களுக்கு தேர்தலில் போட்டியிட சீற்கொடுக்க அனுமதிக்கவில்லை அகிலேஷ். பகுஜன் சமாஜ் கட்சியின் சின்னமான யானையை சமாஸ் வாடியின் சின்னமான சைக்கிள் முந்துவது போன்ற தேர்தல்பிரச்சார விளம்பரத்தை நவீன தொழில்நுட்பத்தில் உருவாக்கினார். இந்த விளம்பரம் பரவலான வரவேற்பைப் பெறவே, இதுபோலவே மக்களையும் கவரும் விளம்பரங்களையும் பிரச்சார உத்திகளையும் கையாண்டார்.

தனித்துவமான நடவடிக்கைகள் அனைத்தும் தனது தந்தையின் தலைமையிலான கட்சிக்குப் பயன்படும் விதமாக மாற்றியது தான் அகிலேஷ்சிங் யாதவ்வின் சிறப்பம்சம். அதுதான், சமாஜ்வாடி கட்சிக்கு தனிப் பெரும்பான்மையை பெற்றுத்தந்தது, அகிலேஷை உத்திரப்பிரதேசத்தின் புதிய நாயகனாக்கி, இந்திய அரசியல் வட்டாரமே திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. வெற்றி பெறும் வரை எதிர்க்கட்சிகள் மீது கருணை காட்டாமல் கொலைவெறியுடன் வியூகம் வகுத்து செயற்பட்ட அகிலேஷ்சிங், தேர்தல் முடிவுகள் வெளியானதும் அளித்த பேட்டி மிக முக்கியமானது.

"மாயாவதி அமைத்துள்ள சிலைகளையும் மண்டபங்களையும், அடுத்துள்ள காலி இடத்தில் மக்களுக்குத் தேவைப்படும் கல்வி நிலையங்கள்,மருத்துவ மனைகள் ஆகியவற்றை அமைப்போம்" என்றதன் மூலம்,



முலாயம் சிங் யாதவ்

ஆக்கபூர்வமான பணிகளை எங்கள் அரசு மேற்கொள்ளும் எனக் கோடிட்டுக் காட்டியுள்ளார். அதுபோல, ராகுலின் வியூகங்களை நொறுக்கி அமேதி ரேபரேலி போன்ற காங்கிரசின் கோட்டைகளிலேயே அதனை மண் கவ்வ வைத்துள்ளார்.

# தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நாட்டுக்கு எதிராக செயற்படுகின்றன

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நாட்டுக்கு எதிராக செயற்பட்டு வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. வெளிநாடுகளிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளும் முக்கிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நாட்டுக்கு பாதகமான நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தீர்மானம் தொடர்பில் மேற்குலக நாடுகளுக்கு ஆதரவாகவே தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் செயற்பட்டு வருவதாகக் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலும் ஜெனீவாவிலும் இலங்கைக்கு எதிரான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது. நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதன் மூலம் சில தரப்பினர் பணம் சம்பாதிக்க முயற்சிப்பதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

தன்னார்வத் தொண்டு நிறுவன செயற்பாட்டாளர்களான பாக்கியசோதி சரவணமுத்து, சுனிலா அபேசேகர மற்றும் நிமால்கா பொனாண்டோ போன்றவர்கள் ஜெனீவா அமர்வுகளில் கலந்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ஜெனீவா செல்வதனை அரசாங்கம் தடுத்துள்ளதாக நோர்வே குற்றம் சுமத்திய போதிலும் பல மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ஜெனீவா சென்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பான நகல் திட்டத்தில் திருத்தங்களை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக இலங்கைக்கு அதிகளவிலான ஆதரவு கிடைக்கப் பெற்று வருவதாகவும் இதனால் உத்தேச தீர்மானத்தில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாகவும் இலங்கை அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# மருதானையில் ரயில் தடம்புரண்டது

(கொழும்பு)

மருதானை ரயில் நிலையத்திற்கு அருகில் தடம்புரண்ட ரயில்பெட்டிகள் மீண்டும் ரயில் மார்க்கத்தில் நேற்று முன்தினம் இரவு நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த ரயில் நேற்று முன்தினம் மாலை தடம்புரண்டதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக அன்றைய தினம் மாலை ரயில் போக்குவரத்தில் தாமதம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-7)

# செல்வபுரத்தில் வீடு தீப்பற்றியது உடைமைகள் எரிந்து நாசமாகின

(வவுனியா)

வவுனிக்குளம் செல்வபுரத்தில் வீடொன்றில் தீரென ஏற்பட்ட தீ விபத்து காரணமாக அந்த வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

செல்வபுரத்தைச் சேர்ந்த வைரவநாதன் ஜெயரூபன் என்பவருடைய வீடே இவ்வாறு கடந்த சனிக்கிழமை மாலை தீப்பற்றி எரிந்து அழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தகரக் கூரையைத் கொண்ட இந்த வீட்டில் ஜெயரூபன் தனது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் வசித்து வந்தார். சம்பவத்தின் போது வீட்டில் எவரும் இருக்கவில்லை.

ஜெயரூபன் வீட்டுக்கு வெளியில் ஏதோ வேலையில் இருந்தாராம். பிள்ளைகள் இருவரும் அயல் வீட்டிற்குச் சென்றிருந்தார்கள். ஜெயரூபனின் மனைவி ஏதோ அலுவலாக வெளியில் சென்றிருந்தார்.

திடீரென வீடு தீப்பற்றி எரிவதைக் கண்ட வீட்டு உரிமையாளர் என்ன செய்வதென தெரியாமல் திகைத்து நிற்க ஊரவர்கள் கூடி தீயை அணைப்பதற்கு எடுத்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

எனினும் வீட்டின் வெளிப்புறத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியொன்றை மாத்திரம் மீட்க முடிந்திருக்கின்றது. தீயை அணைப்பதற்கும் வீட்டிலிருந்த பெறுமதியான பொருட்களை மீட்பதற்கும் முயற்சித்த போது ஜெயரூபன் காயத்திற்கு உள்ளாகி மல்லாவி வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீட்டில் இருந்த வாழ்வாதாரத்திற்குத் துணையாக இருந்த தையல் இயந்திரம் மற்றும் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப்பணம் மற்றும் பெறுமதிமிக்க பொருட்கள் தொலைக்காட்சிப் பெட்டி அடையாள அட்டை அட்டை, குடும்ப அட்டை உட்பட முக்கிய ஆவணங்கள் அனைத்தும் அழிந்து விட்டன.

மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட பெறுமதியான பொருட்கள் அழிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்னொழுக்கு ஏற்பட்டதன் காரணமாகவே இந்தத் தீவிபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக கிராமசேவை அதிகாரிக்கும் பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

# நாட்டில் அமைதி நிலவுகிறது; கடமை நேரத்தில் மட்டும் ஆயுதம் வைத்திருக்கலாம்

## இராணுவத்தினர் கருத்து

(கொழும்பு)

கடமை நேரத்தில் மட்டுமே இராணுவப் படையினர் ஆயுதங்களை வைத்திருக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கடமை நேரம் முடிவடைந்ததன் பின்னர் இராணுவப் படையினர் ஆயுதங்களை மீள ஒப்படைக்க வேண்டுமென தெரிவிக்கப்படுகின்றது

எதிர்காலத்தில் இந்த நியதி கடுமையாக அமுல்படுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. கொழும்பு உள்ளிட்ட நாட்டின் ஏனைய பகுதிகளில் சமாதானம் நிலை நாட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆயுதங்களை எந்த நேரமும் தாங்கித் திரிய வேண்டிய அவசியம் கிடையாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொதுமக்களுடனான தொடர்புகளின் போது படையினர் கூடுதல் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒரு பாதகமான சம்பவம் ஒட்டுமொத்த இராணுவத்தின் நற்பெயருக்கு பாரிய களங்கத்தை உண்டு பண்ணக் கூடுமென இராணுவத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொதுமக்களின் இதயங்களை வென்றெடுக்கும் வகையில் படையினர் கடமையாற்ற வேண்டியது அவசியமானது என வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-2)

# வாழ்க்கை முறைகளை தாங்கிய கண்காட்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் கலாசார அலுவலகத் திணைக்களமும் இணைந்து நடத்தும் இருநாள் அரச ஓவிய சிற்ப கண்காட்சி நேற்று முன்தினம் மட்டக்களப்பில் ஆரம்பமானது.

கல்லடி, நொச்சிமுனை இந்து கலாசார திணைக்கள மண்டபத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற இந்தக் கண்காட்சியை மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் கே.விமலநாதன், உதவி அரசாங்க அதிபர் சிவரஞ்சினி ஆகியோர் திறந்து வைத்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கலாசாரம் வாழ்க்கை முறைமைகளை தாங்கிய ஓவியங்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கண்காட்சியை பெருமளவான மக்கள் நேற்று முன்தினம் காலை முதல் பார்வையிட்டு வருவதுடன் பாடசாலை மாணவர்களும் பார்வையிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை இந்தக் கண்காட்சி மண்டபம் திறந்திருக்கும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# ஒழுக்கம் தவறி நடப்போருக்கு சலுகைகள் குறைக்கப்படும்

## சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒழுக்கம் தவறி நடக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சலுகைகள் குறைக்கப்படும் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அண்மைக்காலமாக பாராளுமன்ற உறுப்பினர் ஒழுக்கமின்றி செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். இவ்வாறு செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சலுகைக் குறைப்பு தண்டனை விதிக்கப்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வெளிநாட்டு விஜயங்கள், விசேட பாராளுமன்ற சலுகைகள், பாதுகாப்பு வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் குறைக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஒழுக்கயீனமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் பாராளுமன்ற ஒழுக்காற்று குழு பரிந்துரைகளை முன்வைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)








சொண்ட் நிறுவனத்தினால் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் அண்மையில் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் *சூழலில் பெண்கள்* எனும் தலைப்பில் வைத்திய கலாநிதி திருமதி முல்லை பரமேஸ்வரன் உரையாற்றுவதையும் பெண்களின் உயர் பதவிக்கான விருதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்திற்கு நிறுவனத் தலைவர் ச.செந்தூரராசா வழங்கி கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# யுத்தத்தில் 40 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டனர் சர்வதேசம் இலங்கையை மன்னித்துவிடக்கூடாது

## தாருஸ்மன் உருக்கம்



(கொழும்பு)

**இலங்கை இராணுவத்தினரின் எறிகணை வீச்சில் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என நாம் எமது அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயத்தை கற்றுக்கொண்ட பாடங்களுக்கான ஆணைக்குழுவானது புலிகளின் எறிகணையில் அல்லது துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டதாக பதிலளித்துள்ளதாக ஐ.நா.அறிக்கையை தயாரித்த தாருஸ்மன் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

இது தொடர்பில் தாருஸ்மன் மேலும் தெரிவித்திருப்பதாவது, இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட யுத்தகால மீறல்கள் தொடர்பான உண்மைகளை நாம் கண்டறிந்து அறிக்கையாக தயாரித்தோம்.

எமது விசாரணையின் முடிவில் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தில் பங்கு கொண்ட இரு தரப்புக்களும் சட்ட விதிமுறைகளை திட்டமிட்ட வகையில் மீறி நடந்து கொண்டதற்கான நம்பகமான ஆதாரங்களையும் சாட்சியங்களையும் நாம் கண்டு கொண்டோம்.

இரு தரப்புகளும் யுத்த விதிமுறைகளை மீறியதால் 40 ஆயிரம் வரையானவர்கள் தமது உயிர்களை இழந்துள்ளனர் என்ற உண்மையையும் நாம் கண்டறிந்து கொண்டோம்.

அதாவது லிபியா அல்லது சிரியாவில் இடம்பெற்ற யுத்தத்தின் போது கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கையின் பல மடங்காக இது காணப்படுகிறது இப் போர்க் குற்றங்கள் தொடர்பாக இலங்கையை சர்வதேசம் மன்னித்துவிடக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# தங்கத்துடன் இளைஞர் கைது

(கொழும்பு)

சிங்கப்பூரிலிருந்து 10.1 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கத்துடன் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இலங்கை இளைஞர் ஒருவர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

தெமட்டகொடவைச் சேர்ந்த 21 வயதான இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 216 தங்கச் சங்கிலிகள், 20 நெக்லஸ்கள், 6 ஜோடி காதணிகள், 13 தங்க பிஸ்கட்டுகள் உட்பட 1.74 கிலோகிராம் எடையுள்ள தங்கத்தை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (அ)




உலக குளுக்கோமா வாரத்தினை முன்னிட்டு கொழும்பு கண் வைத்தியசாலைக்கு முன்னாள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பாத யாத்திரை நடைபெற்றதைப் படத்தில் காணலாம்.

# இலங்கை, இந்திய இராணுவத்தினர் உயர்மட்ட பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இலங்கை, இந்திய இராணுவத்தினருக்கு இடையில் உயர்மட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவப் பயிற்சி நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிப்பது குறித்து இந்தப் பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதில் கனிஷ்ட உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்குவது குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரியவிற்கும் இந்திய இராணுவ உயரதிகாரி லெப்டினன் ஜெனரல் அஜய் குமார் சிங்கிற்கும் இடையில் நேற்று முன் தினம் இப் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

அஜய் குமார் சிங் தற்போது இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-7)

# பேருந்து சேவையை சீராக நடத்தக்கோரி பல்கலை மற்றும் தொ.நு.க.மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

750 மற்றும் 764 ஆகிய இலக்க பாதையினூடாக பயணிக்கும் யாழ்.பல்கலைக்கழக, தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் கோண்டாவில் இலங்கை போக்குவரத்துச் சபையின் முன்னால் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இப் பாதையினூடாக பயணிக்கும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துகளில் பயணம் செய்யும் போது ஏற்படும் பயணச் சிக்கல்களினை தீர்க்க கோரியே மேற்படி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

764 இலக்கப் பாதையில் இ.போ.சபைக்குச் சொந்தமான இரு பேருந்துகளே சேவையில் ஈடுபடுவதனால் பருத்தித்துறையிலிருந்து யாழ். வரை பயணிக்கும் பயணிகளில் பெருமளவானோர் இப் பேருந்துகளிலேயே பயணம் செய்கின்றனர்.

இதனால் உரிய நேரங்களுக்குச் செல்ல வேண்டிய மாணவர்கள் நேரம் தாழ்த்தியே விரிவுரைகளுக்கு செல்ல வேண்டி ஏற்படுகின்றது.

இது தவிர பெருமளவிலான மாணவர்களை இப்பாதைகளில் சேவையிலீடுபடும் பேருந்துகள் சிலவேளைகளில் ஏற்றாமலும் செல்கின்றன.

மேலும் இப்பாதைகளினூடாக உத்தியோகத்தர்களுக்குரிய பேருந்து சேவை இடம்பெறும்போதும் அவர்களும் இப்பேருந்துகளில் பயணிப்பதோடு பருவகால சீட்டில்லாத யாழ்ப்பாணம் செல்லும் பயணிகளும் இதில் பயணிப்பதனால் ஆயிரத்து 25 ரூபாய் செலுத்தி பயணச்சீட்டினை பெற்ற மாணவர்கள் இடை வழியில் இறங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

காலையில் இப்பாதையினூடாக 6.30 மற்றும் 7.15 மணியளவில் இரு பேருந்துகள் மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றதோடு பின்னர் மாலையில் ஒரு பேருந்து மட்டுமே போக்குவரத்தில் ஈடுபடுகின்றது.

போக்குவரத்தில் ஈடுபடும் இரு பேருந்துகள் கூட ஒழுங்கான நேரத்தில் சேவையில் ஈடுபடுவதில்லை என்றும் சில வேளைகளில் ஒரு பேருந்து மட்டுமே சேவையில் ஈடுபடும் எனவும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் உரியவர்களுடன் முதலில் கலந்துரையாடப்பட்டபோது முன்னேற்றகரமான பதில் கிடைக்காத போதும் பின்னர் பொலிஸார் மாணவர்களை சமாதானப்படுத்தி உரிய தீர்வு பெற்றுத்தரப்படும் என கூறப்பட்டு ஆர்ப்பாட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. (அ-4)

# போக்குவரத்து சேவையில் ஒரே அட்டவணைக்கு எதிராக போராட்டம்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகள் என்பனவற்றின் தொழிற்பாடுகளை ஒரே நேர அட்டவணையின் கீழ் கொண்டு வரும் திட்டத்திற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்த எதிர்ப்பினை போக்குவரத்து சபையின் ஊழியர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த திட்டத்தை கைவிடும்படி அரசாங்கத்தை கோரும் கையெழுத்து போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். தற்போது ஐந்து தனியார் பேருந்துகளுக்கு ஒரு போக்குவரத்து சபை பேருந்து என்ற அடிப்படையிலே நாடளாவிய ரீதியாக பேருந்து சேவைகள் இடம்பெறுவதாக ஊழியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில் ஒரே நேர அட்டவணையின் கீழ் இயங்குவது நடைமுறைக்கு பொருந்தாத ஒரு விடயம் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ-7)

# குடியரசு தலைவர் ஆற்றிய உரை ஏமாற்றமளிக்கிறது இலங்கை தமிழர் குறித்து எதுவும் பேசப்படவில்லை



(புதுடில்லி)

நாடாளுமன்றத்தின் இரு அவை கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத் தலைவர் பிரதீபா பட்டேல் ஆற்றிய உரையில் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் பற்றியும் இலங்கைக்கு எதிரான தீர்மானம் குறித்தும் மத்திய அரசு தனது நிலையை பதிவு செய்யாதது ஏமாற்றம் அளிக்கிறது என்று இந்திய கம்யூனிஸ்ட், தி.மு.க., விடுதலை சிறுத்தைகள் கட்சிகள் கருத்து தெரிவித்துள்ளன.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் டி.ராஜா கூறுகையில்,

குடியரசுத் தலைவரின் உரை பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இலங்கைத் தமிழர் பகுதியில் வசிப்பவர்களுக்கு அரசியல் தீர்வு பெற்றுத்தர முயற்சிப்பது பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை. அதே போல் இலங்கைக்கு எதிரான தீர்மானம் குறித்து தனது நிலையைப் பதிவு செய்யாமல் இந்தியா இருந்துள்ளது. இந்தச் செயல் கண்டனத்துக்குரியது. இலங்கை யில் நடைபெற்ற அனைத்தையும் அறிந்த நட்பு நாடு இந்தியா அதற்கு உதவி செய்து வரும் நாடாகவும் விளங்கி வருகிறது.

அதனால் இந்த விவகாரத்தில் ஏனைய நாடுகளை விட இந்தியாவுக்குத் தான் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் ஒரு முடிவை எடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. ஆனால், குடியரசுத் தலைவரின் உரையை பார்க்கும் போது இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை இந்தியா கைவிட்டு விட்டது. அதனால் நாங்கள் தொடர்ந்து இந்த விவகாரத்தை நாடாளுமன்றத்தில் எதிரொலிப்போம் என்று அவர் கூறினார்.

**தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி தெரிவிக்கையில்,**

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு நாடாளு மன்றம் வாயிலாக இந்தியா ஏதாவது ஒரு செய்தியை இலங்கை அரசுக்கு தெரிவிக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் ஒரு வார்த்தை கூட குடியரசுத் தலைவரின் உரையில் இடம்பெறவில்லை.

பெயர் அளவில் இலங்கையில் போரினால் உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்துள்ள மக்களை மீள்குடியேற்றும் பணிகளும் மறுவாழ்வுத் திட்டங்களையும் நிறைவேற்றி வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது எங்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கக்கூடிய உரையாக அமைந்து விட்டது என்று அவர் கூறினார்.

**விடுதலை சிறுத்தைக்ள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் கூறுகையில்,**

குடியரசுத் தலைவரின் ஒரு மணி நேர உரையில் ஒரு வரி மட்டுமே ஈழத் தமிழர்கள் நிலைமை தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருந்தது. உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு இந்திய அரசு ஏற்பாடுகளை செய்து வருகிறது. என்று மட்டும் கூறப்பட்டுள்ளது.. இது மிகவும் ஏமாற்றத்தை அளிக்கிறது.

இலங்கைக்கு எதிராக அமெரிக்க அரசு கொண்டு வந்துள்ள தீர்மானம் மீது இந்தியாவின் நிலையை உலக நாடுகள் அனைத்தும் பரபரப்புடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றன.

அரசின் தரப்பில் வெளிப்படையான நிலை தெரிவிக்கப்படவில்லை. தமிழக மீனவர்கள் ஒவ்வொரு நாளும் இலங்கை கடற் படையினரால் பல்வேறு தாக்குதலுக்கு ஆளாகி வருகிறார்கள். மீன் பிடிக்கும் உரிமையை இழந்து படுகொலை சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன. அவர்களை பாதுகாக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் குடியரசு தலைவரின் உரையில் இடம் பெறவில்லை என்றார். (அ-2)

# கண்காணிப்பு செயற்கைக்கோள் இவ்வாண்டில் முதல்முறையாக ஏவப்படும்



இந்தியாவின் முதல் கண்காணிப்பு செயற்கைக்கோள் இந்த ஆண்டில் விண்ணில் ஏவப்படும் என்று குடியரசுத் தலைவர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற வரவு செலவுத்திட்ட கூட்டத் தொடர் கடந்த திங்கட்கிழமை தொடங்கியது. இதனை முன்னிட்டு குடியரசுத் தலைவர் பிரதீபா பட்டேல்இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றினார். அதில் இந்தியாவின் முதல் கண்காணிப்பு செயற்கைக்கோள் தொடர்பாக அவர் பேசியது.

முற்றிலும் இந்திய தொழில்நுட்பத்தில் தயாரான பிராந்திய கண்காணிப்பு செயற்கைக்கோள் இந்த ஆண்டில் விண்ணில் நிலை நிறுத்தப்படும். ஆர் ஐ எஸ் ஏ டி-1 என்ற இந்த செயற்கைக்கோள் இந்தியாவின் முதல் மைக்ரோவேவ் ரிமோட் சென்சிங் செயற்கைக்கோளாகவும் இருக்கும்.

அமெரிக்காவின் ஜிபிஎஸ் ரஷ்யாவின் குளோனாஸ் தொழில் நுட்பத்துறைக்கு ஐரோப்பாவின் கலிலியோ சீனாவின் காம்பஸ் ஆகிய செயற்கைக்கோள் கண்காணிப்பு தொழில் நுட்பத்துக்கு இணையாக இந்தியாவின் இந்த செயற்கை கோள் தொழில்நுட்பம் இருக்கும்.


வேளாண்மை, வானிலை போன்ற துறைகளுக்கு மட்டுமல்லாமல் இந்திய எல்லைப் பகுதியை கண்காணிப்பது பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் அன்னிய ஊடுருவல்களைத் தடுப்பது போன்ற பணிகளையும் இந்த செயற்கைகோள் மூலம் மேற்கொள்ள முடியும். இதுதவிர 2012 ஆம் ஆண்டில் மேலும் பல்வேறு செயற்கைக்கோள் திட்டங்களும் உள்ளன என குடியரசு தலைவர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

(அ-2)




# இலங்கையில் பல கொடுமைகள் நடந்துள்ளன

## கருணாநிதி ஆதங்கம்



(சென்னை)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் மகன் சுடப்பட்டது உட்பட பல கொடுமைகள் இலங்கையில் நடந்துள்ளன என தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் கடந்த திங்கட்கிழமை அவர் கூறியதாவது, பிரபாகரனின் மகன் சுடப்பட்டு கிடப்பதை தொலைக்காட்சியில் வெளியிட்டுள்ளனர். இதுபோல பல கொடுமைகள் நடந்துள்ளன.


அதனால்தான் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். இப்பிரச்சினை குறித்து தமிழக அரசியல் கட்சிகள் விடுத்துள்ள கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய அரசை கேட்டுக் கொள்கின்றேன்.

இதுதொடர்பாக பிரதமரைச் சந்திக்குமாறு நாடாளுமன்ற தி.மு.க. தலைவர் டி.ஆர்.பாலுவை கேட்டுக் கொண்டேன். அதன்படி அவர். சந்தித்துப் பேசியுள்ளார். சமீபத்தில் முடிந்த சட்டப் பேரவைத் தேர்தல்களின் முடிவுகளைத் தொடர்ந்து மூன்றாவது அணி, நான்காவது அணி என பேசப்படுகிறது. அணிகள் வருகின்றதோ அதனால் பிணிகள் வருகிறதோ என்று என்னால் இப்போது சொல்ல முடியாது என்றார். (அ-2)

# அணுமின் நிலையத்தை மூடக்கோரி அடையாள வேலை நிறுத்தம்

(நெல்லை)

கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வலியுறுத்தி மீனவர்கள் நாளைய தினம் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக உதயகுமார் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்துள்ளார். அப்போது அவர் கூறியதாவது,



கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வலியுறுத்தி தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறோம். நேற்றைய தினம் கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூடவும், அணுமின் நிலையத்தை ஆதரிப்போர் மனம் மாறவும், மாற்று வழித் திட்டத்தில் மின் உற்பத்தியை ஆரம்பித்து தமிழகம் வாழ்வாங்கு வாழ சிறப்பு வழிபாடு இடம்பெற்றது.

போராட்டத்தை வலுப்படுத்தும் வ்கையில் நாளை வியாழக்கிழமை தமிழ் நாட்டின் கடற்கரை கிராமங்களில் போராட்டம் நடைபெற இருக்கிறது. அன்றைய தினம் மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல மாட்டார்கள். வீடுகளில் கறுப்புக்கொடி காட்டி, சுவரொட்டிகள் ஒட்டி, துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் செய்து எதிர்ப்பை காட்டுவார்கள்.

தமிழ் நாட்டில் சுமார் 500 மீனவ கிராமங்கள் உள்ளன, அதில் 15 இலட்சம் மீனவர்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல மாட்டார்கள். முதற்கட்டமாக மீனவ கிராமங்களில் போராட்டம் நடக்கிறது.

இதைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் போராட்டம் நடைபெறும். அதேநாளில் வட இந்தியாவை சேர்ந்தவர்கள் மற்றும் கேரளாவை சேர்ந்தவர்கள் கூடங்குளம் போவோம் என்ற முழக்கத்தோடு இடிந்தகரைக்கு வருகிறார்கள். அங்கு மாபொரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. கூடங்குளம் அணுமின் நிலையம் செயற்படாததால் தினமும் ரூபா 5 கோடி இழப்பு ஏற்படுவதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

1996 ஆம் ஆண்டு முதல் இன்று வரை மத்திய அரசியல் அங்கம் வகிக்கும் தி.மு.க. தமிழக மின்சார பற்றாக்குறையை தீர்க்க என்ன முயற்சி செய்தது. மாற்று வழி மின் திட்டங்களுக்கு நிதி தருமாறும் கேட்கிறது. ஆனால், கருணாநிதி என்ன நடவடிக்கை எடுத்தார் என்பதை விளக்க வேண்டும்.

சங்கரன் கோவில் தொகுதியில் கொஞ்சம்வாக்குகிடைக்காதா? என்று கருணாநிதி இப்படி கூறியுள்ளார். இதை கண்டித்து நாளைய தினம் நெல்லைக்கு வரும் கருணாநிதிக்கு இடிந்தரை கிராமத்தில் இருந்து கறுப்புக்கொடி காட்டி போராட்டம் நடத்துவோம் என அவர் கூறினார். (அ-2)

# ஐ.நா. தீர்மானம் குறித்து இந்தியா ஆதரிக்குமா?

## பதிலளிக்க கோருகிறது அ.தி.மு.க.

(புதுடில்லி)

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டு வரப்படும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்குமா என்பது குறித்து பிரதமர் பதிலளிக்க வேண்டும் என்று மாநிலங்களவையில் அ.தி.மு.க. எம்.பி மைத்ரேயன் வலியுறுத்தினார்.

மாநிலங்களவையில் மைத்ரேயன் பேசுகையில்,

பிரதமரிடம் தமிழக முதல்வர் ஜெயலிதா இந்த விவகாரத்தை எழுப்பினார். ஆனால், இந்த தீர்மானத்தில் இலங்கை அரசுக்கு ஆதரவளிக்கப் போவதாக இந்தியா சூசகமாகத் தெரிவித்துள்ளது. இலங்கை தமிழர்களுக்கு எதிரான போர்க் குற்றம் குறித்து ஒட்டுமொத்த உலகத்துக்குமே தெரியும் எனக் குறிப்பிட்டார். (அ-2)

## மீனவர் வலையில் சிக்கிய முருகன் சிலை



(காரைக்கால்)

காரைக்கால் கடல் பகுதியில் மீனவர் வலையில் மயிலுடன் கூடிய முருகன் சிலை சிக்கியது. இதை பொலிஸார் சார்பு ஆட்சியரிடம் நேற்று முன்தினம் ஒப்படைத்தனர்.

கடந்த 3 நாள்களுக்கு முன்னர் மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர். நேற்று முன்தினம் மாலை காரைக்கால் துறை முகத்துக்கு திரும்பினர்.

துறைமுகத்தில் வலையிலிருந்த மீன்களை அப்புறப்படுத்தும் போது சாக்கு பையொன்று இருந்துள்ளது. மீனவர்கள் அதை பிரித் துள்ளனர். உள்ளே மயிலுடன் கூடிய முருகன் கல் சிலை இருந்தது. அதை நிரவி பொலிஸ் நிலையத்தில் மீனவர்கள் ஒப்படைத்து விவரங்களை விளக்கிக் கூறினர். (அ-2)

## பரீட்சை நிலைய இடமாற்றம்

இலங்கை வங்கியாளர் சங்கத்தினால் இம்மாதம் 17,18,24,25,31 ஆம் திகதிகளில் யா/வேம்படி மகளிர் கல்லூரியில் நடக்கவிருக்கும் பரீட்சைகள் யா/திருக்குடும்பக் கன்னியர் மடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வங்கியாளர் சங்கப்பரீட்சைகள் இணைப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகள் இதனைக் கவனத்திற்கொண்டு யா/திருக்குடும்பக் கன்னியர் மடத்திற்கு வருகை தருமாறு அவர் கேட்டுள்ளார். (அ)

# கட்சி தொழிற்சங்க பேதங்களை மறந்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுங்கள்

## மனோ கணேசன் அழைப்பு

(கொழும்பு)

கட்சிதொழிற்சங்க பேதங்களை கடந்து வந்து ஹற்றனில் இன்றையதினம் நடைபெறவுள்ளன. எதிரணி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளுங்கள் என ஐக்கிய மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் அழைப்பு விடுத்துள்ளார்.

இன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு ஹற்றன் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிரணியின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பில் விடுத்துள்ள செய்தியிலேயே அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டில் பொருளாதார நெருக்கடியும் அதன் மூலம் அரசியல் நெருக்கடியும் உச்சகட்டத்தை நோக்கி செல்கின்றன. இதனால் இன்று இந்நாட்டில் விலைவாசி சகிக்க முடியாத அளவில் உயர்ந்து வருகின்றது.

அரசாங்கம் யுத்தத்திற்கு பின்னர் கொண்டு வருவதாக கூறிய நிம்மதி இன்று வரவில்லை.

ஆனால், மீண்டும் மனித உரிமை மீறல்கள் நடைபெற தொடங்கி விட்டன. இந்த அரசாங்கத்தின் மோசமான கொள்கைகள் காரணமாக ஏற்பட்டு வரும் இத்தக்கைய அலங்கோலங்களுக்கு எதிரான போராட்டத்தில் மலையக மக்களும் இணைந்து கொள்ள வேண்டும். இந்நோக்கில் நாளை 3 மணிக்கு ஹற்றனில் நடைபெறும் எதிரணி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மலையக தொழிலாளர்கள், முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள், இளைஞர்கள், மகளிர் உட்பட அனைத்து பிரிவினரும் கலந்து கொண்டு எமது தேசிய எதிர்ப்பு இயக்கத்தில் எமது மக்களின் பங்களிப்பை அடையாளப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். (அ-2)





சர்வதேச மகளிர் தினத்தையொட்டி வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ். சந்திரசிறியினால் நேற்று முன்தினம் ஆளுநரின் அலுவலகத்தில் வைத்து கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும், குடியேற்ற உத்தியோகத்தர்களுக்கும் நியமனக் கடிதம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண பிரதி செயலாளர் திருமதி ஆர். விஜயலட்சுமி, ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் மு.கால்டின், அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் என். பிரகலாநாதன் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

## உதைபந்தாட்டப் போட்டி

பருத்தித்துறை உதைபந்தாட்ட வெற் றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று புதன்கிழமை பி.ப.4 மணிக்கு முதலாவது போட்டி அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து அல்வாய் நக்கீரன் அணி மோதவுள்ளது. (அ-3-24)

## பெண் சடலமாக மீட்பு

கலேன்பிந்துனுவெவ- படிகாரமடு பகுதியில் சில தினங்களாக காணாமல் போயிருந்த பெண்ணின் சடலம் நீர் நிலையொன்றில் இருந்து மிட்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண் கடந்த 29 ஆம் திகதி காணாமல் போயிருந்ததாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதென பொலிஸார் குறிப்பிட்டனர்.

பிரதேசத்திலுள்ள நீர் நிலையொன்றில் சடலமொன்று காணப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து மீட்கப்பட்ட குறித்த சடலம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளதாகபொலிஸார் கூறினர்.

படிகாரமடு பகுதியை சேர்ந்த 65 வயதான பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (அ-2)

# குளுகோமா வாரத்தினை முன்னிட்டு கண் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)



உலக குளுகோமா வாரத்தினை முன்னிட்டு விசேட கண் பரிசோதனை சிகிச்சை நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.

இக் கண்ணழுத்த பரிசோதனை காலை 8 மணியிலிரு ந்து முற்பகல் 11.30 மணிவரை சுமார் 375 பேர் கண்பரிசோதனையை மேற்கொண்டனர்.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டிற்குள் கண்நோயற்ற சமுதாயத்தினை உருவாக்குதல் என்ற இலக்கில் நடைபெற்ற இச்சிகிச்சைக்கு முகாமில் கொழும்பில் இருந்தும் விசேட கண் வைத்திய நிபுணர்கள் வருகை தந்திருந்தனர்.

14 வீதமான குருட்டுத்தன்மைக்கு குளுகோமாவே காரணம் எனவும் ஆரம்ப நிலையில் இதற்கு எவ்வித அறிகுறிகளும் தெரிவதில்லை எனவும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே குளுகோமா தாக்கும் வீதம் அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இழந்த பார்வையினை எம் முறையாலும் மீளப் பெறமுடியாதென்பதனாலும் அனைவரும் அரச வைத்தியசாலைகளில் கண்களை பரிசோதித்து கொள்ளவும் என கண்வைத்திய நிபுணர்களினால் ஆலோசனையும் வழங்கப்பட்டது.

மேலும் இக் கண்பரிசோதனை முகாமில் கொழும்பிலிருந்து வருகை தந்த வைத்தியர்களான முதித குலதுங்க மங்கள கமகே, மலரரன் ஆகியோரும் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய கலாநிதிகளான சந்திரகுமார் மற்றும் ம.சரவணமுத்து, அ. சிறீஸ்கந்தராஜா, சு. திலீபன், சு. சிவபாதமூர்த்தி, சு. துஷ்யந்தி, மு.பிருந்தா, ஜோ. நிஷாந்தி, பா. தனேந்திரன், ம.ஆரணி ஆகிய வைத்தியர்களும் இக் கண்பரிசோதனை முகாமில் கலந்து கொண் டனர். (அ-4)

# மீன்பிடி படகுகளை விரைவில் பதிவு செய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இதுவரை 5 ஆயிரத்து 78 மீன்பிடி படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றைவிட படகுகளை பதிவு செய்யாமல் பலர் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக் களத்தின் உதவிப் பணிப்பாளர் என். கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் உபகரணங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையைத் துரிதப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளர் விஜயகுணவர்த்தன உள்ளிட்ட குழுவினரும் பங்கு கொண்டிருந்தனர்.

இந்த கலந்துரையாடலின் பின்பு கருத்து தெரிவிக்கையிலேயே உதவிப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்கள் தங்களது கடற்றொழில் கலங்களைப் (படகு) பதிவு செய்திருக்க வேண்டும்.

அவ்வாறு பதிவு செய்யாமல் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாக பதிவு செய்யப்பப்படாதோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால் தற்போது அந்த நிலை முற்றாக மாற்றமடைந்துள்ளது.

எனவே, சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.

கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி இந்தப் பதிவு நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் நடமாடும் சேவையினையும் மேற்கொண்டு வருகின்றோம்.

மானிப்பாய் காவற்கட்டுப் பகுதியில் நேற்று நடைபெற்ற நடமாடும் சேவையின் போது 150 இற்கு மேற்பட்டவர்கள் பதிவுகளை மேற்கொண்டனர்.

இது தவிர எமது திணைக்களத்திலும் பதிவு நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நடமாடும் சேவையின் போது உத்தியோகபூர்வமாக உரிமை மாற்றம் செய்யப்படாது கை மாற்றம் செய்யப்பட்ட உபகரணங்களைப் பதிவு செய்வதற்கான நடைமுறைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

பாதகம் செய்பவரைக் கண்டால் மோதி மிதித்து
விடு பாப்பா
அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா – *பாரதியார்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யாரங்கே! கூப்பிடுங்கள் அந்த அரியாத்தையை

வட பகுதியில் நாளாந்தம் நடைபெறும் கலாசாரச் சீர்கேடுகள், பாலியல் வன்புணர்வுகள் இவற்றையெல்லாம் பார்க்கும்போது, இனி இங்கு வாழ முடியாது என்ற நினைப்பு ஏற்படுகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகங்கள், காதல் ஏமாற்றங்கள், கருச் சிதைப்புகள், விவாகரத்துக்கள், பாலியல் வன்புணர்வுகள், விபச்சாரத் தொழில்கள், கடத்தல்கள், காணாமல் போதல்கள் இப்படி பெரியதொரு பட்டியல் நீண்டு செல்கின்றது.

தடுப்பாரும் இல்லை. தட்டிக் கேட்பாரும் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டு விட்டதனால் எதுவும் எப்போதும் நடக்கலாம்.

நிலைமை இதுவானால் எப்படி வாழ்வது என்ற ஏக்கம் பலரிடம் ஏற்பட்டுவிடுகின்றது.

கையடக்கத் தொலைபேசி மூலமாக ஏற்பட்டுள்ள கலாசாரச் சீரழிவைக் கட்டுப்படுத்தும் வலுவை பெற்றோர்கள் இழந்துவிட்டனர்.

சிறுவர் உரிமை என்ற சாசனம் நமக்கேன் வீண் வம்பு என்ற மனநிலையை நம் ஆசிரியர்களிடம் ஏற்படுத்திவிட பரிபூரண சுதந்திரத்தில் கலாசாரச் சீரழிவு சன்னதமாடுகின்றது.

தங்கள் இளம் பிள்ளைகளைப் பாதுகாப்பதில் பெற்றோர்கள் படும் ஏக்கத்தைப் புரிந்து கொள்ள முடியாத பிள்ளைகள் வாழ்கின்ற ஒரு சூழமைவு ஏற்பட்டுவிட்டது.

ஒருகாலத்தில் பெற்றோரின் உழைப்புக்குப் பெரும் பங்காற்றிய பிள்ளைகள் கூடவே, தங்கள் கல்வியிலும் அதீத கரிசனை காட்டி நின்றனர்.

அத்தகைய பிள்ளைகளே! சாதனையாளர்களாயும் மனித சமூகத்தின் உதாரண புருஷர்களாகவும் திகழ்ந்தார்கள்.

ஆனால், இன்று நிலைமை அதுவல்ல.

தாங்கள் எது செய்தாலும் பெற்றோர் அது பற்றிக் கேட்கக் கூடாது என்ற வக்கிரம் எங்கள் பிள்ளைகள் பலரிடம் ஏற்பட்டு விட்டது.

இதனால் அச்சமற்ற காதலிப்புகளும், சந்திப்புகளும், சல்லாபங்களும் நடந்தேறுகின்றன.

இவை தவிர பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் வன்புணர்வுகள் பற்றிய செய்திகளை நாளாந்த தினசரிகளில் பார்க்கும்போது இதயம் வெடிக்கும்போல் உள்ளது.

வன்புணர்வுகளைத் தடுக்க என் செய்யலாம் என்று நினைத்தபோது,

தம்பலகாமத்தில் நடந்த ஒரு செய்தியை வாசிக்க நேர்ந்தது.

வல்லுறவு கொள்ள முயன்ற கடற்படைச் சிப்பாய் ஒருவரின் ஆணுறுப்பை கத்தியால் அறுத்து, பெண் ஒருவர் தன்னைக் காப்பாற்றிக் கொண்டாராம்.

இதனைப் பார்த்தபோது, ஆனையை அடக்கிய அரியாத்தை என்று கேள்விப்பட்டிருக்கின்றோம்.

இது ஆண் உறுப்பையே அரிந்த அரியாத்தையாய் இருக்கே!

யாரங்கே! அந்த அரியாத்தையைக் கூப்பிடுங்கள் இங்கு.

கூடவே சொல்லுங்கள் மறக்காமல் அந்தக் கத்தியையும் கொண்டு வரும்படி.

# ஜெனிவா பிரேரணை நிறைவேறினால் தூதரகங்கள் முற்றுகையிடப்படும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை

ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 19ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளுக்கு எதிராக கொழும்பிலுள்ள தூதரகங்களின் முன்னால் முற்றுகைப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்று சிங்கள, பௌத்த தேசிய வாத அமைப்பான தேசப்பற் றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தேசிய அமைப்பாளரும், பொதுச்செயலாளருமான வசந்த பண்டார கூறுகையில்,

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு பல தீயசக்திகள் ஒத்துழைப்புகளை வழங்கிவருகின்றன. இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அதனை கண்டித்து கொழும்பில் பல்வேறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே அரசாங்கம் இப் பிரேரணையை தோல்வியடையச் செய்ய இறுதிவரை போராட வேண்டும்.

உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பில் சர்வதேச கண்காணிப்புக்குழு ஒன்றுக்கும் அனுமதி வழங்கக்கூடாது. அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் நாட்டில் பாரிய சர்வதேச தலையீடுகளே ஏற்படும். எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டங்கள் தொடர்பில் ஏனைய அரசியல் கட்சிகள் மற்றும் குடியியல் அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உள்நாட்டு விசாரணை பொறிமுறையினை கண்காணிக்க சர்வதேச கண்காணிப்புக் குழுவினை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஜாதிக ஹெல உறுமய தேசிய சுதந்திர முன்னணி மற்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஆகியவை கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந–8,11)

# கருணாநிதிக்கு மன்மோகன் கடிதம்

இலங்கையில் நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாக சுதந்திரமான விசாரணை நிகழ்த்தப்பட வேண்டியது அவசியம் என்று தமிழக முன்னாள் முதல்வரும் திமுக தலைவருமான கருணாநிதிக்கு எழுதிய கடிதத்தில் பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக கருணாநிதிக்கு மன்மோகன் எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டயுத்தத்தின்போது மனித உரிமைகள் மீறப்பட்டது தொடர்பாக இலங்கை அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக் குழு விசாரணை நடத்தி பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். இலங்கையில் தமிழர்கள் சுயமரியாதையுடன் சமத்துவத்துடன் வாழ வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது.

இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பான புகார்கள் சுதந்திரமாக விசாரிக்கப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்றும் மன்மோகன் சிங் அதில் கூறியுள்ளார். (ந–8,11)

# மெய்வல்லுநர் போட்டி

(கைதடி)

கைதடி தெற்கு மின்னொளி முன்பள்ளி வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மின்னொளி முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை அதிகாரி வேதநாயகம் தபேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (ந–11)

# உதைபந்தாட்டப்போட்டி

(கரவெட்டி)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி இன்று புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் இரு பிரிவுகளாக இரு மைதானங்களில் நடைபெறவுள்ளது.

இதில் ஏ பிரிவினருக்கான போட்டி மாலுசந்தி மைக்கல் விளையாட்டு கழக மைதானத்திலும் பி பிரிவினருக்கான போட்டி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது. (அ–3–24)

# நீராடிய பெண்ணிடம் அங்கசேட்டை இளைஞர்கள் இருவருக்கு நல்ல பூசை

## காரைநகர் கசூரினாவில் சம்பவம்

காரைநகர் கசூரினா கடற்கரையில் தென் பகுதி மக்களின் வருகை அதிகரித்துள்ள நிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை கடலில் நீராடிக் கொண்டிருந்த தென் பகுதிப் பெண் ஒருவரிடம் அங்க சேட்டையில் ஈடுபட்ட இளைஞர்கள் இருவர் பொலிஸாரினால் நையப்புடைக் கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள் ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் அதிகளவு சுற்றுலாப் பயணிகள் நீராடிக் கொண்டிருந்தனர்.

இதில் தென்பகுதியில் இருந்து வந்தவர்களும் அடங்குவர். இந்நிலையில் தென் பகுதியைச் சேர்ந்த இளம் பெண்ணொருவரும் குடும்பத்துடன் நீராடிக் கொண்டிருந்த போது நீருக்குச் கீழாகச் சென்ற இளைஞர்கள் அப் பெண்ணுடன் அங்கசேட்டையில் ஈடுபட்டனர்.

இதனால் கோபமடைந்த அப்பெண் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கு முறையிட்டார்.

இதனையடுத்து சிவில் உடையில் இருந்த பொலிஸார் கடலுக்குள் பாய்ந்து சென்று சேட்டையில் ஈடுபட்ட இரு இளைஞர்களையும் கடலுக்குள் வைத்து தாக்கியதுடன் அவர்களை கரைக்கும் கொண்டு வந்தும் தாக்கினர். பின்னர் அப் பகுதியில் இயங்கும் தற்காலிக பொலிஸ் நிலையத்தில் வைத்து எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் விடுவித்தனர்.

தற்போது கசூரினா கடற்கரைப் பகுதியில்சுற்றுலாப்பயணிகளின்எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் இளைஞர்களின் தொல்லைகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் நோக்கில் பொலிஸார் சிவிலுடையில் கடமை புரிந்து வருகின்றனர். (ந–8,11)

# சர்வதேச சவால்களை எதிர்கொள்ள அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## அமைச்சர் அபேவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான சர்வதேச சவால்களை எதிர்கொள்ள அனை வரும் ஒன்றிணைய வேண்டும் என பதில் ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தங்கள் மற்றும் சவால்கள் என்ற தொனிப்பொருளில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செயமலர்வு ஒன்றில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இன்றுள்ள சர்வதேச பிரச்சினைகள் தொடர்பில் அனைவரும் தெளிவுடன் இருப்பது மற்றும் சர்வதேச ரீதியில் இந்தப் பிரச்சினையை எவ்வாறு எதிர்கொள்வது என்ற இரு கோணங்களில் இந்த விடயத்தை கவனத்திற்கொள்ள வேண்டும் என பதில் ஊடகத்துறை அமைச்சர் கூறினார்.

நாட்டிற்குள் நாம் அனைவரும் ஒருமித்த நிலைப்பாட்டில் இருக்க வேண் டும் எனவும் லக்ஸ்மன் யாப்பா சுட்டிக் காட்டினார். எனினும் சர்வதேச ரீதியில் பல்வேறு வகையில் கேள்விகளை எழுப்புவதற்கான இயலுமை இல்லாதமையால் நாட்டின் ஒருமித்த நிலைப்பாட்டில் செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஒற்றுமையுடன் கடமையாற்ற வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடெனவும் பதில் ஊடகத்துறை அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ–2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## கொடுப்பவனாக வாழுங்கள்



கையை இறைவன் படைத்தது கொடுப்பதற்கே, நீ பட்டினியாய்க் கிடக்க நேர்ந்தாலும் உன்னிடத்திலுள்ள கடைசிப் பருக்கையையும் பிறருக்கு கொடுத்துவிடு, அவ்வாறு பிறருக்கு கொடுப்பதாலேயே நீ பூரணமடைவாய். தெய்வமாகவும் ஆவாய்.

தன்னை அடக்கப் பழகிப் கொண்டவன் புறத்தேயுள்ள எதற்கும் வசப்பட்ட மாட்டான். அதன்பின் அவனுக்கு அடிமைத்தனம் எதுவுமில்லை. அவன் மனம் விடுதலை பெற்று விட்டது. அத்தகைய நிலைமை அடைந்தவனே உலகத்தில் நன்றாக வாழக்கூடிய தகுதி பெற்றவனாவான்.

அன்பைக் கொடு, உதவியைக் கொடு, பணியைக் கொடு இவ்வாறு உலகில் எப்போதும் கொடுப்பவனாக நிற்க வேண்டும். பதிலுக்கு ஒன்றையும் எதிர்பார்க்கக் கூடாது. இறைவன் நமக்கு கொடுப்பது போன்று நமது ஈகை குணத்தால் நாமும் கொடுப்போம். தூய்மையான மனதைப் பெறுவதுடன் இறைவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். அவனை சார்ந்து நிற்க முனைவதுடன் நன்னெறியில் நிற்க வேண்டும்.

# இராணுவவீரர் சுட்டுக்கொன்றதன் எதிரொலி;

# அமெரிக்காவிற்கு பதிலடி கொடுப்போம்

## தலிபான்கள் எச்சரிக்கை

ஆப்கானிஸ்தானில் இராணுவ வீரர் வெறிபிடித்து துப்பாக்கியால் சுட்டதில் குழந்தைகள் உட்பட 16 பேர் இறந்த சம்பவத்துக்கு அமெரிக்காவுக்கு பதிலடி கொடுப்போம் என்று தலிபான் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அமெரிக்க வீரர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை துப்பாக்கியுடன் வெளியேறி அருகில் உள்ள கிராமங்களுக்குள் சென்று வெறிபிடித்து பொதுமக்களை கண்மூடித்தனமாக சுட்டான்.

இந்த கொடூரத் தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 16 பேர் உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள், குழந்தைகள் ஆவார்கள்.

இந்தச் சம்பவம் ஆப்கானிஸ்தான் அரசுக்கு மட்டுமின்றி அமெரிக்கா மற்றும் நேட்டோ படைக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஏற்கனவே கடந்த மாதம் அமெரிக்க இராணுவத்தளம் அருகில் முஸ்லிம்களின் புனித குர்ஆன் எரிக்கப்பட்டு கிடந்த சம்பவம் ஆப்கானிஸ்தானியர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இந்த துப்பாக்கி சூடு நடந்திருப்பது அமெரிக்காவுக்கு மேலும் சங்கடத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கைக்கு பின்னடைவு ஏற்படுமோ? என கலக்கம் அடைந்துள்ளது. துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு முகாமுக்கே திரும்பிய அமெரிக்க வீரரை கைது செய்து விட்டனர். அவரிடம் அதிகாரிகள் விசாரணை நடத்துகிறார்கள்.

**தலிபான்கள் எச்சரிக்கை**

அமெரிக்காவுக்கு தலிபான் தீவிரவாதிகள் அமைப்பு கடும் எச்சரிக்கை ஒன்றை இணையத்தளம் மூலம் வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில், மனநலம் பாதிக்கப்பட்ட அமெரிக்க இராணுவ வீரரின் இந்த காட்டுமிராண்டித்தனமான கொலைவெறிக்கு நாங்கள் விரைவில் பதிலடி கொடுப்போம் என்று தெரிவித்துள்ளனர்.

மேலும் அதில் அப்பாவி குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்கள் என்றும் பார்க்காமல் நடந்த இந்த இரக்கமற்ற கொடுஞ்செயல் ஏற்கக்கூடியதல்ல. ஒவ்வொரு உயிருக்கும் நாங்கள் பழிக்குப் பழி வாங்கியே தீருவோம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.



**ஒபாமா வருத்தம்**

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தொலைபேசியில் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி கர்சாயுடன் தொடர்பு கொண்டு வருத்தம் தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் குறித்து துரிதமாக விசாரணை நடத்தி குற்றச்செயலில் ஈடுபட்டவர் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள கேட்டுக் கொண்டார். சம்பந்தப்பட்ட இராணுவ வீரர் மீது விசாரணையை துரிதமாக நடத்தும்படி உத்தரவிட்டார்.

**ஜேர்மனி பிரதமர் விரைவு**

இந்த சம்பவத்தை அடுத்து ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மார்கெல் அவசர பயணமாக ஆப்கானிஸ்தான் சென்றார். ஜேர்மனி படைகள் முகாமிட்டுள்ள பகுதிக்கு அவர் போய் வீரர்களை சந்தித்து பேசியுள்ளார்.

**அமெரிக்க தூதரகம் எச்சரிக்கை**

தலிபான்கள் எச்சரிக்கை விடுத்து இருப்பதாலும் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஏற்படலாம் என்பதாலும் காபூலில் இருக்கும் அமெரிக்க தூதரகம் மற்றும் நேட்டோ படை கொமாண்டர் சார்பில் ஒரு அவசர எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதில் ஆப்கானிஸ்தானில் இருக்கும் அமெரிக்கர்கள் மற்றும் வெளிநாட்டினர் வெளியே நடமாடுவதை தவிர்க்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (அ-2)




# சிரியாவில் தொடரும் கொடூரம்;

# 47பேர் கழுத்தறுத்து படுகொலை

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்துக்கு எதிராக கடந்த 11 மாதங்களாக போராட்டம் நடந்து வருகின்றது. இந்த நிலையில் அரபு நாடுகள் கூட்டமைப்பு மற்றும் ஐ.நா. சபையின் தூதரான கோபி அனான் டமாஸ்கஸ் சொன்றார்.

அரசுடனும் போராடும் மக்கள் பிரதிநிதிகளுடனும் சமரச பேச்சு நடத்தினார். ஆனால், அது தோல்வி அடைந்தது.

இதற்கிடையே போராட்டம் கடுமையாக நடைபெற்று வரும் ஹோம்ஸ் நகரில் இராணுவத்தின் தாக்குதல் மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் அங்குள்ள 47 பேர் மர்மமுறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள மற்றும் குழந்தைகள் கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் ஆங்காங்கே பிணமாக கிடந்தனர்.

இவர்களை தீவிரவாதிகள் கொன்றதாக சிரியா தகவல் தொடர்பு மந்திரி தெரிவித்துள்ளார். ஆனால், இராணுவத்தினர் கொலை செய்ததாக போராட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர். கொல்லப்பட்டவர்கள் இரத்தம் தோய்ந்த பிணங்களை போஸ்டராக அச்சடித்து ஆங்காங்கே ஒட்டியுள்ளனர். மேலும் ஒன்லையிலும் வீடியோவாக ஒளிபரப்பி வருகின்றனர். (அ-2)

# பனிப்பாறை சரிந்து வீழ்ந்தது;

# 45 பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானில் பனிப்பாறை ஒன்று சரிந்து விழுந்ததில் பெண்கள், குழந்தைகள் உட்பட 45 பேர் பலியாகினர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. ஆப்கானிஸ்தானின் கிழக்கு மாகாணங்களில் கடும் குளிரால் பனி உறைந்து காணப்படுகிறது.

தலைநகர் காபூலில் இருந்து 180 கி.மீ. தொலைவில் உள்ள நௌரிஸ்தான், பதக்ஷான் ஆகிய மாகாணங்களில் உறைபனி அதிகமாக உள்ளது.

நேற்று முன்தினம் கிழக்கு மாகாணமான தௌரிஸ்தானின் மடோல் மாவட்டத்தின் குரு மற்றும் கோஷன் கிராமப்பகுதியில் பனிப்பாறை சரிந்து விழுந்ததில் மலையடிவாரத்தின் கீழ் இருந்த குடியிருப்பு பகுதி மூழ்கியதில் 45 பேர் பலியானார்கள்.

இந்த விபத்தில் பலியானவர்கள், பெண்கள், குழந்தைகள் என்று மாகாணதுணை ஆளுநர் குவாஸி முகமது நபி தெரிவித்தார்.

கடந்த மாதம் தான் பதக் ஷான் மாகாணத்தில் ஏற்பட்ட பனிச்சரிவில் 40 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அமைதிப்பேச்சுவார்த்தைக்கு வரும்படி


# தலிபான்களுக்கு பாகிஸ்தான் அழைப்பு

அமைதி பேச்சுவார்த்தை நடத்த தலிபான் உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளுக்கு பாகிஸ்தான் அரசு அழைப்பு விடுத்துள்ளது. தலிபான் அல் கொய்தா, லக்ஷர் இ தொய்பா உள்ளிட்ட 40 தீவிரவாத அமைப்புகளுக்கு பாகிஸ்தானில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சமீப காலமாக பாகிஸ்தானில் அரசு அதிகாரிகள் பாதுகாப்பு படை வீரர்களை இலக்காகக் கொண்டு இந்த அமைப்புகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இவை உள்நாட்டு பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்குவதால் அமைதி பேச்சு நடத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தீவிரவாத செயல் கொள்கை தீவிர மதவாம் வன்முறையை கைவிட்டு வரும் அமைப்புகளுடன் பேசுவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். மேலும் தீவிரவாத தொடர்பை முற்றிலும் கைவிட்டு வந்தால் அவர்களுடன் ஒரு சில நாட்களில் பேச்சு நடத்துவோம் என்று பாகிஸ்தானின் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் நேற்று முன்தினம் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இதற்கிடையில் பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்புகள் புதிய பெயர்களில் தொடர்ந்து தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (அ-2)




கடந்த ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இடம்பெற்ற தேர்தலின் போது மக்களுக்கென்று பதிவு செய்யப்பட்டிருந்த தொலைபேசி அழைப்புகள், அவர்கள் வாக்களிக்க வேண்டிய வாக்குச்சாவடிகளின் இருப்பிடத்தை சரியாக தெரிவிக்காமல் மிகவும் அலைக்கழிக்கப்பட்டனர். பொதுமக்கள், இந்த ஊழல் குறித்து மத்திய அரசு விசாரணை நடத்த வேண்டுமென்று தெருவில் இறங்கிப் போராடினர். இந்தப் போராட்டம் அனைத்து மாநிலங்களிலும் நடைபெற்றது. இம் மக்கள் மறுதேர்தல் கேட்டுப் போராடினர். குற்றவாளிகளைச் சிறையில் தள்ள வேண்டும், பிரதமர் தனது பதவியிலிருந்து விலக வேண்டும், இது குடியரசு அல்ல மோசடி அரசு என்ற வாசகம் எழுதிய அட்டைகளை ஏந்திப்பிடித்தவாறு கோஷமிட்டதைப் படத்தில் காணலாம்.

ஆசிய கிண்ண கிரிக்கெட்

# 2-வது போட்டியில் இலங்கையை வீழ்த்தி 50 ஓட்டங்களால் இந்தியா அபார வெற்றி


micromax asia cup 2012



ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் 50 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றி பெற்றது.

பங்களாதேஷில் நடைபெற்று வரும் ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது லீக் ஆட்டத்தில் நேற்று இந்திய அணி இலங்கையுடன் மோதியது.

இலங்கை நேரப்படி மதியம் 1.30 மணிக்கு தொடங்கிய இந்த




ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித்தலைவர் தோனி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

அதனடிப்படையில் சச்சின் டெண்டுல்கரும் கௌதம் காம்பீரும் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களம் இறங்கினர். தடுமாற்றத்துடன் ஆடிய சச்சின் 19 பந்துகளில் 6 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்து மீண்டும் 100வது சதத்தை பூர்த்தி செய்யாமல் ஏமாற்றத்தை அளித்தார்.

அடுத்து களம் இறங்கிய விராட் ஹோலி, கௌதம் காம்பீருடன் ஜோடி சேர்ந்து சிறப்பாக விளையாடி இருவருமே அடுத்தடுத்து சதம் அடித்தனர். இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை வெகுவாக உயர்ந்தது. சிறப்பாக விளையாடிய காம்பீர் 100 ஓட்டங்களிலும் ஹோலி 108 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். காம்பீர்-ஹோலி ஜோடி 2வது விக்கெட்டுக்கு 205 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் 4வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த அணித்தலைவர் தோனியும் ரெய்னாவும் கடைசி கட்டத்தில் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தனர்.

இறுதியில் 50 ஓவர்கள் முடிவில், இந்திய அணி 3 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 304 ஓட்டங்களை குவித்தது.



தோனி 26 பந்துகளில் 46 ஓட்டங்களும் ரெய்னா 17 பந்துகளில் 30 ஓட்டங்களும் விளாசி கடைசி வரை களத்தில்இருந்தனர்.

இதனால் இலங்கை அணி வெற்றி பெற 305 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

பின்னர் 305 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இலங்கை அணியின் தொடக்க ஆட்டக்காரர் டில்ஷான் 7 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஆனால் மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான அணித்தலைவர் ஜெயவர்த்தனவும் சங்கக்காரவும் சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர்.



அதிரடியாக ஓட்டங்கள் குவித்த ஜெயவர்த்தன59 பந்துகளில் 78 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். சிறிது நேரத்தில் சங்கக்காரவும் 65 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த வீரர்கள் யாரும் நிலைத்து நின்று விளையாடவில்லை.

இறுதியில் இலங்கை அணி 45.1ஓவர்களில் 254 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதனால் இந்தியா 50 ஓட்ட வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்திய தரப்பில் சிறப்பாக பந்து வீசிய இர்பான் பதான் 4 விக்கெட்டுக்களையும், அஸ்வின், வினய்குமார் தலா 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். 108 ஓட்டங்கள் குவித்த இந்திய வீரர் விராட் ஹோலி ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

ஆசிய கோப்பையின் அடுத்த ஆட்டத்தில் நாளை வியாழக் கிழமை இலங்கை, பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன. இந்திய அணி தனது அடுத்த லீக் ஆட்டத்தில் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை பங்களாதேஷை எதிர் கொள்கிறது.

## கிரிக்கெட் சூதாட்டத்தில் நடிகை தொடர்பு

## இந்தியா - பாக். அரையிறுதியில் அதிர்ச்சி

### பாலிவுட் நடிகை மறுப்பு

கிரிக்கெட் சூதாட்ட சர்ச்சை மீண்டும் வெடித்துள்ளது. இம்முறை பாலிவுட் நடிகை ஒருவருக்கு தொடர்பு இருப்பது அம்பலமாகியுள்ளது.

உலக கோப்பை அரையிறுதியில் இந்தியா, பாகிஸ்தான் மோதிய போட்டியை வைத்து பெருமளவில் சூதாட்டம் நடந்ததாக பிரிட்டன் பத்திரிகை ஒன்று அதிர்ச்சி செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக ஐ.சி.சி. விசாரணை நடத்த உள்ளது.


பெரும்பாலான கிரிக்கெட் போட்டிகளின் முடிவை சூதாட்ட முகவர்கள் நிர்ணயிக்கின்றனர். இவர்கள் சில முன்னணி வீரர்களை தங்கள் வலைக்குள் வைத்துக் கொண்டு, சூதாட்டத்தில் ஈடுபடுகின்றனர். கடந்த 2010இல் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வீரர்கள் சல்மான் பட், முகமட் ஆசிப், முகமம் அமீர் ஆகியோர் ஸ்பாட்-பிக்சிங் எனப்படும் சூதாட்டத்தில் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டு, ஜெயில் தண்டனை பெற்றனர். இதன் தொடர்ச்சியாக கடந்த வாரம் இங்கிலாந்தின் எசக்ஸ் கவன்டி அணியை சேர்ந்த மெர்வின் வெஸ்ட் பீல்டு என்ற பந்துவீச்சாளர், சூதாட்ட புள்ளிகளிடம் இருந்து பணம் பெற்றது கண்டுபிடிக்கப்பட்டது. இவருக்கும் சிறைத் தண்டனை கிடைத்தது.

**ரகசிய ஆய்வு**

தற்போது, சூதாட்ட பிரச்சினை குறித்து பிரிட்டன் பத்திரிகை சண்டே டைம்ஸ் ரகசிய புலனாய்வு செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது. இதில் துடுப்பாட்ட வீரர் வேண்டுமென்றே மந்தமாக ஆட, அவருக்கு ரூ. 90 இலட்சம், பந்துவீச்சாளர்கள் ரன்களை வாரி வழங்க, ரூ. 1கோடி, போட்டியின் முடிவை உறுதி செய்யும் வீரர் அல்லது நிர்வாகிக்கு ரூ. 14 கோடிவரை சூதாட்ட புக்கிகள் கொடுப்பது தெரியவந்துள்ளது.

**உலக கோப்பை**

கடந்த ஆண்டு மொகாலியில் நடந்த உலக கோப்பை அரையிறுதியில் இந்திய அணி, பாகிஸ்தானை வென்றது. இப்போட்டியிலும் பெருமளவு சூதாட்டம் நடந்துள்ளதாம். சூதாட்டக்காரர்கள் பல்வேறு நாடுகளை சேர்ந்த வீரர்களை தங்களது



வலைக்குள் வைத்துள்ளனர். இவர்களை கவர, பாலிவுட் நடிகைஒருவரை பயன் படுத்திய விடயத்தையும் சண்டே டைம்ஸ் அம்பலப்படுத்தியுள்ளது.

**நடிகை மறுப்பு**

இங்கிலாந்தின்சண்டேடைம்ஸில் வெளியான செய்தியின் போது பிரசுரிக்கப்பட்டிருந்த புகைப்படத்திற்கு சொந்தக்காரரான நிபுர் மேக்தா, தனக்கும் இந்தச் சூதாட்டங்களுக்குமிடையில் எவ்வித தொடர்புகளும் கிடையாது எனத் தெரிவித்துள்ளார்.

விளம்பரம் தேடுவதற்காக எனது படத்தை தவறாகப் பயன் படுத்தியுள்ளனர் என்றும் தனக்கு சூதாட்டத்தில் எவ்வித தொடர்பும் இல்லை எனவும் கூறியுள்ளார். எனக்கு சூதாட்டத்தில் தொடர்பு இருந்தால் ஆதாரத்துடன் வெளியிட்டிருக்க வேண்டும். ஏதோ ஒரு நடிகையின் உருவ மாதிரி என்ற அடிப்படையில் வெளியிட்டிருந்தாலும் கூட எனது அனுமதியைப் பெறவில்லை. இதனால் இப்பிரச்சினையில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் போவதாக மெஹ்தா தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க இராஜதந்திரி...

நாடுகளின் விவகாரங்களை கையாளுவதற்கான பணியகத்தின் பணிப்பாளரான அட்டுல் கெஷாப் கடமையாற்றிவருகிறார்.

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் அமெரிக்கா சார்பில் பல முக்கியமான விடயங்களை இவர் வலியுறுத்தியிருந்தார்.

இந் நிலையில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள அட்டுல் கெஷாப் கொழும்பில் உயர்மட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரையும் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஜெனிவா அமர்வில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வரும் ஒரு சூழ்நிலையில் அட்டுல் கெஷாப்பின் இலங்கைக்கான இவ் விஜயம் கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரின் பல அமர்வுகளில் கலந்து கொண்ட அட்டுல் கெஷாப் இலங்கைக்கு எதிரான பிரேரணை தொடர்பிலான முக்கிய விடயங்கள் குறித்து கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடர் ஆரம்பமாகுவதற்கு முன்னர் அமெரிக்க இராஜதந்திரிகளான ரொபேர்ட் ஓ பிளேக் மற்றும் மரியா ஒட்டேரோ ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தமை தெரிந்ததே. (ந-8,11)

# இலங்கைக்கு எதிரான தீர்மானம்...

இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமை கவுன்சிலில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று இந்திய நாடாளுமன்றத்தில் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று வலியுறுத்தினர்.

இந்த விவகாரம் தொடர்பாக விவாதிக்க வேண்டும் என்று தி.மு.க., அ.தி.மு.க., இடதுசாரி உறுப்பினர்கள் ஒருமித்த குரல் எழுப்பினர்.

மக்களவையில் கடும்அமளிகிடையே பேசிய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும் பிரதமர் கடிதம் எழுதியுள்ளார்.

எந்தவொரு நாட்டுக்கு எதிராக தீர்மானம் கொண்டுவரப்பட்டாலும் அதை நாம் ஆதரிக்க கூடாது. எனினும் மனிதவுரிமைக்குழுவுடன் ஆலோசித்த பிறகு இதுகுறித்து நாம் விவாதித்து முடிபு எடுக்கலாம் என்றார் பிரணாப் முகர்ஜி.

இலங்கை அரசுக்கு எதிராக ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்தின் மீதான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து பிரதமர் மன்மோகன் சிங் விளக்கம் அளிக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இந்த விவகாரத்தில் பிரதமர் தனது மௌனத்தை களைய வேண்டும் என்று அவர்கள் குரல் எழுப்பினர். மாநிலங்கள் அவை நேற்றுக்காலை ஆரம்பமாகியதுடனே இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் தொடர்பான பிரச்சினையை தி.மு.க. எம்பிக்கள் முன்வைத்தனர்.

இலங்கை அரசுக்கு எதிராக இந்தியா வாக்களிக்கும் என்று உறுதி மொழியை அரசு அளித்திட வேண்டும். தயவுசெய்து உங்கள் மௌனத்தை களையுங்கள் என்று தி.மு.க. உறுப்பினர்கள் பிரதமர் மன்மோகன்சிங்கை கேட்டுக்கொண்டனர்.

அப்போது பேசிய இடதுசாரிகளின் மூத்த தலைவர் டி.ராஜா, இலங்கையில் நடந்த அனைத்து விசயங்களும் இந்தியாவுக்குத் தெரியும். இந்தவிவகாரத்தில் அரசின் நிலைப்பாடு என்ன என்பதை இப்போதே தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டார். இந்தவிவகாரத்தில் இரண்டு முறை தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் அனுப்பியும் அதற்கு பதிலளிக்காமல் மன்மோகன் சிங் மௌனம் காத்துவருவதை குறிப்பிட்ட அ.தி.முகவின் மைத்ரேயன், இனியும் மௌனம் காப்பது சரியல்ல. இந்தியா தனது நிலைப்பாட்டை சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தமிழக உறுப்பினர்களின் கேள்விகளையும் கருத்துக்களையும் நிதானமாக கேட்டுக் கொண்டிருந்த பிரதமர் மன்மோகன் சிங் அதுபற்றி பதில் எதுவும் அளிக்காமல் அமர்ந்திருந்தார்.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று தி.மு.க., அ.தி.மு.க., இடதுசாரி எம்.பிக்கள். ஆவேசமாக தங்கள் கருத்துக்களை முன்வைத்துக் கொண்டிருந்தபோது, தமிழக காங்கிரஸ் தலைவர்களும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஞானதேசிகன் எழுந்து விளக்கம் ஒன்றை அளித்தார்.

நானும் ஒரு தமிழன். உங்களுக்கு இருக்கும் அதே உணர்வு எனக்கும் உண்டு. இந்தப் பிரச்சினையை உணர்வு பூர்வமாக மட்டுமே பார்க்க முடியாது. இது இரு நாடுகளின் உறவு சம்பந்தமானது. இலங்கையில் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களுக்கு இந்தியாதான் பொருளாதார ரீதியிலும் உதவிகள் செய்து வருகின்றது.

இதை எவராலும் மறுக்க முடியாது. இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்காவோ ரஷ்யாவோ தீர்மானம் கொண்டு வரலாம். அவர்கள் ஒன்றும் தமிழர்களுக்காக உதவிகளை செய்வதில்லை. நாம் தான் செய்துகொண்டிருக்கிறோம். இந்தியா எடுக்கும் முடிபால் இலங்கையுடன் தூதரக உறவில் பாதிப்பு ஏற்பட்டுவிட்டால் அங்கிருக்கும் எம் சகோதரர்களுக்கு உதவுவது யார்? எந்தநாடு முன்வரும். இதை எல்லாம் கருத்தில் கொள்ள வேண்டும் இந்த முடிபை பிரதமர்தான் ஆலோசித்து எடுக்க வேண்டும் என்றார் ஞானதேசிகன்.

ஞானதேசிகன் இப்படிப் பேசிக்கொண்டிருந்தபோது அ.தி.மு.க., தி.மு.க., இடதுசாரி என தமிழக எம்.பிக்கள் அனைவரும் கடும் கோபத்துடன் அவரைச்சாடினர். இதனால் அவையில் கடும் அமளி நிலவியது. இதைத் தொடர்ந்து ஞானதேசிகன் தனது பேச்சை பாதியிலேயே முடித்துக்கொண்டு உட்கார்ந்து விட்டார்.

பின்னர் விளக்கமளித்த நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பவன்குமார் பன்சால், அது என்ன தீர்மானம் என்பது தெரியாது. அதுபற்றி வெளியுறவுத்துறை அமைச்சகத்துடன் பேசிவிட்டு ஓர் அறிக்கை வெளியிடப்படும் என்றார். இதையடுத்து தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து இப்பிரச்சினையை எழுப்ப கடும் அமளிகாரணமாக அவையை முழுமையாக ஒத்திவைப்பதாக மாநிலங்கள் அவைத் தலைவர் அன்சாரி அறிவித்தார். (ந-8,11)

# பிரபாகரன் இருப்பிடத்தை...

செய்து இலங்கை படையினர் பிரபாகரன் இருப்பிடத்தை தெரிந்து கொண்டுள்ளதாக தற்போது புதிய தகவல் கிடைத்துள்ளது. இதனை மெக்காரே உறுதிப் படுத்தியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் கொடுத்த வாக்கு மூலம் எங்களிடம் மிகப்பெரிய ஆதாரமாக உள்ளது. பாலச்சந்திரனை படுகொலை செய்வதற்கு முன்பு அவரிடம் விசாரணை நடத்தியுள்ளது இலங்கை இராணுவம், புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் இருப்பிடம் குறித்து மகனிடம் விசாரணை நடத்தி தகவல்களை பெற்றுக்கொண்ட பின்னரே அவரைக் கொன்றனர்.

5 பாதுகாவலருடன் பாலச்சந்திரனை, இலங்கை இராணுவத்திடம் சரணடையவே பிரபாகரன் அனுப்பியுள்ளார். ஆனால் பிரபாகரனின் மகனைப் பிடித்துக்கொண்டு முதலில் 5 பாதுகாவலரையும் கொன்றுவிட்டனர். பிரபாகரனின் இருப்பிடம் குறித்து தகவல்களைப் பெற்றுக்கொண்டு பாலச்சந்திரனையும் படுகொலை செய்துள்ளனர். இது மிகப் பெரிய யுத்த விதி மீறலாகும்.

பாலச்சந்திரனின் உடலில் ஐந்து தோட்டாக்கள், பாய்ந்த வடுக்கள் உள்ளன. ஆனால் சித்திரவதை செய்யப்பட்டது தொடர்பான வெளிப்படையான அடையாளம் இல்லை. இருப்பினும் அந்தசிறுவன் இருந்தசூழ்நிலையை பாருங்கள். 5 பாதுகாவலர்களை அந்த சிறுவனின் கண்முன்பாக கொடூரமாக கொன்றுள்ளனர்.

பிரபாகரன் குறித்து விசாரித்துள்ளனர். நிச்சயம் சித்திரவதை நடந்திருக்காதென்று கூறுவதை நம்பமுடியவில்லை. அந்த சிறுவனின் கண்களைக்கட்டாமல், கையைக் கட்டாமல் நேரடியாக சுட்டுவிட்டனர். அந்த சிறுவனுக்கு முன்பு துப்பாக்கியை நீட்டியபடியே ஒருவர் இருந்துள்ளார் இதுவே மிகப்பெரிய சித்திரவதைதான் எனத் தெரிவித்துள்ளார் மெக்காரே. (ந-8,11)

# மேரி கொல்...

தினருக்கும், அவர் மீது அன்பு கொண்டோருக்கும், தமிழ் மக்களின் ஆழ்ந்த அனுதாபங்களையும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

ஈழத் தமிழ் மக்களுக்கும் அம்மையார் மேரி கொல்வின் அவர்களுக்கும் இடையில் இருந்து வந்துள்ள உன்னத உறவு குறித்தும், இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசினால் நிகழ்த்தப்பட்ட கொலைகளை உலகறியச் செய்த, அம்மையாரின் உன்னத ஊடகப் பணிகள் குறித்தும், சர்வதேச ஊடகங்களோடு அவர் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

தமிழர்கள் மீது இலங்கை அரசாங்கம் நடத்திய போரின் சாட்சியாக மேரி கொல்வின் அவர்கள் விளங்கியவர் என்பதனையும் உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, இந்நிகழ்வில் அமெரிக்க வாழ் தமிழர்கள் பலரும் கலந்து கொண்டு அம்மையாருக்கு தங்களது மரியாதையை செலுத்தியிருந்தனர்.

துணிச்சல் மிகுந்த ஊடக வியலாளர்களின் முடிசூடா ராணி என புலம்பெயர் தமிழர்கள் மேரி கொல்வினுக்குப் புகழாரம் சூட்டியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஊடகவியலாளர் மேரி கொல்வின் அம்மையாரின் இறுதி நிகழ்வில் பெருந்திரளான ஊடகத்துறையினரும், பொது மக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)


வன்னி பிரதேச
செய்தியாளர்களுக்கான
நேர்முகப்பரீட்சை

இடம் : முல்லை ரெஸ்ரூரன்ட்
இல. 09, டிப்போச் சந்தி,
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
காலம் : 16.03.2012 வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 10 மணி

செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களும் விண்ணப்பிக்க விரும்புபவர்களும் இந் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளலாம்.
நேர்முகத் தேர்வுக்கு வருவோர் தமது தே.அ.அ. உள்ளிட்ட சான்றிதழ்களின் போட்டோ பிரதிகளை தனியான கோவையில் எடுத்து வரவும்.
மனித வள முகாமையாளர்
வலம்புரி
தொ.பே.இல.: 0215671532

வாகனம்
விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 16 1/2 அடி நீளமுள்ள கூலர் வகை பிறிசர் றக் வாகனம் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
0773535561
(C-6081)

உங்கள் வெளிநாட்டுக் கல்விக் கனவை நனவாக்க!
மலேசியாவில் ஆரம்பித்து அடுத்த வருடமே
விரும்பிய நாட்டுக்குச் செல்லுங்கள்!
UK, Australia, New Zealand, USA, Canada
பட்டக்கல்வியை வழங்கும்

மலேசிய
உயர்கல்விக் கண்காட்சி
(2nd Edition)
with SPOT ADMISSION
SkillsMalaysia
INTI · UCSI University · Curtin University of Technology · Sunway University · SEGi University College · KLIUC · Limkokwing University of Creative Technology
தூதரக நேர்முகத் தேர்வு இல்லை! வங்கிப்பணம் காட்டத் தேவையில்லை!
யாழ்ப்பாணத்திலேயே விசா அனுமதி!
A/L, O/L முடித்தவர்களும், O/L முடிக்காத 18-45 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கும்
தொழில்வாய்ப்புடன் கூடிய பட்டக்கல்வி வாய்ப்புக்கள்
மார்ச் 15 வியாழன்
யாழ் ஞானம்ஸ் ஹொட்டேல்
காலை 9.00 மாலை 5.00
அனுமதி இலவசம்!
மார்ச் 14, புதன் 9.00 மணிக்கு
யாழ் வீரசிங்கம் மண்டபத்தில்
கனவு மெய்ப்படவேண்டும்
சான்றிதழுடன் கூடிய
கல்வி - தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு
பெற்றோரே! உங்கள் பிள்ளைகளுடன் நேரில் வந்து அவர்களது பட்டக்கல்விக் கனவை நனவாக்குங்கள்.
ஏற்பாடு:
கல்வி வழிகாட்டல் பிரிவு
சிகரம் ஊடக இல்லம்
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
T.P.: 021 300 80 60 Email: SikaramMedia@gmail.com
In Association with
Winning Magnitude
Be a winner : Study • Job • Business
Supported and Endorsed by:
Ministry of Higher Education, Malaysia
High Commission of Malaysia
ஊடக அனுசரணை:
சகரம்

72 மணி நேரத்தில் வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
10 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் UK 625 /= Germany 710/= France 765/=
மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது.
கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம்.
சகல நாடுகளிற்குமான விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.
குறிப்பு :- 25Kg - 100 Kg வரையான பொதிகளுக்கு 450/= மட்டுமே
Arrul Global Express
International Courier & Cargo Service
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ் T.P : 021 222 6113


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.